# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20

சுடர் 32 கதிர் 291 ஆவணி 28ஆம் நாள் புதன்கிழமை 13 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

பக்கங்கள்: 32


## வித்தியா படுகொலை வழக்கில்

# 4 பேர் குற்றவாளிகள்; மூவர் உடந்தை இருவருக்கு எதிராக சாட்சியமில்லை

### தீர்ப்பாயத்திடம் அரச தரப்பு நேற்று எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், செப். 13

"புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் 2ஆம் எதிரி ஜெயக்குமார், 3ஆம் எதிரி தவக்குமார், 5ஆம் எதிரி சந்திரகாசன் மற்றும் 6ஆம் எதிரி துஷாந்த் ஆகியோர் மீதான வன்புணர்வு, கொலைக் குற்றச்சாட்டுக்கள் சாட்சியங்களின் அடிப்படையில் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளன. சுவிஸ் குமார், அவரது சகோதரர் சசிதரன் மற்றும் கோகிலன் ஆகியோர் மீதான குற்றச் சம்பவத்துக்கு சதித்திட்டம் தீட்டியமை, அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களும் சாட்சிகளால் நிரூபிக்கப்பட்டுள்ளன. எனினும் முதலாம் மற்றும் ஏழாம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கமுடியவில்லை" இந்த வழக்கை அரச தரப்பில் நெறிப்படுத்திய பிரதி மன்றாடியார் அதிபதி பி.குமாரரட்ணம் இவ்வாறு தீர்ப்பாயத்திடம் ஆணித்தரமான எடுத்துரைத்தார். >> 28

## மோ. சைக்கிளில் பயணித்தவர் சாலையில் சரிந்து உயிரிழந்தார்

### ஊர்காவற்றுறையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.13

மோட்டார் சைக்கிளில் சாலையில் பயணித்தவர் சரிந்து விழுந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் ஊர்காவற்றுறையில் நடந்துள்ளது. ஊர்காவற்றுறைச் சேர்ந்த முத்தையா கனகசபை (வயது -69) என்பவரே உயிரிழந்தார்.

வேலணைப் பகுதிக்கு மீன்பிடிப்பதற்காகச் சென்று கொண்டிருந்த போதே அவர் உயிரிழந்தார். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. அவரது உடல் >> 25



ஹூசைனின் பாய்ச்சல் உவருக்கு உறைச்சிட்டுதோ...

# காணாமற்போனோர் அலுவலகத்தின் பணிகள் செப். இறுதிக்குள் ஆரம்பம்

### அவசர அவசரமாக மைத்திரி ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 13

காணாமற்போனோர் அலுவலகம் இந்த மாத இறுதிக்குள் இயங்க ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை நிறுவுவதற்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சராக பதவி வகித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் கையெழுத்திட்டுள்ளார். வர்த்தமானி அறிவித்தல் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வெளியாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றவில்லை என மனித உரிமைகள் ஆணையாளர் நேற்றுமுன்தினம் குற்றஞ்சாட்டியிருந்தார். இந்த நிலையில் காணாமற்போனோர் அலுவலகத்தின் பணிகளை ஆரம்பிக்க அரச தலைவர் நேற்று ஒழுங்குகளை முன்னெடுத்தார்.

காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதாக இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு வாக்குறுதி வழங்கியிருந்தது. 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் அந்த அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட் >> 26

## ஹூசைனின் குற்றச்சாட்டுக்களை கொழும்பு அடியோடு நிராகரிப்பு

### ஐ.நா. வாக்குறுதிகளை நிறைவேற்ற போதிய காலம் இருப்பதாகவும் தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசைன் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுக்களை திட்டவட்டமாக நிராகரித்துள்ள இலங்கை அரசு, அவை தவறானவை, அவதூறானவை எனவும் சாடியுள்ளது. வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தமக்குப் போதிய அளவு காலம் இருப்பதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 36ஆவது கூட்டத் தொடரின் >> 25

## ஐ.நா. சிறப்பு நிபுணர் பப்லோ கொழும்புக்கு மீள வருகிறார்



கொழும்பு, செப். 13

ஐக்கிய நாடுகள் சபையின் உண்மை, நீதி, இழப்பீடு வழங்கலை உறுதிப்படுத்துவதற்கான சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கொரீப் மீண்டும், அடுத்த மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். >> 27

## ஒற்றையாட்சியின் கீழ் வரும் அதிகாரப் பகிர்வு நிரந்தமற்றது

### வடக்கு முதல்வர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

"ஒற்றையாட்சியின் கீழ் மாகாண சபைகளுக்கு எத்தகைய அதிகாரங்களைப் பகிர்ந்தாலும் அவற்றை மீளப்பெறக்கூடிய அபாயமிருக்கின்றது. கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வே இறுதியானதாகவும் உறுதியானதாகவும் அமையும்"

இவ்வாறு வடக்கு மாகாணசபை முதல >> 26

## 500 பி.எச்.ஐகள் அணிதிரண்டு குடாநாட்டில் இன்று எதிர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாண மாநகர சபையில் பணி >> 26

## கூட்டமைப்பு வரவேற்பு

### அரசு இனியாவது திருந்தவேண்டும் என வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 13

இலங்கை அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் உரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனதார வரவேற்றுள்ளது.

இனியும் விதண்டாவாதக் கதைகளைப் பேசிக் கொண்டிருக்காமல், ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசுத்தலைமை நடவடிக்கை எடுக்கவேண்டும் >> 26

## சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறை

### வவுனியா மேல் நீதிமன்று தீர்ப்பு

வவுனியா, செப். 13

12 வயதுச் சிறுமியை வன்புணர்வருக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து வவுனியா மேல் >> 26

## தொண்டர் ஆசிரியர்களுக்கு ஒக்ரோபரில் நிரந்தர நியமனம்

### கொழும்பு கல்வி அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 13

வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியல் >> 25

## வீட்டுக்குள் புகுந்து மூவருக்கு வாள்வெட்டு

### சாவகச்சேரியில் நேற்றிரவு பயங்கரம்

>> 27






## சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு நோக்கி வாகன ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப். 13
மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பு நோக்கிய வாகன ஊர்வலங்கள் மாவட்ட ரீதியாக நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, பொலநறுவை மாவட்டங்களில் இருந்து ஊர்வலங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஊர்வலங்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பைச் சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட வாகன ஊர்வலம் நேற்று மதியம் கிளிநொச்சியைச் சென்றடைந்தது. அங்கு கிளிநொச்சிப் பொதுச்சந்தை முன்பாக மக்களைத் தெளிவூட்டும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் அணியாக யாழ்ப்பாணத்தில் இருந்து வாகன ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

"பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள், பொதுமக்கள், அனைத்து தொழிற் சங்கங்கள், அரசியல் சிவில் அமைப்புக்கள் அனைவராலும் சைட்டத்துக்கு எதிராக குரல் மேலோங்கி உள்ளது. அவர்கள் எல்லோரும் சைட்டத்தை மூடுமாறு கோரியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் வறுமையில் முதலாம் இடத்தில் உள்ளது. கிளிநொச்சி மாவட்டம் வறுமையில் 3 ஆம் இடத்தில் உள்ளது.

இந்தநிலையில் இங்கிருந்து 120 கோடி ரூபா கொடுத்து மருத்துவக் கல்வியைப் பெறமுடியாது" என்று மக்கள் விடுதலை முன்னணி யின் முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர் சந்திரசேகர் தெரிவித்தார்.

வாகன ஊர்வலத்தில் மருத்துவ பீட மாணவர்கள், மருத்துவர்கள், பொது அமைப்புக்கள் இணைந்துள்ளன.

(ஜ-10, 35, 6)

# திருத்திய 20ஐயும் ஏற்றுக்கொள்ள முடியாது

## ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 13
திருத்தங்கள் செய்யப்பட்ட 20 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கமுடியாது.

20 ஆவது திருத்தச் சட்ட வரைவின் விவரத்தைத் தெரியாது கூட்டமைப்பு ஆதரவளிக்கிறது.

என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

20 ஆவது திருத்தச் சட்ட வரைவை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளார். இந்த விடயம் உயர் நீதிமன்றில் உள்ளது. அதில் சில திருத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு ஆண்டுகால இடைவெளிக்கு முன்னர் மாகாண சபை கலைக்கப்பட்டால் மீண்டும் இடைத் தேர்தல் எனவும், 18 மாத கால இடைவெளிக்குள் சபை கலைக்கப்பட்டால் கொழும்பின் ஆட்சி எனவும் கூறப்பட்டுள்ளது. இந்தச் சட்ட வரைவை ஈ.பி.ஆர்.எல்.எவ். வன்மையாக எதிர்க்கின்றது.

அதேநேரம் குறுகிய 2 ஆண்டுகாலங்களுக்கு மட்டும் இடைத்தேர்தல்கள் இடம் பெற்றால் அதில் போட்டியிட எவர் முன்வருவார்கள் . அதிலும் குறிப்பாக சிறு கட்சிகள் முன்வருவார்களா? இவ்வாறான இடைத்தேர்தல்கள் நாட்டின் பெரிய கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி , சுதந்திரக் கட்சி போன்றவற்றுக்குப் பொருந்தலாம். சிறு கட்சிகளுக்குப்பொருத்தமற்றது. ஏனெனில் இரு ஆண்டுகளுக்காக பல லட்சங்களைச் செலவு செய்ய எவரும் முன்வரமாட்டார்கள். எனவே இவை பெரும்பான்மைக் கட்சிகளை வளர்ப்பதாகவே அமையும்.

அதேநேரம் கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்பு ஆதரவளித்தமை தொடர்பிலும் உள்ளக ரீதியில் ஆராயப்படவில்லை. எனவே அதிகாரப் பகிர்வு ஒன்றைக் கோரும் இந்தக் காலத்தில் இது ஓர் தேவையற்ற விடயம். அதிகாரப்பகிர்வு தொடர்பில் வழி நடத்தல் குழுவில் கலந்து கொண்ட சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் குழுவில் எந்த தகவல்களையும் தெரிவிக்கவில்லை. தற்போது இருவரும் ஒப்பமிட்டு வழங்கியுள்ள பின் இணைப்பில் வடக்கு கிழக்கு இணைப்பு , சமஷ்டி அடிப்படையிலான தீர்வு , மதச் சார்பற்ற நாடு உள்ளிட்டவை கோருகின்றனர். இந்த 20 ஆம் திருத்தம் உட்பட கூட்டமைப்பில் தற்போது வரையில் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் வுடன் எந்தக் கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. எனவே எமது கருத்தும் ஏற்கப்படாதுவிடின் நாம் அதனை எதிர்ப்போம் - என்றார்.

சுரேஸ் பிரேமச்சந்திரனின் குற்றம் சாட்டுத் தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அவர், "வழிநடத்தல் கூட்டங்கள் இடம்பெறும் அனைத்துச் சந்தர்ப்பத்திலும் ஒலிப்பதிவு செய்யப்படுவது வழமை.

இந்தக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பணி நிறைவுற்றதும் அவை அனைத்து ஒலி வடிவமும் முழுமையாக வெளியிட இணக்கம் காணப்பட்டுள்ளது.

அப்போது இதற்கு விடை கிடைக்கும்" என்று தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் புதிய திருத்தம் இன்றி ஊகத்தின் அடிப்படையிலான வாக்குறுதியளித்தே, கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றீர்கள் என கூறப்படுவது தொடர்பாக கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரைராஜசிங்கத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, "புதிய திருத்தத்தின் பிரதியைப் பெற்று அதனை வாசித்து அறிந்த தன் அடிப்படையிலேயே அந்த முடிவு எட்டப்பட்டது " என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவித்தார் .

(ஜ-10, 101)

## சப்ரகமுவவிலும் ‘20’ க்கு ஆதரவு

கொழும்பு,செப்.13
கொழும்பு அரசால் முன்மொழியப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்ட வரைபுக்கு சப்ரகமுவ மாகாண சபையும் ஆதரவு வழங்கியுள்ளது.

சப்ரகமுவ மாகாண சபையில் நேற்று இது தொடர்பாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 29 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். அதேவேளை, 8 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

மகிந்த அணியான பொது எதிரணியின் உறுப்பினர்களே சட்ட வரைவுக்கு எதிராக வாக்களித்தனர்.

கிழக்கு மற்றும் மேல் மாகாண சபைகளில் 20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு நேற்று முன்தினம் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் 20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வாக்களித்திருந்தது.

அதன்படி நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக எதிர்வரும் 21ஆம் திகதி திருத்தப்பட்ட 20ஆவது திருத்தச் சட்ட வரைவு மன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-2)

## மருத்துவர்களின் சுழற்சி முறையிலான பணிப்புறக்கணிப்பு நேற்று ஆரம்பம்

### நோயாளர்கள் பெரும் அவதி





யாழ்ப்பாணம், செப். 13
மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுழற்சி முறையிலான பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மருத்துவமனைகளுக்குச் சென்ற நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சைட்டம் தொடர்பிலான சர்ச்சைகளுக்கு, அரச தலைவரால் நியமிக்கப்பட்ட குழுவிடமிருந்தும் தீர்வுகள் கிடைக்காததால் நேற்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை, நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் சேவைப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, பொலநறுவை, நுவரெலியா, அம்பாறை மாவட்டங்களில் மருத்துவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

மாவட்ட பொது மருத்துவமனைகள் உட்பட ஆதார மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெறுவதற்காக நோயாளர்கள், காத்திருந்தனர்.

இன்று வவுனியா, மாத்தளை, அனுராதபுரம், பதுளை, மொனராகல, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும், நாளை குருநாகல், கண்டி, இரத்தினபுரி, காலி ஆகிய மாவட்டங்களிலும், நாளை மறுதினம் புத்தளம், கம்பகா, கேகாலை, கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ-10, 56, 9)

## கைதிகளின் நலனுக்காக நிதி சேகரிக்கும் கொடி வாரத்தை ஆரம்பித்தார் மைத்திரி

கொழும்பு, செப். 13
தேசிய சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு, சிறைக் கைதிகளின் நலன்புரிச் செயற்பாடுகளுக்கு நிதி சேகரிக்கும் கொடி வாரத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று ஆரம்பித்து வைத்தார் என்று அரச தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.



சிறைக் கைதிகளுக்கான மருத்துவ வசதிகள், மூக்குக் கண்ணாடிகள் வழங்குதல், சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளும், சிறைக் கைதிகளின் குடும்பத்தினருக்கான பல்வேறு சமூக நலச் செயற்பாடுகள் சேகரிக்கப்படும் நிதியூடாக மேற்கொள்ளப்படவிருக்கின்றன. சிறைக் கைதிகளின் நலன்புரிச் சங்கத்தின் கருத்திட்ட ஒருங்கிணைப்புச் 'செயலாளர் ஆர்.ஏ.டீ. சிறிசேன வால், முதலாவது கொடி அரச தலைவருக்கு அணிவிக்கப்பட்டது. என்று ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது.

(ஐ-10)

## சிறுமியை துர்நடத்தைக்கு உட்டுத்திய நபருக்கு 50 வருடங்கள் சிறை

கொழும்பு.செப்.13
8 வயதுச் சிறுமியைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய 43 வயதுடைய நபருக்கு பதுளை மேல் நீதிமன்றம் நேற்று 50 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

தியத்தலாவ எல்லகம பகுதியைச் சேர்ந்த 8 வயதுச் சிறுமி 2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13ஆம் திகதி பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் அதே பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக வழக்கு விசாரணைகள். இடம்பெற்று வந்தன. இந்த வழக்கு பதுளை மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதிபதி குற்றவாளிக்கு 50 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிறுபான்மையினரை நசுக்கியதால்தான் மகிந்த விரட்டப்பட்டார்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சூடீன் தெரிவிப்பு

அம்பாறை, செப்.13

சிறுபான்மை மக்களை நசுக்கி, அவர்களது சுதந்திரம், உரிமைகளுக்குச் சவால் விடுத்து ஆதிக்க ஆட்சி செய்த மகிந்தவை துரத்தியடிப்பதில் மக்கள் தீர்மானமாக இருந்தனர். அதை கடந்த அரச தலைவர் தேர்தலில் நிரூபித்துக் காட்டியுள்ளனர். பெரும்பான்மை வாக்குகளை புதியவருக்கு அளித்து மகிந்தவை விரட்டியடித்தனர். நாட்டில் இன்று கூட்டரசு மலர்ந்துள்ளது. இதுவே அவர்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றி.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளருமான மூத்த சட்டத்தரணி ஆரிப் சம்சூடீன் தெரிவித்தார்.

பன்னாட்டுத் தென்னை தினத்தை முன்னிட்டு நிந்தவூர் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவில், தென்னை பயிர்ச் செய்கையாளர்களுக்கு உரமானியம் மற்றும் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நிந்தவூர் அமீர் தோட்ட மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பெரும்பான்மை சமூகத்தினர் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகத்தினரான தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்க வேண்டும். உரிமைகளுடன், அவர்களது சுதந்திரமும் மதிக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் பெரும்பான்மை சமூகம் சீரும் சிறப்புமாகத் திகழ முடியும். கூட்டரசில் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பன சவாலுக்குட்படுத்தப்பட இடமளிக்கப்படக் கூடாது. சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இன்றைய கூட்டரசில் நீதி, நியாயம் கிடைக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைத் தட்டிப்பறிக்க கூட்டரசில் இடமளிக்கப்படக் கூடாது. மக்களின் சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாண சபை ஆட்சி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் இணைந்த முன்னுதாரணமான ஆட்சியாகத் திகழ்கின்றது. அதனால் தான் சகல மாகாண சபைத் தேர்தல்களும் ஒரே தினத்தில் நடைபெற வேண்டும் எனும் ஜனநாயக விழுமியங்களை மதித்து, 20 ஆவது திருத்தச் சட்ட வரைவை கிழக்கு மாகாணசபை ஆதரித்துள்ளது.

ஒரு தமிழர் நிம்மதியாக வாழ்ந்தால் தான் ஒரு முஸ்லிம் நிம்மதியாக வாழ முடியும், ஒரு முஸ்லிம் நிம்மதியாக வாழ்ந்தால் தான் ஒரு தமிழர் நிம்மதியாக வாழ முடியும். இந்த இருசமூகமும் நிம்மதியாக சுதந்திரமாக, உரிமையுடன் வாழ்ந்தால் தான் இந்த நாட்டில் சிங்களப் பெரும்பான்மைச் சமூகமும் நிம்மதியாக வாழ முடியும். இதை உணர்ந்து நாம் செயற்படுவதே இன்றைய தேவையாகும் என்றார். (ஐ-10, 30)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் விவரம் மட்டக்களப்பில் இல்லை

### திட்டமிடல் பணிப்பாளர் தகவல்

மட்டக்களப்பு, செப். 13

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விவரத்திரட்டு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் இல்லை. உத்தியோக பூர்வமான விவரங்கள் எடுக்கவில்லை. அரசும் அதற்கு அனுமதி தரவில்லை. சரியான தகவல் திரட்டு இல்லாமல், அடுத்த கட்டச் செயற்பாடுகளுக்குச் செல்ல முடியாதுள்ளது. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலிருந்து காணாமலாக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவித்திட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

காணாமலாக்கப்பட்டவர்களின் விவரங்கள், அவர்களது குடும்ப பின்னணி, அவர்களுக்கு வீடு இருக்கின்றதா, வாழ்வாதாரத்துக்கு உதவிகள் தேவையா, உள்ளிட்ட விடயங்கள் அடங்கலான விவரங்கள் இருந்தால் தான், அந்தக் குடும்பங்களுக்கு நாமும் உதவிகளைச் செய்யலாம்.

எமக்கு நேரடியாக விண்ணப்பித்த 276 காணாமலாக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளையும், வாழ்வாதார வசதிகளையும் நாம் செய்து கொடுத்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-10, 46)

## ரூ.10 ஆயிரம் கையூட்டுப்பெற்ற பாடசாலை அதிபர் சிக்கினார்

கொழும்பு,செப்.13

10 ஆயிரம் ரூபாவைக் கையூட்டாகப் பெற்ற குற்றச்சாட்டில் மாத்தறை மாவட்டப் பாடசாலையொன்றின் அதிபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். இலஞ்ச ஊழல் மோசடித் தடுப்புப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலையில் தரம் 3 க்கு மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்காக, அவர் 10 ஆயிரம் ரூபாவைக் கையூட்டாகப் பெற்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், அதிபர் கைது செய்யப்பட்டார் என்று இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட அதிபர் மாத்தறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நிதிக்குற்ற விசாரணைப் பிரிவில் யோசித முன்னிலையாகவில்லை

கொழும்பு. செப். 13

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மகனான யோசித ராஜபக்ச பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவில் நேற்று முன்னிலையாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கல்கிசை, இரத்மலானை பகுதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட காணிகள் மற்றும் அதிசொகுசு வீடு ஒன்றை அமைத்தமை தொடர்பில் யோசிதவிடம் நிதி குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி வைத்தியலிங்கம் மற்றும் பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பி.கே.டி. பிரியந்தவின் ஆலோசனைகளின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கொழும்பு கோட்டையில் உள்ள நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைமை அலுவலகத்துக்கு வருமாறு யோசிதவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

தனிப்பட்ட காரணங்களுக்காக யோசித நேற்று அங்கு செல்லவில்லை எனன்று அவரது சட்டத்தரணி பிரேமலால் சி.தொலவத்தை தெரிவித்தார். இது தொடர்பில் நிதி குற்ற விசாரணைப் பிரிவினருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

## மன்னார் மாவட்ட செயலர் பதவிக்கு நேர்முகத் தேர்வு

### வடக்கிலிருந்து ஐவர் தோற்றினர்

மன்னார்.செப்.13

மன்னார் மாவட்டச் செயலர் வெற்றிடத்தை நிரப்பும் நோக்கில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் நேற்று நேர்முகத் தேர்வு நடைபெற்றது. அதில் 8 பேர் தோற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தின் தற்போதைய செயலர் விரைவில் இடமாற்றப்படவுள்ளார். அந்த இடத்துக்குப் புதிய செயலரைத் தெரிவு செய்யும் நோக்கில் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. அதில் 8 பேர் தோற்றினர். அவர்களில் ஐவர் வடக்கு மாகாணத்தில் பணியாற்றுபவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தின் தற்போதைய மேலதிக மாவட்டச்செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் , வடக்கு மாகாண சபைச் செயலாளர் தெய்வேந்திரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் , வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இரவீந்திரன் , வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மோகன்ராஜ் ஆகியோர் உட்பட 8 பேர் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலருக்கான நேர்முகத் தேர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் 9 பேர் பங்குபற்றினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10, 101)

## புதிய அரசியல் சிந்தனைகளால் முஸ்லிம் மக்களுக்குப் பாதிப்பு

மட்டக்களப்பு, செப். 13

மட்டக்களப்பில் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய அரசியல் சிந்தனைகளால் முஸ்லிம் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று சுட்டிக்காட்டி யுள்ளது.

கிழக்கு மாகாண முஸ்லிம்க ளின் சமகால பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒட்டமாவடி, நாவலடி பிரதேச ஆர்.டி.எஸ். கூட்ட மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் சமூக நடவடிக்கைகள் துறைசார் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி அமைப்பின் தலைவர் அன்வர் நௌஷாத் இதனைத் தெரிவித்தார். இது குறித்து தீர்வு எட்டப்படாவிட்டால் எதிர்காலத்தில் மிக மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும் என்று பிரதேச விவசாயிகள் கூறுகின்றனர் - என்றார். (ஐ-10, 48)



பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று மதியம் இடம்பெற்றது. ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்குக் காட்சியளித்தார். (ஐ)

# உரிமைகளைப்பெற சிறுபான்மையினருக்கு இதுவே சந்தர்ப்பம்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, செப். 13

கடந்த கால அரசுகளால் சிறுபான்மையின மக்களுக்கு உரிமைகள் எதுவும் கிடைத்ததில்லை. போட்டி போடும் அரசியல்வாதிகளால் மக்கள் ஏமாற்றப்பட்டனர். அந்த நிலைமை மாற்றப்பட்டு விட்டது. தமிழ் மக்களின் வாக்குகளால் உருவாக்கப்பட்டுள்ள கூட்டரசு சிறுபான்மையின மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு ஆதரவு தெரிவித்தமை தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறுபான்மையின மக்கள் 30 வருடகால இழப்புக்களிலிருந்து மீண்டெழும் சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும். அரசியலில் எல்லாவற்றையும் எதிர்த்து நிற்பது, தட்டிக்கழிப்பது, தான்தோன்றித் தனமாக நடந்து கொள்வது, வீராப்புப் பேசி வீண் பெருமை அடிப்பது இதுவெல்லாம் சமகால உலக நடப்புகளுடன் ஒத்துப்போகாத விடயங்களாக உள்ளன. அத்தகைய போக்குகளால் கடந்த காலத்தில் சிறுபான்மை மக்கள் இழந்தது ஏராளம்.

நடப்பு உலகப் போக்குகளை உணர்ந்து செயற்பட்டு, எமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க வேண்டும். எல்லாவற்றையும் எதிர்க்கும் மனோபாவத்தை விட, இருப்பதில் நல்லதை அங்கீகரிக்கும் மனோபாவம் எல்லோரையும் வாழ வைக்கும். இதுபற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடையில் அறிவோடு உரசிப் பார்த்து ஆக்கபூர்வமாக முடிவெடுக்க வேண்டும். ஆக்ரோஷமான போக்குகளால் பயன் ஏதுமில்லை. விட்டுக்கொடுப்புக்களோடு நல்லதைச் சிந்திக்கின்ற அதேவேளை, சிறுபான்மை மக்கள் அறிவார்ந்த அரசியல் முன்னெடுப்புக்களினூடாக ஒரு படியிலாவது ஏறி முதலில் கால் வைக்க வேண்டும். அதை விடுத்து எடுத்தேன் கவிழ்த்தேன் போக்கில் தற்போது இருக்கும் படிக்கட்டில் இருந்தும் கீழிறங்கி ஏறவே முடியாத ஒரு நிலைக்குச் சென்று விடக் கூடாது.

கடந்த கால அரசியல் உசுப்பேற்றல்கள் எமக்கு எதனையும் பெற்றுத் தரவில்லை. மாறாக இழப்புக்களையே சன்மானமாகத் தந்தது. சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் எதிர்த்து நிற்கும் போக்கைக் கடைப்பிடித்தால், சிறுபான்மையினருக்கான தீர்வு இழுத்தடிக்கப்படலாம். அத்தகைய ஒரு சூழ்நிலையை நாமாக அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து விடக் கூடாது. திட்டவட்டமாக எந்தவொரு தீர்வும் இதுவரை கிடைக்கப்பெறாத போதிலும், நம்பிக்கையின் அடிப்படையில்தான் நாம் காய் நகர்த்த வேண்டியுள்ளது.

கடந்த காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தற்போதைய கூட்டரசின் பக்கம் சார்ந்து நமக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்வதை விட, வேறு தெரிவு நம் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்லை. இருப்பதையும் உதறித் தள்ளி விட்டு எங்கே போவது. நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார்.

(ஐ-10, 46)

# மாற்றுத்திறனாளி ஆசிரியர் கற்பித்தலுக்கு உதவிகள்



சாவகச்சேரி, செப்.13

வீட்டில் மாலை நேர வகுப்புக்கள் நடத்தி வரும் மாற்றுத் திறனாளி ஆசிரியை ஒருவருக்கு, தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் வைத்து நேற்றுத் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

தளபாடங்களை பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் ஆசிரியையிடம் கையளித்தார்.

கொடிகாமம் வடக்கைச் சேர்ந்த ஆசிரியை தனது வீட்டில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புக்களை நடத்தி வருகிறார்.

மாணவர்கள் நிலத்தில் அமர்ந்து கல்வி கற்பதால், தளபாடங்கள் வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைவாக மீள்குடியமர்வு மற்றும் மறுவாழ்வு அமைச்சின் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் தளபாடங்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)



சாவகச்சேரி வாரியம்பதி பவானி அம்பிகா சமேத சிறி வெங்கடாசலபதி திருக்கோவிலின் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகராக் கோஷம் முழங்க தேர் பவனி இடம்பெற்றது. (ஐ)

## கைதடி வாசிக்கு ரூ.4 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி, செப். 13

பொலிஸாரால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தைச் செலுத்த மறுத்த கைதடி கோவிலாக்கண்டி வாசிக்கு , சாவகச்சேரி நீதிமன்றில் 4 ஆயிரம் ரூபா தண்டம் நேற்று விதிக்கப்பட்டது.

ஏனைய வாகனங்களை முதன்மைச் சாலைக்குச் செல்ல விடாமல் தடுக்கும் விதத்தில் வாகனத்தைச் செலுத்திய நபருக்கு, பொலிஸார் சம்பவ இடத்தில் வைத்து தண்டம் விதித்துப் பற்றுச்சீட்டு எழுதினர். அதனைச் செலுத்த முடியாதென அவர் மறுத்துள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஏனைய வாகனங்களை முதன்மைச் சாலைக்கு வரவிடாமல் தடுக்கும் நோக்கில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியமை, பொலிஸாரால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தைச் செலுத்தத் தவறியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

வழக்கை விசாரணை செய்த நீதிவான், இரு குற்றங்களுக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் 4 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)



## தான்தோன்றீஸ்வரத்தில் ஏர் பூட்டு விழா நேற்று

கொக்கட்டிச்சோலை, செப். 13

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் ஏர்பூட்டு விழா நேற்று நடைபெற்றது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய முதன்மைக்குரு சிவஸ்ரீ மு.கு. சச்சிதானந்தக்குருக்கள், பூமாதேவிக் கான பூசைகளை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் ஏர் பிடித்து நிகழ்வை ஆரம்பித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப்பகுதி விவசாயத்தை மேற்கொள்ளும் பகுதியாகும். அதனால் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேரோட்டத்தைத் தொடர்ந்து, ஏர் பூட்டு விழா நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-10)

## கஞ்சாவுடன் இளைஞர் கைது

வவுனியா, செப். 13

வவுனியா மையப் பேருந்து நிலையத்தில் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிக் கொண்டு வரப்பட்ட 2 கிலோ 240கிராம் கேரளக் கஞ்சாப் பொதியை வைத்திருந்த கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் , வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர் முற்படுத்தப்படுவார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த மாதத்துக்குள் ஒன்பதுக்கும் மேற்பட்ட நபர்கள் வவுனியா மையப் பேருந்து நிலையத்தில் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## உலக தென்னை தின மர நடுகைத்திட்டம் ஆரம்பம்

சாவகச்சேரி, செப்.13

பன்னாட்டு தென்னை தின விழாவை முன்னிட்டு மர நடுகைத் திட்டம் சாவகச்சேரியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அதன் ஆரம்ப நிகழ்வு சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் தென்னை அபிவிருத்தி தொடர்பான விளக்கவுரைகள் படக்காட்சிகள் மூலம் பயனாளிகளுக்கு காண்பிக்கப்பட்டன . மர நடுகைத் திட்டத்தின் முதல் கட்டமாக 200 பயனாளிகளுக்கு தலா 2 தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டன தென்னம்பிள்ளை வழங்கும் நிகழ்வை பிராந்திய முகாமையாளர் ஆரம்பித்து வைத்தார்.

தென்னை அபிவிருத்தி அலுவலகர் ஜே.சத்தியேந்திரா தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. அதில் தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் தெ.வைகுந்தன் , பண்ணைத் திட்டமிடல் அலுவலர் சி.சற்குணன், நகரசபைக் கணக்காளர் சி.பரதன் , நிர்வாக அலுவலர், தென்மராட்சிப் பிரதேச தென்னை அபிவிருத்தி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி நகர சபையின் மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் யாழ்.பிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கை சபை இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# தென்னைமரவாடியில் மக்களை குடியமர்த்த விரைவில் நடவடிக்கை

## வடக்கு மாகாண உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.13

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்கும் மிகமுக்கியதமிழ்க்கிராமமாக திருகோணமலை மாவட்டத்தின் தென்னைமரவாடி கிராமம் விளங்குகின் றது.

இங்கு மீளக்குடியமர விரும்பும் 270 குடும்பங்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம்செலுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக்கிளைத் தலைவருமான மருத்துவர் ப.சத்தியலிங்கம் இதுதொடர்பானநடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இதுபற்றித் தெரிவிக்கப்பட்டதாவது:

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தென்னைமரவாடி கிராம 800 குடும்பங்கள் 1984ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரணசூழ்நிலைகளால் இங்கிருந்த இடம்பெயர்ந்தன. அந்தக் குடும்பங்கள் தற்போது மீள்குடியேறி வருகின்றனர்.

84 குடும்பங்கள் இங்கு சிறிய அளவிலான கொட்டகைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றன. சுமார் 270 குடும்பங்கள் மீண்டும் இங்கு மீள்குடியேற விரும்புகின்றன.

இருந்தபோதிலும் இந்தக் கிராமத்தில் நிலவும் அடிப்படை வசதியின்மை, வாழ்வாதார நெருக்கடி உள்ளிட்ட பல காரணங்களால் மீள்குடியமர்வுக்கு மக்கள் தயக்கம் காட்டி வருகின்றன.

அதேநேரம், இந்தப்பிரதேச மக்களின் பாரம்பரிய வாழ்வாதார வயல் நிலங்கள் யாவும் இன்று பெரும்பான்மை இன மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறு இக்கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சத்தியலிங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

குறித்த விடயங்களுக்கு ஆலோசனை வழங்கியதுடன், ஏனைய விடயங்கள் தொடர்பில் உரிய தரப்பினருடன்கலந்துரையாடிதீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார். (ய-101)

### நாவாந்துறை, பாசையூர் சந்தைகள் சீரமைப்பு

யாழ்ப்பாணம்.செப்.13

நாவாந்துறை மற்றும் பாசையூர் மீன் விற்பனைச் சந்தைகளின் சீரமைப் புப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அதேசமயம் குருநகர் சின்னக்கடை மீன் சந்தையின் சீரமைப்புப் பணிகள் விரைவாக ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண. மாநகராட்சி மான்றத்தினால் இந்தப் சீரமைப்புப் பணிகள் யாவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாவாந்துறைச் சந்தைக்கு உள்ளே பறவைகள் செல்லாதவாறு பாதுகாப்புக் கம்பிவலைகள் அமைக்கப்பட்டு சந்தை வர்ணம் தீட்டி மெருகூட்டப்படவுள்ளது.

பாசையூர் சந்தை நிலவேலைகள் சீரமைக்கப்பட்டுச் சந்தைக்கான நடைபாதையும்அமைக்கப்பட்வுள்ளது.

அதேபோன்று குருநகர் சின்னக்கடைச் சந்தையும் மெருகூட்டப்படும்.

அத்துடன் இந்தச் சந்தையின் மேல்மாடி வர்த்தக கட்டட தொகுதியும் சீர்செய்யப்படவுள்ளதாக மாநகராட்சி மன்றம் தெரிவித்தது. (ய-17)

### அனுமதியின்றி மணல் ஏற்றிய ஒருவர் பரந்தனில் கைது

கிளிநொச்சி, செப்.13

பரந்தன் ஆனையிறவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

மணல் ஏற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் உழவி யந்திரமும் கைப்பற்றப்பட்டது என கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் விரைவில் நீதி மன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவித்தனர். (ய-6)

# ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழா 20இல் கொடியேற்றம்

பருத்தித்துறை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 20ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 6ஆம்திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

திருவிழா ஏற்பாட்டுக் கூட்டம் கடந்தமாதம் 28ஆம் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில்பிரதேசத்துக்குட்பட்ட பல்வேறு திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளையின் பிரசன்னத்துடன் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

திருவிழாக்காலத்தில்ஆலயச்சூழலில்பச்சை குத்தும் செயற்பாடு முற்றாகத் தடைசெய்யப் பட்டுள்ளது.

திருடர்களின்நடமாட்டம்அதிகம்ஏற்படவாய்ப்புள்ளதால் பக்தர்கள் தங்க ஆபரணங்களை அணிவருவதை தவிர்த்தல் வேண்டும்.

பக்தர்கள் கலாசார உடையுடன் ஒழுக்கசிலர்களாக வருகைதரவேண்டும்.

மடங்களில் சமைத்தல், உணவு வழங்கும் செயற்பாடுகளில்ஈடுபடுபவர்கள்தைபோயிட்டுக் காய்ச்சலுக்கு எதிரான தடுப்பு மருந்து மருத்துவச் சான்றிதழ்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

மடங்களில் ஒலிபெருக்கி பாவிக்கமுடியாது.

பக்தர்களுக்கு இடையூறு இல்லாத வகையிலும்பூசைகளுக்குஇடையூறுஇல்லாதவகையிலும்பாவித்தல்வேண்டும். பொலித்தின்பாவனைக்குமுற்றாகத்தடைவிதிக்கப்பட்டுள்ளது.

புகைத்தல், மதுபானப் பொருள்கள், போதை வஸ்துப் பொருள்கள் என்பனவற்றின் பாவனை விற்பனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தண்ணீர்ப் பந்தல்கள் அமைப்பவர்கள் சுகாதாரப்பகுதியினருடன்கலந்தாலோசித்தபின்னரே அமைத்தல் வேண்டும்.

தாகசாந்திக்கப் பயன்படுத்தப்படும் தண்ணீருக்கு உணவுக்குப் பயன்படுத்தப்படும் ஐஸ் கட்டிகளே பயன்படுத்தப்பட வேண்டும். மீனுக்குப்பாவிக்கப்படும்ஐஸ்கட்டிகள்பாவித்தலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வீதித்தடைக் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு பக்தர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். மீறுவோர்மீதுசட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற தீர்மானங்கள்எடுக்கப்பட்டன. (ய)

### குடாநாட்டில் சின்னவெங்காயத்தின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.13

குடாநாட்டில் சின்ன வெங்காயத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

இங்கு பயிரிடப்படும் வெங்காயம் அதிகளவில் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதே இந்த விலை அதிகரிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் இந்தமுறை கூடுதலான விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டனர் என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

சின்னவெங்காய விதைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால்செய்கையாளர்கள் கூடுதலாக உண்மை விதை வெங்காயம் மூலம் நாற்றுமேடை அமைத்து செய்கையில் ஈடுபட்டனர்.

இதன்மூலம் காலநிலைக்கு ஏற்றவாறு விவசாயிகள் அதிக விளைச்சலையும் பெற்றுள்ளனர்.

இந்தநிலையில் குடாநாட்டில் பயிரிட்ட வெங்காயம் கூடுதலாகத் தென்பகுதிக்கு எடுத்துச்செல்லப்படுவதால் இங்கு வெங்காயத்தின் விலை சடுதியாக அதிகரித்து வருகின்றது.

சந்தை வாய்ப்பும் அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளில் சின்னவெங்காயம் ஒருகிலோ 230 ரூபாவைத் தாண்டியுள்ளது.

இந்தவிலை அடுத்து வரும் நாள்களில் மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ய-17)

### சுழிபுரத்தில் சாரணர் பாசறை

யாழ்ப்பாணம், செப்.13

காங்கேசன்துறைசாரணர் மாவட்டத்தின் ஆண்டு பாசறை விழாவும், குருளைச் சாரணர் வெளிக்கள நாள் நிகழ்வும் எதிர்வரும் 15, 16, 17 ஆகிய திகதிகளில் சுழிபுரத்தில் நடைபெறும்.

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மைதானத்தில் பாசறை நிகழ்வுகள் நடைபெறும்என்றுசாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சண்முகராஜா தெரிவித்தார். (ய-9)

# பன்னாட்டுத் திரைப்பட விழாவை தற்போது நடத்தவேண்டாம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.13

தியாகி திலீபன் தமிழ் மக்களின் உரிமைக்காக உண்ணா நோன்பிருந்து தனது இன்னுயிரை மெழுகாய் உருக்கிய புனித நாள்களில் யாழ்ப்பாணத்தில் பன்னாட்டு திரைப்பட விழா நடத்தப்படக்கூடாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பன்னாட்டு ரீதியில் சினிமா இரசிகர்களாலும், சினிமா இயக்குநர்கள் மற்றும் தயாரிப்பாளர்களாலும் திரைப்பட விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. திரைப்பட விழாக்களின் கலைப் பெறுமதி உலக மக்கள் அனைவராலும் மிக உயர்வாகப் போற்றப்படுகின்றது. அதன் பெறுமதியை தமிழ்தேசிய மக்கள் முன்னணி உணர்ந்து வரவேற்கின்றது.

ஈழத் தமிழ் மக்கள் தங்கள் விடுதலை நோக்கிய பயணத்தில் பல மைல்கற்களைத் தாண்டினார்கள். அதில் முக்கியமான நிகழ்வாக தியாக தீபம் திலீபனின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் அமைந்தது.

நல்லூரின் வடக்கு வீதியில் 1987 புரட்டாதி 15ஆம் திகதி திலீபன் தொடங்கிய தன்னுயிரை மெழுகாய் உருக்கிய தியாகப் பயணம் செப்டெம்பர் 26இல் தேசமே எழுச்சி கொள்ள, எம்மக்களையும், தான் நேசித்த மண்ணையும் விட்டு அவர் பிரிந்தார்.

அந்தத் தியாகி உயிர்பிரிந்த நகரில், உண்ணாவிரம் இருந்த நாள்களில் (செப்ரெம்பர் 15 தொடக்கம் செப்ரெம்பர் 20 வரை) யாழ் திரைப்பட விழாவை கொண்டாடுதல், எம்மக்களின் விடுதலைக்காக திலீபன் செய்த தியாகங்களை கொச்சைப்படுத்தி, தமிழ் மக்களின் தேசிய உணர்வை உதாசீனம் செய்து, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றை இருட்டடிப்புச் செய்வதாக அமைகின்றது என்றுள்ளது. (ய)

### சமகால சட்ட விடயங்கள் யாழ்.பல்கலையில் நாளை

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறையின் சமகால சட்ட விடயங்களுக்காக அரங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட அறை இல. 207இல் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

'கூட்டாட்சி பிரிவினை அல்ல: சந்திரசோம எதிர் மாவை சேனாதிராஜா எனும் வழக் கில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆய்ந்தறிதல்' என்ற விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மகிந்த சோம எதிர் சேனாதிராஜா வழக்கில் பிரதிவாதிகளின் சட்டத்தரணியும் அரச தலைவர் சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன், பேசுவார்.

தொடர்ந்து கலந்தாய்வு இடம்பெறும்., யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நெறிப்படுத்தலில் சட்டத்துறைத் தலைவர் கு. குருபரன் தலைமையில் இது இடம்பெறும். கலந்துரையாடலும் உரையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (4)

# புலோலி ப.நோ.கூ.ச. பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.13

வடமராட்சியில் இயங்கும் புலோலி பல நோக்கு கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு நீண்டகாலமாக சம்பளம் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பணியாளர்கள் சம்பளம் கேட்கும் போதெல்லாம், சங்கம் நட்டத்தில் இயங்குகின்றது: எங்களால் சம்பளம் வழங்க முடியவில்லை என அதிகாரிகள் கூறிவரு கின்றனர் என பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எமக்கு 10ஆயிரம் ரூபாவே சம்பளமாக வழங்கப்படுகிறது. இதுவே எமது வாழ்வாதாரம். நீண்டகாலமாக சம்பளம் வழங்கப்படாததால் நாம் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளோம்.

சம்பளம் கேட்டு அழுத்தம் கொடுத்தால் பணியில் இருந்து நிறுத்தி வை க்கின்றனர்.

ஆறுமாதமாக சம்பளம் வழங்கப்படாத நிலையில, வேலையால் நிறுத்துகின்றனர். தேவை ஏற்பட்டால் கூப்பிடுவதாகக் கூறுகின்றனர்.

சம்பள மீதி பெரும் தொகையாக காணப்படுவதால் அவர்களிடம் கேட்டு வாங்குவதென்பது கடினமானதாகவே காணப்படுகின்றது.

எமக்கு அந்தத் தொகையை வழங்கினால் கூட ஏதும் சுயதொழில் செய்ய முடியும்.

எனவே எமது சம்பள நிலுவையை உடனடியாக வழங்கி எமது வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற சம்பந்தப்பட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது,

எமது பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் ஆரம்பத்தில் 24 கிளைகள் இயங்கி வந்தன. ஆனால் தற்போது வெறும் 6 கிளைகளே இயங்கி வருகின்றன. அதிலும் ஒரு கிளையே ஓரளவு இலாபத்துடன் இயங்கி வருகின்றது. மிகுதி ஐந்தும் நட்டத்திலேயே இயங்கி வருகின்றன.

எமது சங்கத்தில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாக சம்பளம் வழங்காமல் நிலுவை காணப்பட்டது. எனினும் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தின் அடிப்படையில் படிப்படியாக பணியாளர்களுக்கு நாம் சம்பள நிலுவையை வழங்கி வருகின்றோம்.

எமது சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் வருமானத்தின் ஊடாகவே நாம் சம்பள நிலுவையை வழங்கி வருகின்றோம்- என்றார். (ய-8)

# ஆசிரியர் நியமனம் தராவிடின் உணவு ஒறுப்புப் போராட்டம்

## வடக்கு தொண்டர் ஆசிரியர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.13

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்தில் உள்ள பிரச்சினைகளுக்கான தீர்வை ஆளுநர் ஒரு வாரத்துக்குள் பெற்றுக்கொடுக்காவிடின் தொடர்ச்சியான உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபடப்போவதாக வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது: வடக்கு மாகாணத்தில் உள்ள 672 தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்குவது தொடர்பாக மாகாண கல்வி அமைச்சு அண்மையில் அறிவித்திருந்தது. நியமனம் வழங்க உள்ளவர்களின் பெயர்ப்பட்டியலை தற்போது வெளியிட்டுள்ளது.

அதில் 200 பேரின் பெயர் விவரங்களே உள்ளடக்கப்பட் டுள்ளன. இதனால் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இதுதொடர்பாக நாம் உரிய அதிகாரிகளைக் கேட்டோம். அதற்கு, தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியபோது சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் வரவைப் பதிவுசெய்து அதிலே குறிப்பிடப்பட்டவர் களின் பெயர் விவரங்களே உள்வாங்கப்பட்டு இருக்கலாம் என்று தெரிவித்தனர்.

சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் எமது சேவைக்காலம் உள்வாங்கப்படாமைக்கு நாம் காரணம் அல்ல. நாம் கடமையில் ஈடுபடும்போது பாடசாலை நிர்வாகத்தால் அவை பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

பாடசாலையை மேற்பார்வை செய்ய வரும் அதிகாரிகள் சில வேளைகளில் தொண்டர் ஆசிரியர்களை இந்தப் பதிவேட்டில் பதிய வேண்டாம் என்று கூறியுள்ளார்கள். இவ்வாறான காரணங்களால் எமது பெயர்கள் அந்தப் பதிவேட்டில் இல்லாமல் இருக்கலாம்.

ஆகவே நாம் அனைவரும் நாளை (இன்று) புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து மனு ஒன்றைக் கையளிக்கவுள்ளோம்.

எமது பிரச்சினைக்கான தீர்வை ஒருவார காலத்துக்குள் பெற்றுத்தராது விடின் நாம் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

எனவே வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக ஒன்று கூடவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# கஞ்சாவுடன் கைதானோருக்கு விளக்கமறியல்

கஞ்சா வைத்திருந்த நாவற்குளி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் தேடுதல் நடத்தப்பட்டது. அதன்போபோதுஇருவரும்கைதுசெய்யப்பட்டனர். ஒருவரிடம் ஆயிரத்து 640 மில்லிகிராம் கஞ்சாவும் மற்றவரிடம் 4 ஆயிரத்து 300 மில்லிகிராம் கஞ்சாவும் இருந்தமை கண்டறியப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட னர். ஆயிரத்து 640 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்தவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரையும் 4 ஆயிரத்து 300 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்தவரை நாளை வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4-9)

# பி.எச்.ஐக்களின் புறக்கணிப்பால் டெங்கு ஒழிப்புப் பணி பாதிப்பு

## வடக்கு சுகாதார அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.13

வடக்கு மாகாணத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பணிப் புறக்கணிப்பால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நடப்பு வருடம் முழுவதும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். இதனால் வடக்கு மாகாணத்தில் டெங்கு கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. எனினும் டெங்கு பரவக்கூடிய அபாயம் இருப்பதனால் தொடர்ச்சியான நடவடிக்கை அவசியமாகும்.

நடப்பு வருடத்தில் இடம்பெற்ற பொதுச் சுகாதார பரிசோதகர்களின் இடமாற்றம் தவறு என்று கருதி பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதாவது அலுவலகங்களுக்குச் சென்றாலும் பணிபுரியாமல் உள்ளனர். இதனால் தற்போது உள்ள டெங்கு நிலமைகளை சமாளிக்க முடியாமல் உள்ளது. அடுத்த மாதமளவில் மழை பெய்ய ஆரம்பித்துவிடும். இப்போது இருந்தே டெங்கு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டால் மழை காலங்களில் டெங்கு பரவுவதைத் தடுக்கமுடியும்.

எனவே, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பணிக்குத் திரும்புதல் தொடர்பாக அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# பாம்பு தீண்டிய தந்தையைப் பார்க்க ஓடிச் சென்ற தனயன் விபத்தில் காயம்

## உருத்திரபுரத்தில் சம்பவம்

தந்தை பாம்புக் கடிக்கு இலக்கானதைக் கேள்விப்பட்டு மோட்டார் சைக்கிளில் விரைந்து வந்த அவரின் மகன் விபத்தில் சிக்கி கால் முறிவடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு உருத்திரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

உருத்திரபுரம் பகுதியில் வீட்டில் இருந்த குடும்பத் தலைவர் பேரம்பலம்(வயது-55) நேற்றுமுன்தினம் இரவு பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

அப்போது அவரது மகன் (விஜேந்திரன்20) வயலுக்குச் சென்றிருந்தார்.

வயலில் நின்றிருந்த அவருக்கு தந்தை பாம்புக்கடிக்கு இலக்கான விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதற்றமடைந்த அவர் மோட்டார் சைக்கிளில் வேகமாக வீட்டுக்கு விரைந்துள்ளார்.

இவ்வாறு பயணித்தவேளையில் மோட்டார் சைக்கிள் விபத்துக் குள்ளானதில் அவரது கால் முறிவடைந்தது. தற்போது தந்தையும் மகனும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ய-101)

# நரம்புப் பாதிப்பால் குடும்பப் பெண் சாவு

யாழ்ப்பாணம் செப் 13

தலைவலி என வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குடும்பப் பெண்ணொருவர் மூளை நரம்பு பாதிக்கப்பட்டு உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கரம்பைகுறிச்சி மேற்கை சேர்ந்த இராசரத்தினம் பாசம் (வயது-49) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

தலைவலி ஏற்பட்டதன் காரணமாக அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சையின் பின்னர் அவருக்கு ஏற்பட்ட தலைவலி குறைவடைந்துள்ளது. எனினும் மறுநாள் காலை மீண்டும் அவருக்கு கடுமையான தலைவலி ஏற்பட்டுள்ளது. அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காகமாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது குடும்பப்பெண் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

அவரின் மூளை நரம்பில் ஏற்பட்ட பாதிப்பின் காரணமாகவே இந்த உயிரிழப்பு ஏற்பட்டதாக இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி. இளங்கீரன் மேற்கொண்டார். (வ-8-9-ரி1)

# பண மோசடியில் ஈடுபட்டவர் நாவாந்துறையில் சிக்கினார்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணம், நாவாந்துறைப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் நீண்டகாலமாக நாணயத்தாள் வழங்கி பண மோசடியில் ஈடுபட்டு வந்த ஒருவர் நேற்றைய தினம் வர்த்தகர்களால் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவருடன் வந்த மற்றொருவர் தப்பிவிட்டார்.

2 ஆயிரம் ரூபா நாணயத்தாளை வழங்கி 100 ரூபா அல்லது 50 ரூபாவுக்கான பொருளை கொள்வனவு செய்வர். அதன் பின்பு மிகுதிப் பணத்தை பெற்றுக்கொள்வர்.

சிறிது நேர இடைவெளியில் பொருள் பெற்ற தொகையில் மாற்றிய பணம் உள்ளதனால் அதனை வழங்குகின்றோம் 2 ஆயிரம் ரூபாத் தாளை வழங்குமாறு அவர்கள் வர்த்தகர்களிடம் கேட்பார்கள். வர்த்தகர்களும் 2 ஆயிரம் ரூபா நாணயத்தாளை மீள வழங்கிவிட்டு முன்பு வழங்கிய மிகுதிப் பணத்தை தருமாறு கோரினால், அவ்வாறு மிகுதிப் பணம் வழங்கவே இல்லை எனத் தர்க்கம் புரிந்து மோசடியில் ஈடுபடுவர். இந்த மோசடி யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் இடம்பெற்று வருகிறது.

இதேவகையில் மோசடியில் ஈடுபட்டிருந்த தாவடிப் பகுதியைச் சேர்ந்த இருவர் அண்மையில் ஊரகாவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். இதே போன்றே நேற்றைய தினம் நாவாந்துறைப் பகுதியில் மோசடியில் ஈடுபட்டிருந்தவேளையில் வர்த்தகர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் தப்பியோடிவிட்டார்.

இவ்வாறு பிடிக்கப்பட்டவர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (வ-101)

# முத்தையா முரளிதரனின் பெயர் பல்லேகல அரங்கிலிருந்து நீக்கம்



கண்டி, செப். 13

கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பொறிக்கப்பட்டிருந்த இலங்கை அணியின் முன்னாள் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் பெயர் அகற்றப்பட்டுள்ளதாக அவரது தந்தை சி.முத்தையா தெரிவித்தார்.

மல்வத்து மகாநாயக்கர் திப்பட்டுவாவே சித்தார்த்த சுமங்கல தேரரை நேற்று செவ்வாய்கிழமை சந்தித்த முத்தையா இதற்கான தீர்வை பெற்றுத் தருமாறு கேட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இந்த மைதானத்துக்கு முத்தையா முரளிதரன் என பெயர் வைக்கப்பட்டது. தற்போது அந்த மைதானத்தில் இருந்து தனது மகனின் பெயர் நீக்கப்பட்டுள்ளதாக முத்தையா முரளிதரனின் தந்தை கூறுகின்றார்.

விளையாட்டுத்துறை அமைச்சருடன் கலந்துரையாடி இந்த பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தருவதாக மகாநாயக்க தேரர் தம்மிடம் கூறியதாகவும் முத்தையா குறிப்பிட்டார். (வ)

## மரண அறிவித்தல்



## சிவசுப்பிரமணியம் நவரத்தினராஜா

விநாயக முதலியார் தெரு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் நவரத்தினராஜா நேற்று (12.09.2017) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் - சரஸ்வதிஅம்மா தம்பதியரின் மூத்தமகனும் இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் ராஜ்குமார், தர்சினி, லக்ஸாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைவாணி, கமலதாஸ், தெட்சனன் ஆகியோரின் மாமனும் தர்சன், கதிர், கனிஸ், ஸ்ருதிகா, சஞ்சயன், ஷாகித் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2017) புதன்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.M.றோட், பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர். 077 623 8212

## அலுவலக பணியாளர்கள் தேவை

அங்கர் கிளீனிங் சேவிஸ் நிறுவனம் ஊடாக அலுவலகங்களில் துப்புரவுப் பணிக்கு பணியாளர்களாக யாழ். மாவட்டத்திலே உள்ள நிறுவனங்களில் பணிபுரிய விரும்புவோர் கீழ் உள்ள நபருடன் தொடர்பு கொள்ள்வும்.

**Mr.S.பாலதாஸ் (முகாமையாளர், யாழ்.மாவட்டம்)**
**077 539 6350**

## சாரதி தேவை

அரச ஒப்பந்த வேலைகளை நடைமுறைப்படுத்தும் எமது நிறுவனத்திற்கு பொருள்கள் வழங்கும் நிறுவனத்தில் இருந்து வேலைத்தளங்களுக்கு பொருள்களை ஏற்றி இறக்ககூடிய வலுவான சாரதி ஒருவர் தேவை.

வாகனம் TaTa Single Cap

அதிகூடிய மாதாந்த சம்பளம் - 1250x30 நாள்கள் + 150x30 நாள்கள்
37500 + 4500 = Rs 42,000

ஞாயிறு தவிர்ந்த மேலதிமாக லீவு எடுப்பாராயின் குறித்த நாளுக்காக வழங்கப்படும் Rs 150 ஆனது அம்மாதம் முழுவதுமே இழக்க நேரிடும்.

சுயவிவரக்கோவையை 076 824 5457 viber இலக்கத்திற்கு
தொடர்புகளுக்கு - 076 824 5457
தராங்கி என்ஜினியரிங் (pvt)Ltd
சாந்த பாமசி கட்டடம்,1 ஆம் மாடி, கொடிகாமம் சந்தி,கொடிகாமம்.

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 12.09.2017 | 2184 | நீலம் |

இடபம்
வெற்றி இலக்கங்கள் 12 17 37 54
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 282, 040/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 18 28 46 56
2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ 20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ 500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ 25,000ம் வெல்ல முடியும்

2017.09.15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## கண்ணீர் அஞ்சலி



வடக்கு வலய உதவி பதிவாளர் நாயகம் ஸ்ரீமான் பரஞ்சோதி பிரபாகர் அவர்களின் அன்புத்தந்தையார்

### தம்பிஐயா பரஞ்சோதி

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு துயரடைந்தோம் இறுதிச்சடங்கிற்கு செல்லமுடியாது போனாலும் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் அஞ்சலியையும் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுதேச வைத்தியர் ஜெ.ஜெயலன் பிறப்பு, இறப்பு மருத்துவ பதிவாளர், யாழ். நகர் மேற்கு முதன்மை அலுவலகம், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம். மேலதிக அலுவலகம் - சுஜீவா வைத்தியசாலை நாச்சிமார் கோயிலடி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 599 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 12.09.2017
வெற்றி இலக்கங்கள் 04 08 20 54 O
42 52 57 65
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 10,335,724/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

கோடீபதி
சீட்டிழுப்பு வாரம்: 188
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 12.09.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 101,592,816/-
V 03 39 57 78
18 21 28 38
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 13
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.09.12
அத கோடிபதி
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,465,820/-
வெற்றி இலக்கங்கள் 01 25 43 69 D
29 36 37 60
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின்
நிர்வாகசபைத் தலைவர்
**அ. கிருபானந்தமனுநீதி**
அவர்களின் சகோதரியும்
சங்க ஆயுட்கால
உறுப்பினரும் ஆகிய

**செல்வி**
### நிர்மலாதேவி அப்புத்துரை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானின் பொற்பாதங்களை வணங்குகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/விக்ரோரியாக் கல்லூரி, சுளிபுரம்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25.02.1951

மறைவு 27.08.2016

### திருநாவுக்கரசு தேவராஜா

அப்பா என்று சொன்னால் அர்த்தம்
ஆயிரம் இருக்கும் ஆசைகளை கேட்டிட வென்றே
உயிருக்குள் துடிக்கும் ஆலமரம் போல நீங்கள்
குடை விரித்தீர்கள் ஆருமற்று தனிமையிலே
தனித்து நிற்கின்றோம் தலைவன்
இழந்த படைகளாக குழம்பிப் போகின்றோம்
நினைவே குழவியாக கொட்டுகின்றதே
உயிர் வலிக்கின்றதே
ஒரு வருடம் என்ன ஓராயிரம்
வருடங்கள் சென்றாலும் - உங்கள்
நினைவுகள் எம்மைத் தொடரும்.

கீரிமலை வீதி,
சண்டிலிப்பாய்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 01 . 1939

மறைவு 12 . 09 . 2017

### சின்னையா கந்தசாமி

வறாத்துப்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தசாமி நேற்று (12.09.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்க ளான வல்லிபுரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் வசந்தியின் (டென்மார்க்) பாசமிகு தந்தையும் விஜயதுரை (டென்மார்க்)இன் அன்பு மாமனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பாக்கியம், யோகமலர், ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற பகவதி மற்றும் கமலாதேவி, இந்திரவ்தனா (ஜேர்மனி), காலஞ்சென்ற ரவீந்திர ராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் டென்மார்க்கில் வசிக்கும் வினோஜா, வினோஜன், விஷ்ணு ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2017) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராத்துப்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 08 . 09 . 1959

இறப்பு 12 . 09 . 2017

### சோமசேகரம் குகநேசன்

*(ஓய்வுபெற்ற மருந்தாளர்)*

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் இல.80, வைரவர் கோவில் வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசேகரம் குகநேசன் 12.09.2017 செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் பரமேஸ்வரி - தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி தியாகராஜன் தம்பதியரின் மருமகனும் ரஞ்சனி (ஆசிரியை, வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்) இன் அன்புக் கணவரும் சங்கவி, சாம்பவி (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சபேசன், ஜெகதீசன், பரமேஸ்வரன், சற்குனேசன் ஆகியோரின் அன்புச் சகோதரும் இந்திராணி, ஜெயலஷ்மி, கொன்சலா, சாந்தினி, சிற்பவானந்தன், சிவகுமார், கலைச்செல்வி, அருள் செல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2017) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சநாதன் குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

80, வைரவர் கோவில் வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.
ஜெ.உமாசுதன்
(வடலியடைப்பு)

St. John's Academy & College of Technology

TVEC

G.C.E O/L = NVQ 3
G.C.E A/L = NVQ 4

தொழில் உறுதி

*TVEC Registration No.P25/0076*
*TVEC Accreditation No.K725001.1*

| | |
|---|---|
| Application Form Issue | : 17.09.2017 |
| Closing Date for Applications | : 30.09.2017 |
| Course Duration | : Six months |
| Course Commencement | : 2nd October 2017 |

அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

Boys & Girls!
Apply
Immediately!
ADMISSION
FEE
FREE!

**Available Courses**

Language Courses

- Building Career Skills through English - NVQ 1
- Spoken Sinhala ( For office staff & students )

NVQ 3 Courses

- Hotel & Restaurants Management (Front Office Operations)
- Computer Network Technician
- Computer Hardware Technician
- Information and Communication Technology
- Radio, TV & Allied Equipment Repairer - Mobile
- Electrical Wiring
- Plumbing

❖ Additional Subjects for NVQ 3 Students:
English Language, Mathematics, Sinhala Language

Coordinator : Mr. A.Murugananthan 0718561252 , 0212216680
For more details, contact,
The Director, St. John's Academy & College of Technology
446 Main Street Chundikuli Jaffna
Tel: 021 222 8585 Email: stjohnsacademy@sltnet.lk

**நாய்க்குட்டி விற்பனை**

45 நாள்கள் நிரம்பிய டோமன் வகையைச் சேர்ந்த இரண்டு நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. (தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது)

**தொடர்பு - 076 5369 062**

## மரண அறிவித்தல்

# செல்வி அப்புத்துரை நிர்மலாதேவி
## (மலரக்கா)



தோற்றம் 27.06.1947 — மறைவு 10.09.2017

"மறு இல்லம்" சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அப்புத்துரை நிர்மலாதேவி 10.09.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை (பழைய விதானையார்) திலகவதியார் தம்பதியரின் அன்பு மகளும், சாந்தகுமாரி, சதானந்தவேல், அ.நி.மநுநீதி, அ.கி. மநுநீதி, நளாயினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தயாபரநாதன், காலஞ்சென்ற சச்சிதானந்தராணி மற்றும் கலாவதி, சந்திரவதனா ஆகியோரின் மைத்துனியும், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் ஈஸ்வரநாதன், அருணகிரிநாதன், செந்தில்நாதன், தர்சனா ஆகியோரின் ஆசையம்மாவும், மநுஆனந்தன், திலகா, மநுஹரன், மநுமதி, மதுமிதா, மநுமயூரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2017) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் மநு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
அ. சதானந்தவேல் - 076 987 8866 / 0061 4331 61944
அ.நி. மநுநீதி - 077 621 7550
அ.கி. மநுநீதி - 077 233 5258

## மரண அறிவித்தல்



பிறப்பு 01 . 05 . 1948 — இறப்பு 10 . 09 . 2017

# பரராஜசிங்கம் பரமேஸ்வரன்

யாழ்.வடக்கு, புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும், கொழும்பு (வெள்ளவத்தை), இந்தியா (மதுரை) ஆகிய இடங்களையும் வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் பரமேஸ்வரன் 10.09.2017 ஞாயிற்றுக்கிழமை கொக்குவிலில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பரராஜசிங்கம் (ஓய்வுபெற்ற கிராமசேவகர்) - நேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பரராஜசேகரம், சந்திரசேகரம், இராஜசூரியன் மற்றும் திருமதி சதானந்தன், தவமணி, அரிச்சந்திரன், திருமதி ஞானேந்திரன், செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி ஜெயசங்கர் கௌரி (UK), திருமதி ஜெகதீஸ்வரன் ரேனுகா (Denmark), திருமதி விஜயகுமார் சுபாஜினி (Canada), ஜெகஜீவன், ஹரிஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசங்கர், ஜெகதீஸ்வரன், விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் குலரஞ்சிதம், உமையாள் ஞானேந்திரன், மனோரஞ்சிதம், சண்முகலிங்கம், வசந்தினி சந்திரகுமார், நந்தகுமார் நந்தினி, சியாமளா ஆகியோரின் மைத்துனரும், சாலுஜா, நிலக்ஷா, லித்திகா, ரெனிஷா, ஹரினிகா, ஜர்சிகா, வைசாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.09.2017 வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் கிரியைகள் ஆரம்பமாகி தகன்க்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**78/2, கோவில் வீதி**
**(கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம் அருகில்), கொக்குவில் கிழக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**076 432 4833, 078 491 5251**

## மரண அறிவித்தல்

# சுப்பிரமணியம் துசாந்தன்

**(சாரதி, இ.போ.சபை, காரைநகர் சாலை)**



மண்ணில் 11.06.1985 — விண்ணில் 09.09.2017

வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் துசாந்தன் கடந்த (09.09.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் சுப்பிரமணியம் மற்றும் தவநாயகி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் கலாபன், புலர்ந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சேந்தன், மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கோபிகன், கிருஷ்ணிகா ஆகியோரின் அன்பு மாமனும் கிருசாயினி, ஜோதிசன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சின்னம்மா, விசுவநாதன், நாகபூசணி தம்பதியரின் பாசமிகு பேரனும் தவநாதன், வேல்நாதன், சறோஜினிதேவி, கலாஜினி, கணபதிப்பிள்ளை, பராசக்தி, காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், துரைராசா, மகேஸ்வரி, அருந்தவம், அரியகுணதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் குணநாயகி இராசகுலநாயகி, அருணகிரிநாயகி, வரதகுலநாயகி, சந்திரகுலநாயகி, கலாநாயகி, சதாநாயகி, சர்வேஸ்வரன், கிருபாநாயகம், தனபாலசுந்தரம், கலாபாகன், மனோகரன், ஸ்ரீஞானரூபன் ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2017) வியாழக்கிழமை மு.ப. 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கரியைக்காக வட்டு.தெற்கு, கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 687 9062**

# மைத்திரி அணிக்குள்ளிருந்து மகிந்தவுக்கு துதிபாடியவர் பதவியிலிருந்து தூக்கப்பட்டார்

கொழும்பு, செப். 13

கூட்டு அரசுக்குள் இருந்து கொண்டு மகிந்த அணிக்குச் சார்பாகச் செயற்பட்டுவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களைக் களையெடுக்க ஆரம்பித்துள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அதன் ஓர் அங்கமாகச் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சரான அருந்திக்க பெர்னாண்டோவை அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கியுள்ளார்.



அரசமைப்பின் 46 (3)ஆம் இலக்கச்சட்டத்தின்பிரகாரம் அரச தலைவருக்குவழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே மைத்திரிபால சிறிசேன இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அருந்திக்க பெர்னாண்டோ, சில மாதங்களுக்கு முன்னர் ஜப்பானில் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். அரசிலிருந்து ஒரு பகுதி சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வெளியேறி, மகிந்த அணியுடன் இணையவுள்ளனர் எனவும் கூறி வந்தார். கூட்டு அரசின் செயற்பாடுகளையும் விமர்சித்து வந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றிருந்தது. அந்தக் கூட்டத்தில், இவர் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவுடன் கடும் வாக்குவாதங்களில் ஈடுபட்டார். இந்த நிலையில், நேற்று பிரதி அமைச்சர் பதவியில் இருந்து அருந்திக்க பெர்னாண்டோ நீக்கப்பட்டுள்ளார். (5)

## சுயநலனுக்காக இராணுவத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டார்

### பொன்சேகா மீது சீறுகிறார் நாமல்

கொழும்பு, செப். 13



ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராகச் சாட்சியமளிக்கத் தயாராக உள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியிருப்பது நாட்டின் இராணுவத் தைத் தங்களது சொந்த நலனுக்காகப் பன்னாட்டுச் சமூகத்திடம் காட்டிக் கொடுக்கும் செயல் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தற்போதைய அரசு இராணுவத்தைப் பன்னாட்டுச்சமூகத்தின் முன் சிரம் தாழ்த்த முயற்சிப்பதாக நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தோம். சிலர் நாம் ஆட்சியைக் கவிழ்க்க இதனைச் செய்கிறோமா என்று சிந்தித்தனர். முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா, ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சாட்சியமளிக்கத் தயார் என்று கூறியுள்ளமையின் மூலம் அது வெளிப்படையாகத் தெரிகின்றது.

ஜெகத் ஜயசூரிய மீது போர்க் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கும் காலப்பகுதியில், பொன்சேகாவே இராணுவத் தளபதியாக இருந்தார். பொன்சேகா நினைத்திருந்தால் யார் எது சொன்னாலும் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அவர் அதைச் செய்யாமல் ஆதாரம் சேர்த்ததன் மர்மம் தான் புரியவில்லை.

பொன்சேகாவின் குற்றச்சாட்டில் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் உத்தரவின் பேரிலேயே இது நடைபெற்றுள்ளதாகக் கூறுகிறார். இவர் எங்கே, எந்த நோக்கத்தோடு வருகிறார் என்பதை இதன் மூலமே அறிந்து கொள்ளலாம். அங்குநடைபெற்றபோர்க்குற்றச்சாட்டுக்களின் பின்னால் கோத்தபாய ராஜபக்ச உள்ளார் என்பதன் மூலம், போர் விடயங்கள் அனைத்தும் கோத்தபாய ராஜபக்ச போன்ற உயர் மட்டத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளதை இவர் ஏற்றுக்கொள்கிறார். ஆனால், போரை வென்றது நானே என்று தம்பட்டமும் அடிக்கின்றார். இது எந்த வகையில் நியாயமாகும்? இவர் முன்வைக்கும் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமாக இருந்தால் அவர் பொய்யான தளபதியாக இருந்துள்ளார் என்பது தானே உண்மை - என்றார். (5)

## 'காஸ்' விலை உயருமா?

### அமைச்சரவையில் ஆராய்வு

கொழும்பு, செப். 13

சமையல் எரிவாயுவின் விலைகளில் அதிகரிப்புச் செய்வது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இதன்போது வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றுள்ளன. எரிவாயுவின் விலை நூற்றுக்கு எட்டு வீதத்தால் அதிகரிக்கப்படவேண்டுமென அமைச்சரவையில் முன்மொழியப்பட்டபோதிலும் பல அமைச்சர்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். சிலர் இதனை ஐந்து வீதமாக அதிகரிக்கலாம் எனவும் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சரியான தீர்மானமொன்றை எடுப்பதற்காக இந்த விடயத்தை மீண்டும் ஆராய்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் ஆரம்பகட்ட முன்மொழிவு யோசனைகளும் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (5)

## பதவி பறிப்பு எதிர்பார்த்ததுதான்

### 'கூலாகச்' சொல்கிறார் அருந்திக்க

கொழும்பு, செப். 13

எனது பதவி பறிக்கப்படும் என்பது முன்கூட்டியே எனக்குத் தெரியும். இந்தப் பதவி பறிப்பால் நான் அதிர்ச்சியடையவில்லை. இவ்வாறு முன்னாள் பிரதி அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ, 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சுப் பதவியிலிருந்து அரச தலைவரால் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். பதவி நீக்கம் தொடர்பில் அவரிடம் வினவிய போது மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்குள் இருந்துகொண்டு அதன் குறைகளையும், மக்கள் கருத்துக்களையும் சுட்டிக்காட்டுவதாலேயே எம்மை வேண்டாதவர்களாகப் பார்க்கின்றனர். எனது பதவி பறிக்கப்படும் என்பது முன்கூட்டியே தெரியும். இதனால் நான் அதிர்ச்சியடையவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு இழுத்தடித்து வருகின்றது. நிறைவேற்று அரச தலைவருக்குரிய அதிகாரங்களைப் பறித்து அவற்றை நாடாளுமன்றத்துக்கு வழங்குவதற்குரிய முயற்சி இடம்பெறுகின்றது.

இதற்கு நாம் எதிர்ப்பை வெளியிட்டோம். இவ்வாறான காரணங்களால்தான் எம்மை ஓரங்கட்டப் பார்க்கின்றனர். எது எப்படியே எனது அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் பற்றி அடுத்த வாரத்துக்குள் அறிவிக்கப்படும் - என்றார். (5)

## சுகாதார ஊழியர்களுக்கே சுகாதாரமற்ற உணவு!

கொழும்பு, செப். 13

சுகாதாரச் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படுபவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டவர்களுக்குப் பழைய உணவுகளை வழங்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் செயலர் ஜனக்க சுகததாசவின் பணிப்புரைக்கமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 3 ஆயிரத்துக்கும் அதிக எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டதுடன், அவர்களுடன் வந்த உறவினர்களுடன் சேர்த்து சுமார் 5 ஆயிரம் பேர் பங்கேற்றுள்ளனர்.

இவர்களுக்கான இரவு உணவு வழங்கும் பொறுப்புத் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டதுடன், இரவு உணவுப் பொதிக்காக 350 ரூபா அறவிடப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தாலேயே பழைய உணவு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

## நாய், பூனைகளை பாதுகாக்க வழக்கு

கொழும்பு, செப். 13

நாய்கள் மற்றும் பூனைகளைக் கொலை செய்வதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நாய்கள் மற்றும் பூனைகளை ஈவிரக்கமற்ற முறையில் கொலை செய்வதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென கோரிக்கை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை நவம்பர் மாதம் 13ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு, நேற்று விசாரணைக்கு எடுத்துகொள்ளப் பட்டபோது, மனு மீதான விசாரணைத் திகதியை நீதிமன்றம் அறிவித்தது.

அடிப்படை உரிமை மனுவானது, பௌத்த தேரர்கள் 25 பேர் உள்ளிட்ட 29 பேரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (5)

## முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தா அரசியல் சாக்கடைக்குள் விழ வேண்டாம்

### அமைச்சர் டிலான் தெரிவிப்பு

முன்னாள் பாதுகாப்புச் செயலர் அரசியலுக்குப் பொருத்தமற்றவர். அரசியல் என்ற சாக்கடைக்குள் விழாமல் அவர் விரும்பினால்கொழும்புநகரை அழகுபடுத்தும் வேலையை அவரிடம் ஒப்படைக்க முடியும் என்றுராஜாங்கஅமைச்சர்டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச நகர அபிவிருத்தி அமைச்சின் செயலராக இருந்து கொண்டு கொழும்பு நகரை அழகுபடுத்தினார். இப்போது அந்த அழகைக் காணமுடியாதுள்ளது. அவர் மிகவும் திறமையான அரச அதிகாரி.

அவர் அரசியலுக்குப் பொருத்தமற்றவர். அரசியலுக்கு வந்தால் அவர் சரத் பொன்சேகா போல் ஆகிவிடுவார். இராணுவ அதிகாரிகள், பாதுகாப்புச் செயலர்கள் அரசியலுக்குப் பொருத்தமில்லை. ஆனால், சிறந்த அதிகாரி என்பதை கோத்தா பாதுகாப்புச் செயலராகவும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலராகவும் இருந்து நிரூபித்தார்.

மகிந்த ஆட்சியில் படையினரைத் தேவையற்ற வேலைகளுக்குப் பயன்படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. ஆனால், படையினர் அவ்வாறு செயற்பட்டதன் காரணமாகவே கொழும்பு நகர் அழகானது. போர் இல்லை என்றால் படையினர் அதிகமாக உள்ளனர் என்றால் அவர்களுள் பொறியியலாளர்கள், மரவேலை செய்பவர்கள் போன்றவர்கள் இருந்தால் அவர்களை நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவதில் தப்பில்லை. அதைத்தான் கோத்தபாய மேற்கொண்டு, கொழும்பை அழகுபடுத்தினார். நாமும் அவ்வாறு செய்ய வேண்டும். படையினரை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும்.

கோத்தா அரசியல் என்ற சாக்கடைக்குள் விழக் கூடாது. அவர் விரும்பினால்கொழும்பு நகரை அழகுபடுத்தும் வேலையை ஒப்படைக்க முடியும் - என்றார். (5,3)

# ஒற்றையாட்சியே ஒரே வழி

## மலையகத்தைச் சுட்டிக்காட்டி கூட்டாட்சியை எதிர்க்கிறது அஸ்கிரிய பீடம்

கொழும்பு, செப். 13
ஒற்றையாட்சிக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு அரசியல் கோரிக்கைக்கும் செவிசாய்க்க முடியாது. வடக்கு மாகாணத்துக்குக் கூட்டாட்சி அல்லது கூடுதல் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால்மலையகம் அடுத்தபடியாகப் போர்க்கொடி தூக்கும் என்று அஸ்கிரிய பீடத்தின் தலைமைச் செயலர் மெதகம தம்மானந்த அநுநாயக்க தேரர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் எம்மைக் காலம் கடந்தாவது சந்திக்க வந்தார். அவரைச் சிறப்பாக வரவேற்றோம். அவரை அரசியல்வாதியாக அல்லாது சிறந்த நீதியரசராகவே நாம் காண்கின்றோம்.
வடக்கு மாகாணத்தில் மக்களின் நிலை மோசமாகக் காணப்படுகின்றது. அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதில் காட்டும் ஆர்வத்தை மக்களின் அடிப்படைக் குறைகளைத் தீர்ப்பதில் காட்டவில்லை. இதனை நாம் உணர்ந்தோம்.
கூட்டாட்சி முறையில் நாடு பிளவுபடாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட அரசியல்வாதிகள் கூறுகின்றனர். மாகாணசபைகளுக்கு ஏற்கனவே அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. கூட்டாட்சி முறைமையை நாட்டுக்குக் கொண்டு வந்து அதிகாரத்திற்குள் மேலும் முரண்பாட்டுத் தன்மையை உருவாக்கக் கூடாது. உலக நாடுகளின் ஆட்சி முறைமையை இலங்கையுடன் ஒப்பிட்டுக் கூறுவது ஏற்புடையதல்ல - என்றார். (5)

# இராணுவம் மீதான குற்றச்சாட்டுக்களை தகர்த்தெறிவேன்

## ஜெனிவாவிலிருந்து சரத் வீரசேகர சூளுரை

கொழும்பு, செப். 13
இராணுவத்தினருக்கு எதிராகப் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்களை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் தகர்த்தெறிவேன். இவ்வாறு முன்னாள் கடற்படை அதிகாரியான ரியர் அட்மிரல் சரத்வீரசேகர, 'உதயனுக்குத்' தெரிவித்தார்.
மகிந்த அணி சார்பில், ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரின் பக்க அமர்வுகளில் சரத் வீரசேகர பங்கேற்றுள்ளார்.
அங்கிருந்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் பங்கேற்றுப் படையினருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போலிப் பரப்புரையை முறியடிப்பதற்குரிய நடவடிக்கைகளில் இறங்கவுள்ளேன். இலங்கைப் படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை எனவும் ஐ.நா. விடமும் அதன் கிளை அமைப்புக்களிடமும் எடுத்துரைக்கவுள்ளேன். இதனூடாகப் புலம்பெயர் அமைப்புகளின் குற்றச்சாட்டுகள் போலியானவை என்பது அம்பலத்துக்குவரும்.
ஜெனிவாவில் 35ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்று உப மாநாடுகளில் உரையாற்றிப் படைத்தரப்பு நியாயங்களை விளக்கினேன். நிகழ்வில் பங்கேற்றிருந்த பன்னாட்டுத் தரப்புக்கள் பலவும் இதனை ஒரு திருப்பு முனையாகவே பார்த்தன. இருப்பினும் தமிழ்ப் புலம்பெயர் அமைப்புக்களின் பக்கமிருந்து எமக்குக் கடும் எதிர்ப்புக்கள் வந்தன.
அந்த அமைப்புக்கள் இந்தக் கூட்டத் தொடரிலும் பங்கேற்கும். அவர்களிடமிருந்து எதிர்ப்புக்கள் வரும். இராணுவம் பற்றி அவர்கள் கூறும் நிலைப்பாடுகள் தவறானது என்பதையும் எடுத்துக்காட்ட முனைவோம். இந்தச் செயற்பாட்டுக்குத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், பெங்கமுவே நாலக்க தேரர் தலைமையிலான இராணுவ வீரர்களைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம், உலகச் சிங்களவர் பேரவை ஆகிய அமைப்புக்கள் உந்துசக்தியாக இருக்கின்றன - என்றார். (5)

# சுற்றுலாவிகளின் வருகை அதிகரிப்பு

கொழும்பு, செப். 13
கடந்த ஆண்டின் ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 2.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றது.
2016ஆம் ஆண்டின் முதல் 8 மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு முதல் எட்டு மாத காலம் வரையில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 3.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.
வெளிநாட்டுப் பயணிகளின் வருகை காரணமாக, கடந்த பெப்ரவரி மாதமளவில் 81 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த காலங்களில் நிலவிய வறட்சி மற்றும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலைய மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக நாளொன்றுக்கு 8 மணித்தியாலம் மூடப்பட்டமை காரணமாக, நூற்றுக்கணக்கான வானூர்திப் போக்குவரத்துப் பயணங்கள் நிறுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# 2 1/2 கோடியை விழுங்கிய சிரந்தி ராஜபக்சவின் கொண்டாட்டம்

## விசாரணை வேண்டும் என்கிறது ஜே.வி.பி.



கொழும்பு, செப். 13
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மனைவி சிரந்தி ராஜபக்ச 2014ஆம் ஆண்டு பரிஸ் ஹோட்டலில் தங்கி அரச பணத்தில் இரண்டரைக் கோடி ரூபா செலவு செய்து வெசாக் பண்டிகை கொண்டாடியமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காகச் சிறப்பு நீதிமன்றத்தை அமைக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் நலிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்ததாவது:
ஊழல், மோசடியில் மகிந்த அரசுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்று இந்த அரசு காட்டிக்கொண்டு இருக்கின்றது. இந்த அரசு ஆட்சிக்கு வந்து சிக்கிய முதல் விவகாரம் மத்திய வங்கி ஊழலாகும். ஐக்கிய தேசிய கட்சியின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரை இந்த விவகாரத்தில் இருந்து காப்பாற்றினர்.
அவ்வாறு காப்பாற்றியமைக்காக அவர்கள் எவ்வாறான சலுகைகளைப் பெற்றனர் என்று எமக்குத் தெரியும். அவ்வாறு சலுகைகளைப் பெற்றவர்தான் ரவி கருணாநாயக்க. இன்று அவர் அதன் காரணமாக அமைச்சுப் பதவியை இழந்துள்ளார்.
அவன்கார்ட் சம்பவத்தின்போதும் இவர்கள் இவ்வாறுதான் நடந்து கொண்டனர். பல அரசியல்வாதிகள் அந்த நிறுவனத்தைப் பாதுகாத்தனர். இதனால் திலக் மாரப்பன அமைச்சுப் பதவியை இழந்தார். இவ்வாறு இரண்டு அரசுகளும் திருடுவதில் வல்லவர்கள் என்று நிரூபித்துள்ளனர்.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மனைவி சிரந்தி ராஜபக்ச 2014ஆம் ஆண்டு பரிஸ் ஹோட்டலில் தங்கி வெசாக் தினத்தைக் கொண்டாடினார். மூன்று நாள்கள் தங்கியமைக்கு அரச பணத்தில் இரண்டரைக் கோடி ரூபா செலவானது. ஒரு நாள் தங்குவதற்கு அந்த ஹோட்டல் அறைக்கு 25 லட்சம் ரூபாவுக்கு மேல் செலவு செய்யப்பட்டது. இவ்வாறு மொத்தம் இரண்டரைக் கோடி மக்களின் பணத்தில் இருந்து ரூபா செலவு செய்யப்பட்டது.
இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக சிறப்பு நீதிமன்றத்தை அமைக்க வேண்டும். அல்லது இருக்கின்ற நீதிமன்றங்களில் ஒன்றை ஒதுக்கித் தொடர்ச்சியாக விசாரணை நடத்த வேண்டும் - என்றார். (5,3)

## உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள் திருத்த இரண்டாம் கட்டம் ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட வினாத்தாள் திருத்தப் பனிகளுக்காக இன்று தொடக்கம் 26ஆம் திகதி வரை குறிப்பிட்ட சில பாடசாலைகள் மூடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.
7 பாடசாலைகள் முழுமையாக மூடப்படுவதாகவும் 20 பாடசாலைகள் பகுதி அளவில் மூடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பகுதி அளவில் மூடப்படும் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் வழமை போல் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள அதே வேளை, முழுமையாக மூடப்படும் பாடசாலைகள் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, வவுனியா சைவப் பிரகாச வித்தியாலயம் என்பன பகுதியளவில் மூடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (5)

## போதைப் பொருள்கள் விற்ற 3பேர் கைது

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட மூன்று பேரை நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளதாகத் திருகோணமலை பிராந்தியப் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.
தமக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கேரளா கஞ்சா போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குச்சவெளி வடலிக்குளம் பகுதியில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும், சாகர புற பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த அதே இடத்தைச் சேர்ந்தவரை 3 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்துள்ளதாகவும், கோடா 6 ஆயிரத்து 750 மில்லி லீற்றரை வைத்திருந்த குற்றச்சாட்டில் சாகரபுற பகுதியைச் சேர்ந்த பெண்ணைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (5,45)

# மகிந்த அணியில் சிலர் 2029வரை தேர்தலில் போட்டியிட முடியாது

## பிரதி அமைச்சர் அபயசிங்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 13
ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ள மகிந்த அணியிலுள்ள சிலர் 2018ஆம் ஆண்டு அல்லது 2019ஆம் ஆண்டு சிறைக்குச் செல்வார்கள். அவர்கள் 2029ஆம் ஆண்டு வரை தேர்தலில் போட்டியிட முடியாதநிலைஏற்படும். இவ்வாறு பிரதி அமைச்சர் அசோக அபயசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உள்ளூராட்சி சபைத் தேர்தலை நாம் வேண்டுமென்றே ஒத்திப்போடவில்லை. கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணய குளறுபடியே இதற்குக் காரணம். மகிந்தவின் தேவைக்கு ஏற்பவே எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. அதைத் திருத்துவதற்காகவே இவ்வாறு தேர்தலை ஒத்திப்போட்டோம். நாம் விரைவில் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். தேர்தலில் அனைத்து சபைகளையும் கைப்பற்றுவோம். மகிந்த தரப்பினர் இந்தத் தேர்தலில் எப்படி வெற்றி பெறுவார்கள் என்று பார்ப்போம்.
மகிந்த தரப்பின் பெரும்பாலானவர்கள் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்கானவர்கள். அவர்கள் நீதிமன்ற பிணையில் உள்ளனர். எமது நீதிமன்ற செயற்பாடுகளின் அடிப்படையில் அவர்களுக்கு 2018ஆம் ஆண்டு அல்லது 2019ஆம் ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும்.
தாஜுதீன் கொலை, சி.எஸ்.என். தொலைகாட்சி, அவன்கார்ட், மல்வானை மாளிகை, தெகிவளை வீடு கொள்வனவு எனப் பல குற்றச்சாட்டுக்கள் ஒரு குடும்பத்துக்கு எதிராக உண்டு. அதேபோல், மகிந்த ஆட்சியில் இருந்த பல அமைச்சர்களுக்கு எதிராகவும் குற்றச்ச்சாட்டுக்கள் உள்ளன.
இவர்களின் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் 2018ஆம் ஆண்டு அல்லது 2019ஆம் ஆண்டு நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படலாம். எமது நாட்டு சட்டத்தின்படி ஆறு மாதங்களுக்கு மேல் சிறையில் இருந்தால் ஏழு வருடங்களுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாது.
அந்த அடிப்படையில், இவர்கள் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கழித்து சிறையில் இருந்து விடுதலையானாலும் 2029ஆம் ஆண்டு வரை தேர்தலில் போட்டியிட முடியாது. அதன்பிறகு அரசியலில் ஈடுபடுவதற்கு அவர்களின் வயது அனுமதிக்காது - என்றார். (5,3)

# திருமலையில் உணரப்பட்டது நிலஅதிர்வு!

கொழும்பு, செப். 13
திருகோணமலையின் சில பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு நில அதிர்வு உணரப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று மாவட்ட இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.
மாவட்டத்தின் மூதூர், தோப்பூர் பகுதிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 8.35 மணியளவில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. மேசை மீதிருந்த கண்ணாடிப் பாத்திரங்கள் கீழே விழுந்து உடைந்ததாகவும், கட்டடங்களும் அதிர்ந்ததாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
'சிறிய அதிர்வு உணரப்பட்டதாக மக்கள் பலரும் தெரிவித்தனர். இது தொடர்பில் எந்தவொரு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை' என்று மாவட்ட இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (5,45)

# வெலிக்கடைச் சிறைப் படுகொலை; கோத்தா, ஜெகத்திடம் விசாரணை

கொழும்பு, செப். 13

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 27 கைதிகள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய உள்ளிட்ட உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில், 2012ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி நடந்த வன்முறைகளின் போது, 27 கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துடன், முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய நேரடியாகத் தொடர்புபட்டிருந்தார் என்று, பிராந்திய அபிவிருத்தி அமைச்சரான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, அண்மையில் குற்றம்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், வெலிக்கடைச் சிறைச்சாலைக் கொலைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய, முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க உள்ளிட்ட உயர் மட்ட இராணுவ, பொலிஸ் அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காகக் கோத்தபாய ராஜபக்சவையும், ஏனைய அதிகாரிகளையும் குற்றப் புலனாய்வுப் பிரிவுத் தலைமையகத்துக்கு இன்று வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (5)

# எய்தவன் இருக்க அம்பை நோவதேன்?

## சில் துணி தீர்ப்பு விடயத்தில் சரத் பொன்சேகாவின் கேள்வி இது



கொழும்பு, செப். 13

சில்துணி (விகாரைகளுக்கு வழங்கப்பட்ட வெள்ளைத் துணி) மோசடி வழக்கு விவகாரத்தில், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவையும் கைது செய்ய வேண்டும் என்று, முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டதில் எந்தத் தவறும் கிடையாது. முன்னாள் ஆட்சியாளர்களின் உத்தரவுக்கு இணங்கச் செயற்பட்டதாலேயே அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது. ஆட்சியாளர்கள் கூறியதற்காக யாரையாவது பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி யிருந்தால் அதை மன்னிக்க முடியுமா? மோசடிக்குக் காரணமான - உத்தரவிட்ட மகிந்த ராஜபக்சவையும் கைது செய்ய வேண்டும். இவர்களுக்கு நீதிமன்றத் தண்டத்தைச் செலுத்த பணம் சேகரிப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் சில் துணி ஒன்றின் விலை 15 டொலராக இருந்தாலும் அதற்கான விலை 50 டொலர் என்று குறிப்பிட்டே 600 மில்லியன் மோசடி செய்யப்பட்டுள்ளது. இவர்களிடம் மோசடி செய்த பெருமளவு பணம் இருக்கும். தண்டத்தைச் செலுத்துவது இவர்களுக்குப் பிரச்சினை கிடையாது - என்றார். (5)

# 20ஆவது திருத்தத்தை கூட்டமைப்பு ஏன் ஆதரித்தது?

## விளக்குகிறார் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர்

திருகோணமலை, செப். 13

20ஆவது திருத்தம் நாடாளுமன்றில் இரண்டாம் வாசிப்புக்காக எடுத்துக் கொள்ளப்படும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த திருத்தங்கள் உள்ளடக்கப்படும். இதனாலேயே அந்தத் திருத்தச் சட்டவரைவைக் கிழக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

20ஆவது திருத்தச் சட்டவரைவு கிழக்கு மாகாணசபையில் நேற்று முன்தினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சட்டவரைவுக்குப் பெரும்பான்மையானோர் ஆதரவு தெரிவித்தனர். அதனடிப்படையில் சட்டவரைவுக்குக் கிழக்கு மாகாண சபை ஆதரவு வழங்குவதாக, அவைத் தலைவர் அறிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சட்டவரைவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். ஆதரவு வழங்கியமைக்கான காரணம் தொடர்பில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் சி.தண்டாயுதபாணி தெரிவித்ததாவது:

> அரசு அனுப்பிய 20ஆவது திருத்தச் சட்டவரைவுடன் எங்களுக்கு உடன்பாடு இருக்கவில்லை. மாகாணசபைகளின் அதிகாரங்களைக் கொழும்பு அரசிடம் தாரைவார்ப்பதற்கு நாம் தயாரில்லை. திருத்தங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

அரசு அனுப்பிய 20ஆவது திருத்தச் சட்டவரைவுடன் எங்களுக்கு உடன்பாடு இருக்கவில்லை. மாகாணசபைகளின் அதிகாரங்களைக் கொழும்பு அரசிடம் தாரைவார்ப்பதற்கு நாம் தயாரில்லை. திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரினோம். எமது கட்சியின் தலைமையிடமும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தோம்.

திருத்தங்கள் மேற்கொள்வதற்கு அரசு இணங்கியது. அதிகாரங்கள் கொழும்பு அரசின் கைக்குச் செல்லாது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. சட்டமா அதிபர் உயர் நீதிமன்றிலும் அதனை அறிவித்து விட்டார்.

இந்தத் திருத்தங்கள், 20ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் இரண்டாவது வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது மேற்கொள்ளப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது. இதனாலேயே நாம் மாகாணசபையில் அதனை ஆதரித்தோம் - என்றார்.

இதேவேளை, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக், மாகாணசபையில் 20ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்படவுமில்லை அது நிறைவேற்றப்படவுமில்லை என்று தெரிவித்துள்ளார். 20ஆவது திருத்தச்சட்டத்தில் முன்வைக்க வேண்டிய திருத்தங்களே சபையில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். (5,46)

### லலித் வீரதுங்க, பெல்பிட்டியவின்

# பொதுமன்னிப்பு கோரிக்கை மைத்திரியால் நிராகரிப்பு

சில் துணி மோசடி தொடர்பில் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டு சிறையிலுள்ள முன்னாள் அரச தலைவர் மகிந்தவின் செயலர் லலித் வீரதுங்க, தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்டிய ஆகியோருக்குப் பொதுமன்னிப்பு வழங்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மறுப்புத் தெரிவித்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இவ்விருவருக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பு வழங்கவேண்டுமென அரச துறையிலுள்ள மூத்த அதிகாரிகள் சிலரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையே அரச தலைவர் மைத்திரிபாலவினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் காலத்தில் சில் துணிகளை வழங்கத் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் 600 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தியதாக இவர்கள் இருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. வழக்கை விசாரித்த கொழும்பு உயர்நீதிமன்றம், இருவரையும் குற்றவாளிகளாக இனம்கண்டு, மூன்று வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# தமிழர்களை மைத்திரி அரசும் நம்பவில்லை

## படைக்குறைப்பு இன்மைக்கு இதுவே காரணம் என்கிறார் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன்



கொழும்பு, செப். 13

வடக்கில் இராணுவத் தளங்களை மூடுவதற்கு மறுப்பதானது, தமிழ் மக்களை அரசு நம்பவில்லை என்பதையே அர்த்தப்படுத்துகிறது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கண்டியில் மல்வத்த பீடத்தின் மகாநாயக்கருடனான சந்திப்பின் போது, வடக்கில் இராணுவத்தின் இருப்பை ஒரு அச்சுறுத்தல் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி, கொழும்பு ஆங்கில ஊடகம் கேள்வி எழுப்பியிருந்தது. இதற்கு வழங்கியுள்ள பதிலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் ஆயுதப்படைகளின் பிரசன்னம் தேவையில்லை. போர் முடிவடைந்து பல ஆண்டுகளாகி விட்டது. அங்கு இராணுவப் பிரசன்னத்துக்கு எந்தவொரு நியாயமும் இல்லை. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர், யாழ்ப்பாணக் குடாநாடு உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் இருந்து குறிப்பிடத்தக்களவில் ஆயுதப்படைகளின் பிரசன்னம் குறைக்கப்படவில்லை.

இராணுவத்தினர் சுமார் 60 ஆயிரம் ஏக்கர் காணிகளை வடக்கில் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். இதுவரையில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் இருந்து தான் வெளியேறியுள்ளனர். வடக்கில் எத்தனை பிரிகேட் படையினர் நிலை கொள்ள முடியும் என்று முடிவு செய்யும் அல்லது பரிந்துரைக்கும் வேலை என்னுடையது அல்ல.

அதிகமாகப் பொலிஸாரை நிறுத்திக் கொண்டு இராணுவத்தினரை அரசு விலக்க முடியும். சட்டம், ஒழுங்கை உறுதிப்படுத்துவதற்கு தேவைப்பட்டால், பொலிஸாரின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க முடியும்.

இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவுடன், அவர் யாழ். படைகளின் தளபதியாக இருந்தபோது கலந்துரையாடியுள்ளேன்.

வடக்கில் இராணுவத்தினரின் இருப்பு, நல்லிணக்க செயல்முறைகளுக்குத் தடையாக உள்ளதுடன் தமிழ் மக்களுக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. வடக்கில் இராணுவத் தளங்களை மூடுவதற்கு மறுப்பதானது, தமிழ் மக்களை அரசு நம்பவில்லை என்பதையே அர்த்தப்படுத்துகிறது - என்றார்.

முன்னைய ஆட்சியாளர் மகிந்த ராஜபக்சவின் காலத்திலும் வடக்கில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# ஐ.நா. பொதுச் சபைக் கூட்டம் மைத்திரிக்கு வில்லங்கமாகுமா?

## வடகொரியா விவகாரம் சிக்கலை தோற்றுவிக்கலாம் என எதிர்பார்ப்பு

கொழும்பு, செப். 13

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, வடகொரியா தொடர்பான ஐ.நா.வின் கடுமையான கேள்விகளுக்கு முகம்கொடுக்க நேரிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடகொரியா மீது, ஐ.நா. பாதுகாப்புச் சபை கடந்த ஆண்டு விதித்த பொருளாதாரத் தடைகளுக்குப் பின்னரும், அந்த நாட்டிடம் இருந்து இரும்பு, உருக்கு உள்ளிட்ட பொருள்களை இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் இறக்குமதி செய்திருந்தன. இது பற்றிய தகவல்களை ஐ.நா கண்காணிப்புக் குழு அம்பலப்படுத்தியுள்ளது.

ஐ.நா.வின் தடைகளை மீறி, வடகொரியாவுடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்ததாக இலங்கை மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அடுத்தவாரம் நியூயோர்க்குக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, அவருக்கு ஐ.நா. தரப்பில் கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்படலாம் என்றும், அவரிடம் கடுமையான கேள்விகள் தொடுக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் ஐ.நா.வுக்கும், இலங்கைக்கும் இடையில் சுமுகமான உறவுகள் இருக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த பின்னர், ஐ.நா.வுடனான உறவுகளை இலங்கை சீர்படுத்தி வந்தது. இந்த நிலையில், வடகொரிய விவகாரம், அரசுக்கும் ஐ.நா.வுக்கும் இடையிலான உறவுகளில் பின்னடைவை ஏற்படுத்தக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (5)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## கொழும்புக்கான எச்சரிக்கை

கொழும்பு அரசு விழித்துக்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் தெளிவுபடுத்தியிருக்கிறார். கொழும்பு இந்தப் போக்கிலேயே சென்றால் அது பன்னாட்டு விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தி ருக்கிறார்.

அத்தகைய அவசியத்தில் இருந்து விடுபடுவதற்கு கொழும்பு உடனடியாகச் செய்யவேண்டியவற்றையும் அவர் பட்டியலிட்டிருக்கிறார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகத்தின் பணிகளை உடனடியாக ஆரம்பிப்பது, நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான மற்றைய விடயங்களை விரைவுபடுத்துவது, அதாவது படையினரின் பிடியில் உள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் வழக்குகளுக்கு முடிவுகட்டுவது போன்றவற்றைச் செய்வதன் மூலம் தேங்கிப் போயிருக்கும் நிலைமாறுகால நீதிப் பொறிமுறையின் இயக்கத்தை மீட்டெடுக்க முடியும் என்று வழிகாட்டியிருக்கிறார்.

தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக உலக மனித உரிமைகள் சட்டத்திற்கு மதிப்பளிக்கக்கூடிய உள்ளூர் சட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பின் நகர்வுகளை, நடவடிக்கைகளை முக்கியமாக அதன் பித்தலாட்டங்களையும், ஒப்புக்குச் சப்பாணியான செயற்பாடுகளையும், தெளிவாகவும் உன்னிப்பாகவும் ஐக்கிய நாடுகள் சபை கண்காணித்து வருகின்றது என்பதையும் ஹுசைனின் பேச்சு எடுத்துக் காட்டியிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதாகக் கொழும்பு ஏற்றுக்கொண்ட பின்னர், அதனைச் செயற்படுத்துவது வெறுமனே கடமைக்கானதாக அல்லது இதை முடித்துவிட்டோம், அந்தை முடித்துவிட்டோம் என்று அறிக்கையிடுவதற்கானதாக அரசால் நோக்கப்படக்கூடாது என்றும் ஹுசைன் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அனைத்து மக்களுக்கும் அவசியமானது என்று எடுக்கப்பட்டு, அவையனைத்தும் செயற்படுத்த வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றுவதற்காக இங்கே நல்லிணக்கமும் நிலைமாறு கால நீதி முயற்சிகளும் இடம்பெற்றுவருகின்றன என்று காட்டுவதற்கு கொழும்பு முயல்கிறதே அல்லாமல் உருப்படியான, உண்மையான, நேர்மையான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்கிற தமிழ் மக்களின் குற்றச்சாட்டின் வெளிப்பாடே ஹுசைனின் குரல்.

நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை உருவாக்குவதிலும் பொறுப்புக்கூறுவதிலும் அரசு உண்மையுடன் செயற்பட வேண்டும் என்பதையே அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். கொழும்பு இப்போது அப்படி நடக்கவில்லை என்பதை வடக்கில் நடந்துவரும் மக்கள் போராட்டங்கள் வெளிப்படுத்துகின்றன என்பதை அரசுக்குச் சுட்டிக்காட்டவும் ஹுசைன் மறக்கவில்லை.

இவ்வளவிற்கும் பின்னரே அரசு இவ்வாறு தொடர்ந்து செயற்பட்டால் பன்னாட்டு விசாரணை ஒன்றை மேலும் கட்டாயமாக்கிவிடும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதாவது இப்போதே அந்தத் தேவை இருக்கிறது, கொழும்பு இப்படியே செயற்பட்டுக்கொண்டிருந்தால் அது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கொழும்பு அரசு அதனைப் புரிந்துகொண்டு நடப்பதே அதற்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது. ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக பிரேசிலில் போர்க்குற்ற மனு தாக்கல் செய்யப்பட்டதற்கே பதறுபவர்கள், ஒட்டுமொத்த பன்னாட்டு விசாரணையை எப்படி ஏற்பார்கள்? எனவே அதிலிருந்து தப்பிக்கொள்ளவாவது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தைத் தாமதிக்காது அப்படியே நடைமுறைப்படுத்த கொழும்பு முன்வரவேண்டும்.







# சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றுவாரா மகிந்த?

எம்.ஐ.முபாறக்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டு நிறைவு மாநாடு கடந்த 3ஆம் திகதி இடம்பெற்றதிலிருந்து அந்தக் கட்சியைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. கட்சியின் ஆட்சியும், அரசுத்தலைவர் பதவியும் சுதந்திரக்கட்சிக்கு இருந்தாலும்கூட, அதைப் பலம் வாய்ந்த கட்சி என்று சொல்ல முடியாது. தற்போதுள்ள அரசியல் நிலவரத்தின்படி, இனி வரும் தேர்தல்களில் அந்தக் கட்சி தனித்துப் போட்டியிட்டால் வெற்றிபெறுவது சந்தேகமே. அதற்குக் காரணம் மகிந்த தரப்பின் செயற்பாடுகள்தான்.

மகிந்த என்ற பாத்திரம் மைத்திரி எதிர்பார்க்காமல் தோன்றிய சவாலாகும். அரச தலைவர் தேர்தலில் தோல்வியடைந்ததும் எல்லோரையும் போல் மகிந்தவும் ஒதுங்கிப் போயிருந்தால், இன்று மைத்திரிக்குப் போட்டியாக இருந்திருக்கக் கூடியவர் தலைமை அமைச்சர் ரணில் மட்டுமே. ஆனால், தனது மகன் நாமலின் அரசியல் எதிர்காலத்துக்காகவும், தனது குடும்பம் மீதும் தனது சகாக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காகவும் மீண்டும் அரசியலில் குதித்த மகிந்தவால் மைத்திரி இன்று பெரும் தலையிடியை எதிர்நோக்கிவருகின்றார்.

சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் பதவியை மகிந்த அன்று வேறு வழியின்றி மைத்திரியிடம் ஒப்படைத்த போதிலும், மீண்டும் அந்தப் பதவியைக் கைப்பற்றுவதுதான் மகிந்தவின் இப்போதைய ஒரே திட்டமாகும்.

தனித்தரப்பாக தேர்தலில் குதித்து வெற்றி பெறுவதன் மூலம், சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் பதவியை மீண்டும் கைப்பற்ற முடியும் என்று மகிந்த நம்புகிறார். இனிவரும் தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சியை வெற்றிகொள்ள முடியாவிட்டாலும் பரவாயில்லை, சுதந்திரக் கட்சியை வீழ்த்தினாலே போதும் என்ற நிலைப்பாட்டில் மகிந்த இருக்கின்றார். அவ்வாறு சுதந்திரக் கட்சியை வீழ்த்தும்பட்சத்தில், கட்சி ஊடாகவும், மக்கள் ஊடாகவும் அழுத்தங்களைப் பிரயோகித்து கட்சியின் தலைமைத்துவப் பதவியைப் பிடிப்பதே மகிந்தவின் திட்டம்.

### மகிந்தவின் உரிமைக் கோரல் சரியானதா?

மைத்திரியிடம் மகிந்த கட்சியின் தலைமைத்துவப் பதவியை ஒப்படைத்தபோதிலும், அதை அவர் முழு விருப்பத்தோடு செய்யவில்லை. கட்சிக்குள் அப்போதிருந்த அழுத்தம் காரணமாகவே அதை விட்டுக்கொடுத்தார்.

ஆட்சி மாற்றத்தோடு மைத்திரி பக்கம் அடித்த வெற்றி அலையை மீறி, எதையும் செய்ய முடியாது என்பதை உணர்ந்த மகிந்த, கட்சிக்குள் அப்போது எழுந்த அழுத்தத்துக்குக் கட்டுப்பட்டு கட்சியின் தலைமைத்துவப் பதவியை மைத்திரியிடம் ஒப்படைத்தார். ஆனால் மகிந்தவின் பின்னால் ஒரு கூட்டம் தொடர்ந்து இருப்பதற்கு முடிவெடுத்ததால், அந்தப் பதவியை மீண்டும் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை மகிந்தவுக்கு முன்னரேயே இருந்தது. அதனால்தான் எந்த வித ஆர்ப்பாட்டமுமின்றி அந்தப் பதவி மைத்திரியின் கைகளுக்கு மிக இலகுவாக மாறியது.

ஆனால், நான் இன்னமும் சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து விலகவுமில்லை; விலக்கப்படவுமில்லை என்று மகிந்த அண்மையில் கூறியமை பொய் என்பதற்கான ஆதாரம் ஒருபுறம் இருக்கின்றபோதிலும், அவர் மீண்டும் அந்தப் பதவியை கைப்பற்றுவதற்கு முயலுகின்றார் என்ற உண்மையை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

மகிந்த இப்போதும் சுதந்திரக் கட்சியின் தலைவரா என்பதை முதலில் பார்ப்போம். அவர் 2015ஆம் ஆண்டின் அரச தலைவர் தேர்தலில் தோல்வியடைந்து அலரி மாளிகையில் இருந்து வெளியேறியதும், மகிந்தவின் வெற்றிக்காக உழைத்தவர்கள் அவர்களின் அரசியல் எதிர்காலம் குறித்துச் சிந்திக்கத் தொடங்கினர்.

மைத்திரியை கட்சியின் தலைவராக ஆக்கி, அவர் பின்னால் அணிதிரள்வதன் மூலமே தமது அரசியல் எதிர்காலத்தைப் பாதுகாக்க முடியும் என்பதை உணர்ந்த அவர்கள் உடனடியாக அவரைத் தலைவராக்கும் முயற்சியில் இறங்கினர்.

தற்போதைய அமைச்சர்கள் மகிந்த அமரவீர மற்றும் விஜித முனி சொய்சா போன்றவர்கள் அந்த முயற்சியில் மிகத் தீவிரமாக இறங்கினர். அரச தலைவர் மைத்திரிபால, அமரவீரவின் வீட்டுக்கு அழைக்கப்பட்டு, மகிந்தவின் ஆட்கள் 28பேர் அவருடன் குறித்த விடயம் தொடர்பில் பேச்சு நடத்தினர். தலைமைத்துவப் பதவியை ஏற்பதற்கு மைத்திரி அந்தக் கூட்டத்தில் இணக்கம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மகிந்தவிடமும் பேசப்பட்டது. சுதந்திரக்கட்சியின் தலைமைத்துவப் பதவியை மைத்திரியிடம் ஒப்படைக்க வேண்டியதன் அவசியத்தையும், கட்டாயத்தையும் அவர்கள் மகிந்தவிடம் விளக்கிக்கூறினர். ஒப்படைத்தே ஆக வேண்டும் என்றோர் அழுத்தம் இருப்பதை உணர்ந்த மகிந்த, அரைகுறை மனதுடன் அதற்குச் சம்மதித்தார்.

இதன் பின்னர் மகிந்தவும் மைத்திரியும், சமல் ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சமல் முன்னிலையில் இருவரும் பேசினர். அப்போது மைத்திரி மற்றும் மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவை எதிர்பார்த்து அந்த இல்லத்துக்கு வெளியே ஆவலுடன் காத்துக்கொண்டு நின்றனர்.

### சுதந்திரக் கட்சியை மைத்திரியிடம் ஒப்படைத்துவிட்டேன் என மகிந்த தெரிவிப்பு

சந்திப்பு முடிவடைந்து வெளியே வந்த மகிந்த, சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து "நான் சுதந்திரக் கட்சியை மைத்திரியிடம் ஒப்படைத்துவிட்டேன். நீங்கள் அவருடன் இணைந்து செயற்படுங்கள்". என்றார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் மைத்திரி, துமிந்த திஸாநாயக்க மற்றும் கே.டி.எஸ். குணவர்தன ஆகியோரின் கட்சி உறுப்புரிமை பறிக்கப்பட்டிருந்தது.

அங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதுபற்றி மகிந்தவிடம் கூறியபோது, உறுப்புரிமையை மீள வழங்கி ஆக வேண்டியதைப் பாருங்கள்

என்று மகிந்த பதிலளித்தார்.

ஓரிரு நாள்களுக்குள் அடுத்த கூட்டம் சமல்ராஜபக்சவின்வீட்டில்இடம்பெற்றது. சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான திகதி அந்தக்கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது. பிறகு மத்திய குழுக் கூட்டம் கூட்டப்பட்டு மேற்குறிப்பிட்டவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உறுப்புரிமை மீளவழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொதுக்குழுக் கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்திலேயே மைத்திரியிடம் சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவி ஒப்படைக்கப்பட்டது. மேலும்அனுரபிரியதர்சன யாப்பா கட்சியின் செயலாளராகவும், சுசில் பிரேமஜயந்த தேசிய அமைப்பாளராகவும், மகிந்த அமரவீர பிரதிச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு மகிந்தவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும், அவர் அதில் கலந்துகொள்ளவில்லை. ஆனால், மைத்திரிக்கு வாழ்த்துச் செய்தியை மாத்திரம் அனுப்பிவைத்திருந்தார்.

அதன்பின்னர் இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டங்கள் பலவற்றில் மகிந்த கலந்துகொண்டார். மைத்திரிக்கு ஆதரவாகவும் உரையாற்றினார்.

கட்சியின் 64ஆவது மாநாடு பொலன்னறுவையில் இடம்பெற்றபோது அதில் மகிந்த கலந்துகொண்டார். "நான் கட்சியை மைத்திரியிடம் ஒப்படைத்துவிட்டேன்" என்று அந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினார். மைத்திரிக்கு ஆதரவாகப் பேசினார். மைத்திரியிடம் மகிந்த தலைமைத்துவப் பதவியை ஒப்படைத்தமை உண்மை என்பதற்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் சாட்சியாகும். தான் கட்சியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து விலகவுமில்லை; விலக்கப்படவுமில்லை என்று மகிந்த இப்போது கூறுகின்றமை சுத்தப் பொய் என்பதையும், அவர் அரசியல் தேவை ஒன்றுக்காக இந்தப்பொய்யைக்கூறுகின்றார் என்பதையும் எம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

அப்படியென்றால் தன்னிடமிருந்து தலைமைத்துவப் பதவி பலவந்தமாக பறிக்கப்பட்டுள்ளது என்றொரு வதந்தியைப் பரப்பி மக்களிடம் அனுதாபத்தைப் பெறுவதற்கு மகிந்த முயற்சிக்கின்றார் என்று தெளிவாகச் சொல்ல முடியும். அப்போதே இதைக் கூறாமல் இரண்டு வருடங்கள் கழித்து இவ்வாறு கூறுகிறார் என்றால் அதற்கு இதுதான் காரணமாக இருக்கும்.

**மைத்திரி- மகிந்த முறுகல் ஆரம்பம்**

கட்சியின் தலைமைத்துவப் பதவியை ஒப்படைத்த மகிந்த அரசியலில் இருந்து ஒதுங்கிப் போய்விடுவார் என்றே மைத்திரி நினைத்தார். ஆனால், விமல் வீரவன்ச, உதயகம்மன்பில மற்றும் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட பலர் அவர்களின் அரசியல் இருப்புக்காக மகிந்தவை மீண்டும் அரசியலுக்கு இழுத்து வந்தனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு மகிந்தவுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும், தேர்தலின் பின்னர் அவரைத் தலைமை அமைச்சராக்க வேண்டும் என்றும் அவர்கள் மைத்திரியிடம்கோரிக்கைவிடுத்தனர். இந்தக் கோரிக்கையை மைத்திரி நிராகரித்தார். மகிந்தவுக்கு எதிராக ஊழல், மோசடிக்குற்றச்சாட்டுக்கள்இருப்பதால், மகிந்தவைத் தேர்தலில் நிறுத்துவது சரியல்ல என்று மைத்திரி கூறினார்.

மகிந்த அணியினர் அதற்கு இணங்கவில்லை. நாங்கள் கஞ்சா இலைச் சின்னத்திலாவது போட்டியிடுகிறோம். மைத்திரியின் ஆதரவு தமக்குத் தேவை இல்லை. மைத்திரி எங்கள் மேடையில் ஏறத் தேவையுமில்லை. அவர் ஐக்கிய தேசியக் கட்சி மேடைகளில் ஏறட்டும் என்று மகிந்த அணியினர் முழங்கினர்.

இதனால் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மைத்திரியைச் சந்தித்து நிலைமையை விளக்கினர். மகிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்காவிட்டால், கட்சி இரண்டாக உடைந்துவிடும் என்று கூறினர். கட்சியை இரண்டாக உடைத்துவிட்டார் என்ற அவப்பெயரை ஏற்க விரும்பாத மைத்திரி, போனால் போகட்டும் என்று மகிந்தவுக்கும் அவரது கூட்டத்துக்கும் வேட்பாளர்கள் நியமனம் வழங்கினார்.

மகிந்த அணிக்கு வேட்பாளர் நியமனம் வழங்கியது மாத்திரமன்றி தேர்தல் பரப்புரை நடவடிக்கைக்கு தலைமை தாங்குவதற்கும் மைத்திரி, மகிந்தவுக்கு இடங்கொடுத்தார். ஆனால், மகிந்த தரப்போ மைத்திரி தரப்பை தோற்கடித்து தாம் வெற்றி பெறுவதற்கே முயற்சி செய்தனர்.

அந்த வெற்றியைக் கொண்டு மைத்திரியிடம் பேரம் பேசி மகிந்தவுக்கு தலைமை அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொடுப்பதே மகிந்த அணியின் திட்டமாக இருந்தது. சுதந்திரக் கட்சி வென்றாலும் தோற்றாலும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தேசிய அரசை அமைப்பதும் ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக்குவதுமே மைத்திரியின் திட்டமாக இருக்கின்றது என்பதைத் தெரிந்தும்கூட மகிந்த அணியினர், வீம்புக்கு தலைமை அமைச்சர் பதவியைக் கேட்டுப் போராடினர். தேர்தல் பரப்புரையின்போது மைத்திரி தரப்பு உறுப்பினர்கள் பலரின் பெயர்களைச் சுட்டிக்காட்டி அவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று வெளிப்படையாகவே கூறிவந்தனர் மகிந்த தரப்பினர்.

**அமைச்சர் சாந்த பண்டாரவுக்கு வாக்களிக்க வேண்டாமென அவரது மனைவியிடமே மகிந்த தரப்பு பரப்புரை**

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்த சாந்த பண்டாரவை தோற்கடிப்பதற்காக, அவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று அவரது மனைவியிடமே பரப்புரை செய்யும் அளவுக்கு மகிந்த அணியினர் தள்ளப்பட்டனர்.

மகிந்த அணியின் இவ்வாறான செயற்பாடுகளால் ஆத்திரமடைந்த அரச தலைவர் மைத்திரிபால தொலைக்காட்சியில் தோன்றி மகிந்த வென்றாலும் அவருக்குத் தலைமை அமைச்சர் பதவி வழங்கப்படமாட்டாது என்று வெளிப்படையாகக் கூறினார். ஆனால், அரச தலைவர் மாளிகையின் கதவை உடைத்துக் கொண்டு போயாவது நாம் தலைமை அமைச்சர் பதவியைப் பெறுவோம் என்று மகிந்தவின் ஆட்கள் வீராப்புப் பேசினர். தேர்தல் முடிந்ததும் கண்டி மற்றும் நுகேகொடை போன்ற இடங்களில் மைத்திரிக்கு எதிராகக் கூட்டங்களை நடத்தி மைத்திரியை மேலும் சீண்டினர். அவர்கள் புதிய கட்சி ஒன்றை உருவாக்கி சுதந்திரக் கட்சியை மேலும் பிளவுபடுத்துவதற்கு முயற்சி செய்தனர். மே தினக் கூட்டத்தைத் தனியாக நடத்தி பிளவை மேலும் விசாலமாக்கினர்.

இப்படி விரிசல் அதிகரித்துக்கொண்டே சென்றது. இந்த விரிசலின் உச்சக்கட்டம்தான் மைத்திரி தரப்பில் இருந்து 18 பேரைக் கழற்றி எடுப்பதற்கு மகிந்த அணி முயற்சி செய்கின்றமை.

உண்மையில், அந்த 18 பேரும் மகிந்த பக்கம் தாவுவார்களேயானால் மைத்திரி அணி பலவீனம் அடைந்துவிடும். மகிந்தவின் இலக்கான கட்சித் தலைமைத்துவத்தையும் ஆட்சியையும் கைப்பற்றும் செயற்பாடு அடுத்த தேர்தலில் சாத்தியமாகிவிடும் என்று மைத்திரி நம்புகிறார்.

இதனால் கட்சியைப் பலப்படுத்தும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மைத்திரி உணர்ந்துள்ளார். மகிந்த அணியைப் பலவீனப்படுத்தி சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தும் சில அதிரடிமுடிவுகளை மைத்திரி விரைவில் எடுக்கவுள்ளார் என்று சுதந்திரக் கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது.

இனிவரும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சியின் இலக்கு மகிந்த அணியை வீழ்த்துவதே தவிர, ஐக்கிய தேசிய கட்சியை அல்ல. சுதந்திரக் கட்சி தோல்வியடைந்தாலும், தேவை ஏற்பட்டால், ஐக்கிய தேசிய கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து மீண்டும் தேசிய அரசை அமைப்பதற்கான புரிந்துணர்வு, ரணில் மற்றும் மைத்திரி இடையே உண்டு.

ஆகவே, இந்த இரண்டு கட்சிகளையும் வீழ்த்தினால்தான் மகிந்தவின் இலக்கை அடையமுடியும் என்ற நிலைதான் தற்போது உள்ளது. மகிந்தவின் திட்டப்படி அவர் சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவாரா; ஆட்சியைப் பிடிப்பாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ■

> "கட்சியைப் பலப்படுத்தும் செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மைத்திரி உணர்ந்துள்ளார். மகிந்த அணியைப் பலவீனப்படுத்தி சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தும் சில அதிரடிமுடிவுகளை மைத்திரி விரைவில் எடுக்கவுள்ளார் என்று சுதந்திரக் கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது."





## ஆசிரியருக்கான கடிதம்

### சிறுகைத்தொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்

சமீபத்தில் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் யாழ். வந்தபோது கூறினார். "யாழ்ப்பாணத்தவர்களது திறமைவெளிஉலகினருக்குப்பயன்பட்டதுபோதும்; இனிஉங்களுக்காக உங்கள்திறமைகளைப்பயன்படுத்தி முன்னேறுங்கள்" என்று. கூடவே சிங்கப்பூரின் வளர்ச்சியில் யாழவர் உழைப்பையும்வியக்கத்தக்கவகையில் உள்ளது என்று தெரிவித்து எம்மைப் பெருமைப்பட வைத்தார்.

ஆனால் எமது திறமையை அல்லாமல், மற்றவர்களின் திறமையான, பயனுள்ளமுயற்சிகளை, செயற்பாடுகளைக் கூட நாம் பயன்படுத்தி முன்னேற வக்கற்றவர்களாகி நிற்கிறோம். கண்ணுக்கெட்டிய தூரத்து தமிழ்நாட்டுச்சிறுகைத்தொழிலாளர்கள் கையாளும் உத்திகளை, இலகுவில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு மீள் சுழற்சி அடிப்படையில் சில உற்பத்திகளை நாம் மேற்கொள்ள முடியும்.

உதாரணமாக, 'காட்போட்' மற்றும் கடதாசி, பழைய பத்திரிகைகளை தமிழ் நாட்டவர்கள் தேடித்தேடிப் பெறுகிறார்கள். எனக்குத்தெரிந்து 2010 ஆம் வருடம் ஒரு கிலோ காட்போட் (பிஸ்கற். மாப்பெட்டி போன்றவை வைக்கப்படும் அட்டைகள்) இந்திய ரூபாயில் பத்து ரூபா. தற்போது விலை அதிகரித்திருக்கும். பழைய பேப்பர் ஒருகிலோ 3ரூபா. இவற்றைச் சேகரித்து மீள் சுழற்சியில் பயன்படுத்துகின்றார்கள். பெரும் வியாபாரமாகக் கூடப் பார்த்துள்ளேன் ஆனால் இங்கோ 'காட்போட்' கடை வீதிகளில் வீசப்பட்டு வீணாகிறது.

இதைவிட, வெயில் காலங்களில் மோர் பைக்கற்றுகளில் அடைக்கப்பட்டு (இங்கு யூஸ்போல) ஒரு பை 2 ரூபாவுக்குக் கிடைக்கிறது. பொலித்தீன் பாவனைக்கு ஈடாக துணிப்பைகள் உற்பத்தி, ஆடை உற்பத்திபற்றி கூறத் தேவையில்லை. மற்றும் பல அன்றாடப் பாவனைப் பொருள்களைத் தயாரித்து குறைந்த விலையில் விற்கின்றனர்.

கூடவே உள்ளூர்வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. ஆனால் இங்கோ வேலையற்றுப்பலர்வாடுகின்றனர். தொழில் முயற்சி ஆர்வலர்களைத் தமிழகம்அழைத்துச்சென்றுபயிற்சி தரசம்பந்தப்பட்டோர்முன்வரவேண்டும் போர் என்றுபோன காலம் போகட்டும். இனியாவது சுயபொருளாதாரத்தை வளர்ப்போம்

*வடபுலத்தான்*

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## 'பசுமைச் சக்தி' செயற்றிட்டம் ஆரம்பம்

இலங்கையில் பசுமைச் சக்தியை அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள அனைத்து அரச நிறுவனங்களையும் சூரிய சக்திப் பயன்பாட்டுக்கு மாற்றம் செய்யும் செயற்பாடுகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 2 ஆண்டு காலப் பகுதியில் அனைத்து அரச நிறுவனங்களிலும் சூரிய சக்திப் பயன்பாடு உள்ளடங்கலான பசுமைச்சக்தி திட்டத்தின் வழியே சூழலுக்கு இயைபாக்கமான செயல் நிலைகளை மாற்றங்களின் ஊடாக உள்வாங்குவதனை அரசு முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான மின்சக்தியை பயனுறுதியாக்கும் பாவனையாளர்கள் தங்களின் மின்சக்தித் தேவையை பசுமைச் சக்தித் திட்டத்திற்கு இயைபூக்கமாக மாற்றிக் கொள்ள முடியும். அதற்கான சலுகைகளையும், வசதி வாய்ப்புக்களையும் அரசு வழங்குவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

> “ பாவனையாளர்களுக்கு தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையான கடன் உதவி வழங்கப்படும். செலுத்த வேண்டிய வங்கி வட்டியின் 50 வீதத்தினை அரசு வழங்கவுள்ளது.

## மாத அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2017

| மாதம் | 2016 | 2017 | வீதம் (%) |
|---|---|---|---|
| ஜனவரி | 194,280 | 219,360 | 12.9 |
| பெப்ரவரி | 197,697 | 197,517 | -0.1 |
| மார்ச் | 192,841 | 188,076 | -2.5 |
| ஏப்ரல் | 136,367 | 160,249 | 17.5 |
| மே | 125,044 | 121,891 | -2.5 |
| ஜூன் | 118,038 | 123,351 | 4.5 |
| ஜூலை | 209,351 | 205,482 | -1.8 |
| ஒகஸ்ட் | 186,288 | | |
| செப்ரெம்பர் | 148,499 | | |
| ஒக்ரோபர் | 150,419 | | |
| நவம்பர் | 167,217 | | |
| டிசெம்பர் | 224,791 | | |
| மொத்தம் | 2,050,832 | | |
| ஜூலை வரையான உள் வருகை * | 1,173,618 | 1,215,926 | 3.6 |




### சுற்றுலாப் பயணிகளின் வருகை (எதிர்பார்க்கையும் உள்ளபடியான வருகையும்)




தகவல் மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை

## எதிர்கால பொருளாதார வளர்ச்சியில் இலங்கைக்கு முதலிடம்

> “ கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை தெற்காசிய நாடுகளில் இலங்கை 142 முதலீட்டுத்திட்டங்களை கொண்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு இலங்கையில் பன்னாட்டு நேரடித் தன்மை வாய்ந்த முதலீடுகள் வேகமாக அதிகரித்ததுடன் 147 வீதமான வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது.

பன்னாட்டு நேரடி முதலீடுகளிலும், தீவுகளின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிப் போக்கிலும் இலங்கை முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

பிரிட்டனில் இருந்து வெளிவரும் 'பினான்ஸ் ரைம்ஸ்' (Finance Times) இன் துணை சஞ்சிகையான எவ்.டி.ஐ (F.D.I) சஞ்சிகை நடத்திய ஆய்வின் முடிவிலேயே இந்த விவரங்கள் அறியத்தரப்பட்டுள்ளது.

FT
FINANCIAL TIMES

ஆய்வு முடிவின் பிரகாரம் இலங்கை முதலிடத்தையும் சைபிரஸ் மற்றும் டொமினிக்கன் இராச்சியம் என்பன முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பிடித்துள்ளன.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 2.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான முதலீட்டுத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 43 முதலீட்டுத்திட்டங்கள் மற்றும் நிதிச் சேவைகள் முன்னிலையில் காணப்பட்டன. மேலும், உணவு, புகையிலை, போக்குவரத்து மற்றும் வர்த்தகச் சேவைகள் என்பன பன்னாட்டு ரீதியிலான முதலீடு சார் முன்னணித் துறைகளாக காணப்படுகின்றன. இதன்படியே தலா 9 வீதப் பங்களிப்பை இவை செலுத்தியிருப்பதாக எவ்.டி.ஐ சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது. (ஓ)

# மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்றுமதி குறைந்துள்ளது

## பிரதி அமைச்சர் ஹர் டி சில்வா கவலை



மொத்த தேசிய உற்பத்தியின் ஏற்றுமதி குறைவடைந்துள்ளது. மீண்டும் அவற்றுக்கிடையேயான சமநிலையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்ற கருத்தை பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா வெளிப்படுத்தியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகக் கொள்கை மற்றும் இலங்கைக்கான வாய்ப்புக்கள் எனும் தொனிப்பொருளில் கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற மாநாடு தொடர்பில் விளக்கத்தை வழங்கும் சந்தர்ப்பத்திலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அரசு கடன் பெறுவதில் கொண்டுள்ள எல்லை தொடர்பில் புரிந்துகொள்ள முடிகிறது. அதேவேளை முன்னைய அரசு செய்துகொண்ட அதீத கடன் ஈட்ட விளைவுகளே இதற்கான காரணமாக அமைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்.

"எமக்கு சில தடைகள் காணப்பட்டன. அதன் பின்னணியாக சிரமமான காலங்கள் இருந்தன. இதன்காரணமாக அரசு பின்நோக்கிப் பயணிப்பதாக கருதக்கூடாது. நாம் ஒரு திசையில் பயணிப்பதாக எண்ணிக்கொள்ள முடியும். நாம் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றோம். வர்த்தகத்தில் ஈடுபடவேண்டிய துறைகளை கவனத்தில் கொள்ளமை தற்போதுள்ள பிரச்சினையாக இருக்கிறது. சந்தைக்குள் மக்கள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைந்துள்ளன. ஆகவே மீண்டும் நுகர்வோர் வர்த்தக பேண்தகு சமநிலையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வாப்புக்கள் வழங்கும் செயற்பாடுகளினூடாக வர்த்தகச் செயற்பாடுகளுக்கு நிதி வழங்க வேண்டிய தேவையுள்ளது. எவ்வளவு காலம் கடன்பெறுகைக்காக டொலர்களை விற்று ரூபாவை காப்பாற்ற முடியும். டொலர்களை கடனாகப்பெற்று அரசு வழங்குகிறது. அதனை உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்து ரூபாய்களை பாதுகாக்கிறோம். எனினும் கடன் பெறுவதில் எல்லை ஒன்று உள்ளது. அந்த விடயங்கள் அரசு என்ற ரீதியிலே எமக்குப் புரிகிறது. கடன்களை மீளளிக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது. இவை அனைத்தும் தற்போதைய் அரசு செய்தவை அல்ல முன்னைய அரசு செய்து கொண்ட பாவச்செயல்" - என்றார். (ஓ)

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

12/9/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 5.14 | 6,377.38 | 6,372.24 |
| S&P SL20 | -12.35 | 3,660.15 | 3,672.50 |
| வியாபாரப்புரள்வு | | 2,034,162,300 | 290,800,256 |
| உள்நாடு:- கொள்வனவு | | 1,467,682,560 | 117,817,760 |
| விற்பனை | | 1,312,074,110 | 167,263,696 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 566,479,740 | 172,982,496 |
| விற்பனை | | 722,088,130 | 123,536,568 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| கொழும்பு டிரஸ்ட் நிதி | CALF.N | 20.6 | 37,581,639 | 1,076,514,933 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 161 | 1,842,595 | 295,219,031 |
| மெல்ஸ்ரா க்ரோப் | MELS.N | 58 | 2,104,440 | 124,152,928 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 136 | 737,872 | 100,368,281 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 232 | 230,900 | 53,568,800 |
| சம்பத் வங்கி | SAMP.N | 295 | 164,303 | 48,305,697 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 960 | 44,209 | 42,061,511 |
| செலான் வங்கி | SEYB.N | 90.5 | 335,124 | 30,334,846 |
| ரீயே லங்கா | TJL.N | 40 | 754,741 | 30,262,963 |
| சிங்கர் ஸ்ரீலங்கா | SINS.N | 52.9 | 579,169 | 28,586,795 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்
கார்கில்ஸ் (CARG) - Rs. 1.90
சி டி கோல்டிங்ஸ் (CTHR) - Rs. 1.80
ஹன்டர்ஸ் அண்ட் கம்பெனி (HUNT) - Rs. 3.75

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 257 |
| விலை உழைப்பு | 10.6 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளைவு | 3 |

# அமெரிக்கா மிகப்பெரும் துயரத்தைச் சந்திக்கும்

கிம் ஜோங் உன் கொதிப்பு



பியாங்யாங், செப். 13

"வடகொரியா மீது விதிக்கப்பட்டுள்ள கூடுதல் பொருளாதாரத் தடைகளுக்காக அமெரிக்கா பெரும் துயரத்தைச் சந்திக்கும்" என்று அமெரிக்கா அதன் வரலாற்றில் பெரும் துயரத்தைச் சந்தித்த நாளான (இரட்டைக் கோபுரத் தகரப்பு) நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்தார் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்.

வடகொரியாவின் ஏவுகணைச் சோதனைகளை முடக்கும் விதத்தில் அமெரிக்கா அந்த நாட்டின் மீது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள நிலையில் இவ்வாறு எச்சரித்தார் கிம் ஜோங் உன்.

> வடகொரியா அணுஆயுத வல்லரசு நாடாக மாறியிருப்பதை அமெரிக்கா விரும்பவில்லை.

"வடகொரியா அணுஆயுத வல்லரசு நாடாக மாறியிருப்பதை அமெரிக்கா விரும்பவில்லை. அதனால் எங்கள் நாட்டின் மீது தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது. இதற்கு தகுந்த பதிலடி கொடுப்போம். நாங்கள் எடுக்கும் நடவடிக்கையால் அமெரிக்கா பெரும் துயரத்தை யும் வேதனையையும் சந்திக்க நேரிடும். அமெரிக்காவை அழிக்கவும் தயங்கமாட்டோம்" என கிம்மின் எச்சரிக்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



# கிம் ஜோங்கின் சொத்துக்களை முடக்குவதற்கு ரஷ்யா எதிர்ப்பு

வொஷிங்டன், செப். 13

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் சொத்துக்களை முடக்குவதற்கு அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் ரஷ்யா மற்றும் சீனாவால் ஏற்றுக்கொள்ளப்படாததை அடுத்து அவற்றுக்கு விலக்கு வழங்கி வடகொரியாவின் மீது கூடுதல் தடைகளை விதித்தது ஐக்கிய நாடுகள் சபை.

பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி வடகொரியா அண்மையில் ஏவுகணைச் சோதனையொன்றை நடத்தியது. இந்த ஏவுகணை ஜப்பானுக்கு மேலாகப் பறந்தது. ஒரு நாட்டின் வான்பரப்புக்கு மேலாக மற்றொரு நாடு ஏவுகணைச் சோதனைகளை அதன் அனுமதி இல்லாமல் செய்ய முடியாது. எனவே இது பன்னாட்டுச் சட்டத்தை மீறிய செயல் என்று தெரிவித்து கடும் கொதிப்படைந்தது ஐக்கிய நாடுகள் சபை.

வடகொரியா அண்மையில் ஐதரசன் குண்டுச் சோதனையையும் நடத்தியது. இந்தச் சோதனையின்போது 6.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. இதனால் வடகொரியா மீது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு நேற்று முன்தினம் கூடியது ஐக்கிய நாடுகள் சபை.

வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா சில தீர்மானங்களைக் கொண்டு வந்தது. அதில் பெட்ரோல் உள்ளிட்ட எண்ணெய்ப் பொருள்களை வடகொரியாவுக்கு கொண்டு செல்வதற்கு தடை, வடகொரியாவிலிருந்து உற்பத்தி செய்யப்படும் புடைவை உள்ளிட்ட பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு தடை, அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் உனக்கு சொந்தமான வெளிநாட்டு சொத்துக்களை முடக்குவது மற்றும் அவர் பயணம் செய்வதற்கான தடை ஆகிய அம்சங்கள் இடம்பெற்றிருந்தன.

வடகொரியாவின் பெரும்பான்மையான எண்ணெய்த் தேவையை ரஷ்யா மற்றும் சீனா பூர்த்தி செய்து வரும் நிலையில் இந்த இரண்டு நாடுகளும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்குமா? அல்லது வாக்களிக்காமல் புறக்கணிக்குமா? என்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. எதிர்பார்க்கப்பட்டதைப் போல் ரஷ்யா மற்றும் சீனா ஆகியன வடகொரியாவுக்கு எரிபொருள் ஏற்றுமதியை முடக்கும் திட்டத்துக்கும், வடகொரிய அதிபரின் வெளிநாட்டுச் சொத்துக்களை முடக்கும் திட்டத்துக்கும் எதிராக வாக்களித்தன. (ம)

# காயமடைந்தார் பாப்பரசர்



உரோம், செப். 13

கொலம்பிய சுற்றுப்பயணத்தில் மக்களை சந்தித்த போது நிலைதடுமாறிய பாப்பரசர் பிரான்சிஸ், குண்டு துளைக்காத கண்ணாடியின் மீது மோதியதால் காயமடைந்தார்.

பாப்பரசர் பிரான்சிஸ், தென்னமரிக்க நாடுகளில் ஒன்றான கொலம்பியாவுக்கு சுற்றுப்பயணம் மேண்கொண்டிருந்தார். தனது பயணத்தின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் அங்குள்ள கார்ட்டஜினா நகரில் மக்களைச் சந்தித்தார். திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் நடுவே திறந்த வாகனத்தில் நின்றவாறு அவர்களுக்கு ஆசி வழங்கிக்கொண்டு சென்றார்.

திடீரென நிலைதடுமாறிய அவர், வாகனத்தில் இருந்த குண்டு துளைக்காத கண்ணாடியின் மீது மோதினார். இதில் அவரது கன்னத்திலும், புருவத்திலும் லேசான காயம் ஏற்பட்டு குருதி சொட்டியது. உடனே அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர் அந்தக் காயத்துடனே மக்களைச் சந்தித்து ஆசி வழங்கினார். (ம)

# அமெரிக்காவை எவரும் அசைத்துவிட முடியாது

*11-9 நிகழ்வில் ட்ரம்ப் முழக்கம்*

வொஷிங்டன், செப். 13

அமெரிக்காவை எவராலும் அச்சுறுத்தவோ அல்லது அசைத்துப் பார்க்கவோ முடியாது என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

அல் குவைதா ஆயுததாரிகளால் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட தினமான நேற்றுமுன்தினம் (11-9 நிகழ்வு) அமெரிக்காவெங்கும் பரவலாக அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அமெரிக்காவை எவராலும் அச்சுறுத்த முடியாது. நாங்கள் ஒற்றுமையாக இருந்து வருகிறோம். உலகில் உள்ள எந்தச் சக்தியாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது" என்று ட்ரம்ப் மேலும் தெரிவித்தார்.

கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி (11-9) நான்கு வானூர்திகளைக் கடத்திய அல் குவைதா ஆயுததாரிகள் இரண்டை உலக வர்த்தக மையமான நியூயோர்க் நகரின் இரட்டைக் கோபுரத்தின் மீது மோதச் செய்தனர். இரண்டு கட்டடங்களும் சீட்டுக்கட் டாகச் சரிந்தன.

மற்றொரு வானூர்தியால் அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பெண்டகன் மீது மோதித் தாக்குதல் நடத்தப்பட்டது. பிறிதொரு வானூர்தியால் வெள்ளை மாளிகையைத் தாக்கத் திட்டமிடப்பட்டது என்றும் ஆனால் வானூர்திக்குள் இருந்த நாட்டுப்பற்றுமிக்க மக்களால் அது தடுக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. (ம)





அல்குவைதா ஆயுததாரிகளால் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் மற்றும் இராணுவத் தலைமையகமான பெண்டகன் ஆகியன தாக்கப்பட்ட 16ஆவது நினைவுதினம் அந்த நாட்டின் பல்வேறு நகர்களில் நேற்றுமுன்தினம் உருக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. நியூயோர்க் நகரில் உள்ள நினைவாலயத்தில் கண்ணீர் மல்குகிறார் பொலிஸ் அதிகாரி ஒருவர். (ம)

### ரொஹிங்யர்கள் மீதான அடக்குமுறை

# இன அழிப்புச் செய்வதற்கான பாடப்புத்தகம் போல் உள்ளது

## ஐ.நா. மீண்டும் கடும் காட்டம்

வொஷிங்டன், செப். 13



மியன்மாரில் ரொஹிங்ய முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகள் இன அழிப்புச் செய்வது எப்படி என்பதை விளக்கும் பாடப்புத்தகம் போல் உள்ளது என்று தெரிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம்.

பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடான மியன்மாரில் சிறுபான்மை மக்களாக ரொஹிங்ய முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர்.

ரொஹிங்ய இனத்தவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று காலாகாலமாக குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. இந்த இனச்சுத்திகரிப்புக்கு எதிராக சில ரொஹிங்யர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த மாதம் 25ஆம் திகதி கிளர்ச்சிக் குழு நடத்திய தாக்குதலில் 10 சிப்பாய்கள் உயிரிழந்தனர். இதற்குப் பின்னர் ரொஹிங்யர்களுக்கு மேலும் நெருக்கடிகள் கொடுக்கப்படுகின்றன. சுமார் ஆயிரம்ரொஹிங்யர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 3 லட்சம் ரொஹிங்யர்கள் அயல்நாடான பங்களாதேஷிக்குச் சென்று அங்கு தஞ்சமடைந்துள்ளனர். இதையடுத்து மீண்டும் கொதித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம்.

'மியான்மாரில் ரோஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிராக அநீதி நடந்து கொண்டிருக்கிறது. மியான்மரில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வாளர்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனை வைத்துப் பார்க்கும் போது மியன்மாரில் நடப்பவை இன அழிப்புக்கான பாடப்புத்தக எடுத்துகாட்டு போல் உள்ளது. கடந்த இரு வாரத்தில் மட்டும் சுமார் 3 லட்சம் மக்கள் அகதிகளாகச் சென்றுள்ளனர். மியன்மாரில் உள்ளூர் பாதுகாப்புப் படையினர் மற்றும் இராணுவத்தினர் ரோஹிங்கய முஸ்லிம்களின் பகுதிகளை தீயிட்டு கொளுத்தியுள்ளதற்கான செயற்கைகோள் படங்கள் உள்ளன' என மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கை ஒன்று குறிப்பிடுகிறது. (ம)

# சிங்கப்பூரின் முதற்பெண் அதிபராகிறார் ஹலிமா

சிங்கப்பூர், செப். 13



சிங்கப்பூர் நாட்டின் அதிபர் தேர்தலுக்கான போட்டியில் இருந்த இரு வேட்பாளர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளதால் மற்றொரு பெண் வேட்பாளரான ஹலிமா யாக்கோப் போட்டியின்றித் தெரிவாகவுள்ளார்.

சிங்கப்பூரில் ஆறாண்டுகளுக்கு ஒருமுறை புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறும். தற்போதைய அதிபர் டோனி டானின் பதவிக்காலம் விரைவில் நிறைவடைவதால் எதிர்வரும் 23ஆம் திகதி புதிய அதிபருக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டுத் தேர்தலில் சிங்கப்பூர் நாடாளுமன்றின் முன்னாள் சபாநாயகர் ஹலிமா, தொழில் அதிபர்களான மரித்கான் மற்றும் பரித்கான் மூவரும் போட்டியிட்டனர். மரித்கான் மற்றும் பரித்கான் இருவரும் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஹலிமா போட்டியின்றித் தெரிவு செய்யப்படவுள்ளார். இதன்மூலம் சிங்கப்பூரின் முதலாவது பெண் அதிபர் என்ற பெருமையை அவர் பெறுகிறார். (ம)




# சசிகலா, தினகரன் நீக்கம்

## அ.தி.மு.க. பொதுக்குழுவைக்கூட்டி முடிவு



சென்னை, செப். 13

அ.தி.மு. கழகத்தின் பொதுக்குழு நேற்றுக் கூட்டப்பட்டு கட்சியின் பொதுச் செயலாளர் சசிகலா மற்றும் துணைப் பொதுச் செயலாளர் தினகரன் இருவரும் கட்சியில் இருந்து முழுவதுமாக நீக்கப்பட்டனர். அவர்களின் அறிவிப்புக்களும், நியமனங்களும் செல்லாது என்றும்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவின் பின்னர் முதல்வராக பன்னீர்செல்வம் பொறுப்பேற்றார். பதவியில் இருந்து சசிகலாவால் ஓ.பன்னீர்செல் வம் அகற்றப்பட்டதன் பின்னர் அ.தி.மு. கழகம் இரண்டாக உடைந்தது. சசிகலா சிறை சென்றதன் பின்னர் அ.தி.மு. கழகம் மூன்றாக உடைந்தது. முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தினகரன் ஆகியோர் ஒவ்வொரு தரப்புக்கும் தலைமை தாங்கினர். எடப்பாடியின் பக்கம் இருந்த 19 சட்டமன்ற உறுப்பினர்கள் தினகரன் பக்கமாகச் சென்ற பின்னர் எடப்பாடியின் ஆட்சி கவிழும் நிலை ஏற்பட்டது. இதனால் ஓ.பன்னீர்செல்வத்தை தன்னுடன் இணைத்து ஆட்சியமைக்க எடப்பாடி திட்டமிட்டார். இதன்படி இவர்கள் இருவரும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இணைந்துகொண்டனர். விரைவில் பொதுக்குழு கூட்டப்பட்டு சசிகலா, தினகரன் இருவரும் கட்சியில் இருந்து அகற்றப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தப் பரபரப்பான பின்னணியில் பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் நேற்றுக் கூடியது. ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதைப்போல் சசிகலா, தினகரன் இருவரையும் கட்சியில் இருந்து நீக்கி நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவர்கள் இருவராலும் விடுக்கப்பட்ட அறிவிப்புக்கள் மற்றும் நியமனங்கள் ஆகியனவும் செல்லுபடியற்றவை என்றும் அறிவிக்கப்பட்டது. (ம)



புதன் பொய்கை

# “பெண்கள் நினைத்தால் எதையும் சாதிக்கலாம்”



எஸ்.மல்லிகா

பெண்கள் இன்று சகல துறைகளிலும் சாதித்து வந்தாலும், அவர்கள் இன்னும் தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் நினைத்தால், எதையும் சாதிக்கலாம்' என்று கூறுகிறார் ஈழத்தின் மூத்த எழுத்தாளரும் பெண்ணியவாதியுமான திருமதி பத்மா சோமகாந்தன்.
உதயன் பத்திரிகைக்கு அளித்த செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### பத்மா எனும் ஆளுமை

யாழ்ப்பாணம்வண்ணார்பண்ணை என்ற இடத்தில் பிரம்மஸ்ரீ ஏ.பஞ்சாதீஸ்வரக்குருக்கள் அமிர்தம்மாள் தம்பதிகளின் நான்காவது மகளாகப்





நான் சிறுமியாக இருந்த காலத்தில் பெண்கள் ஓரளவு படித்தாலே போதும் என்ற நிலைதான் இருந்தது. மேற்படிப்புக்கெல்லாம் பெண்களை அனுப்ப மாட்டார்கள். வீட்டுக்குள்ளேயே அவர்களைப் பூட்டி வைத்தனர்.

பிறந்தவர் பத்மா. யாழ். இந்துத் தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், இந்து மகளிர் கல்லூரியில் இடைநிலை மற்றும் உயர் கல்வியையும் கற்ற இவர், பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றி, அதிபராகப் பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்றவர்.
பாடசாலையில் கற்கும் காலத்திலேயே எழுத்துலகில் காலடி பதித்தவர். பல படைப்புக்களை உலகுக்கு அளித்தவர். ஓவியம், தையற் கலைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்.
எழுதுவதுடன் மட்டும் தன்னை நிறுத்திக்கொள்ளாமல் பல்வேறுபட்ட அமைப்புக்களிலும் இணைந்து இயங்குவதிலும் பேரார்வம் கொண்டவர். ஊடகத்துறையிலும் முன்னின்று செயற்பட்டவர்.
தென்கிழக்கு, கிழக்கு, பேராதனை மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது பட்டப்படிப்புக்காக இவரைப் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.
கல்வித் துறையிலும் முற்போக்குப் பெண்ணியச் சிந்தனையிலும் தன் காலத்தை அதிகளவு செலவிட்டிருக்கும் பத்மா சோமகாந்தன், தற்போதும் எழுத்து, மேடைப்பேச்சு, இலக்கியத் தளங்களில் தொடர் செயற்பாடு என இயங்கிக்கொண்டிருக்கும் அயர்ச்சியற்ற பெண் ஆளுமை.
இவரது எழுத்துப் பணியைப் பாராட்டி லில்லி தேவசிகாமணி பரிசு, சார்க் மகளிர் சங்கப் பரிசு, வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்திய பரிசு என்பனவும், இவரது ஆளுமையைக் கௌரவித்து இலக்கியக் கலாவித்தகி, செஞ்சொற்செல்வி முதலான பட்டங்களும், தங்கம்மா அப்பாக்குட்டியின் சிவத்தமிழ் விருது என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.
இனி அவரது நேர்காணலிலிருந்து....

### எழுத்துப் பயணமும் அதன் ஆரம்பமும்

**கேள்வி:** தங்கள் எழுத்துலகப் பிரவேசம் எப்படி ஆரம்பமானது?

**ப:** நான் சிறுமியாய் இருக்கும் போதே கல்கி, பாலர் மலர் வாசிப்பதிலும் வீட்டில் வாங்கும் ஆனந்தவிகடன் போன்ற சஞ்சிகைகளை வாசிப்பதிலும் பேரார்வம் கொண்டிருந்தேன். அத்துடன், துணுக்குகள் மற்றும் கேலிச்சித்திரங்களில் கண்ணோட்டம் செலுத்துவதிலும் ஆர்வம் ஏற்பட்டது. சில விடயங்களை வாசிக்கும் போது எமது மனதிலும் சில எண்ணங்கள் தோன்றும். அப்படியே நாமும் அவற்றை எழுத்தாக்கினால் எப்படியிருக்கும் என்ற சிந்தனை மனதில் இழையோடும். அந்தச் சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுத்து, ஈழத்தில் வெளிவந்த பத்திரிகைகளின் சிறுவர் ப்க்கத்துக்கு ஆக்கங்கள் எழுதினேன். அவை பிரசுரமானதும், எனக்குள் பேரானந்தம் குடிகொள்ளும். இந்நிலையில், சுதந்திரன் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் பங்குபற்றி 'இரத்தபாசம்' என்ற சிறுகதை எழுதினேன். அதற்கு எனக்கு முதற் பரிசும் கிடைத்தது. அந்தப் பரிசு, என்னை எழுதத் தூண்டியது. எமது காலத்தில் இருந்த சாதியப் பிரச்சினை மற்றும் பெண் முன்னேற்றம் குறித்து அதிகம் எழுதியுள்ளேன். இன்றுவரை என் எழுத்துப் பயணம் தொடர்கிறது.

**கே:** ஆசார இறுக்கம் மிகுந்த காலத்தில் தடைகளை மீறி, எழுத்துலகில் எப்படி உங்களால் நிலைக்க முடிந்தது?

**ப:** நான் சிறுமியாக இருந்த காலத்தில் பெண்கள் ஓரளவு படித்தாலே போதும் என்ற நிலைதான் இருந்தது. மேற்படிப்புக்கெல்லாம் பெண்களை அனுப்பமாட்டார்கள். வீட்டுக்குள்ளேயே அவர்களைப் பூட்டி வைத்தனர். நான் ஒரு பிராமணப் பெண்



தாயும் சேயும் பக். 21



வாழ்வு தந்த வாஸ் பக். 24



நவக்கிரக தோஷங்களும் பரிகாரங்களும் பக். 22

என்பதனால், நிறையச் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால், என்னையும் மீறிச் சாதிக்க வேண்டும் என்ற ஒரு வீறு எனக்குள் வந்தது. அதனைத் தன்னம்பிக்கை என்று கூடச் சொல்லலாம். சிறுவயதில் இருந்தே நான் யாருக்கும் பயப்படமாட்டேன். ஒரு அசாத்தியத் துணிச்சலைக் கொண்டிருப்பேன். அப்போதே பெண்ணியச் சிந்தனைகளும் என்னுள் முகிழ்க்கத் தொடங்கின. முற்போக்காகச் சிந்திக்கத் தொடங்கினேன். வீட்டுக்கு வெளியே பெண்கள் போகத் தடைவிதிக்கப்பட்ட அந்தக் காலத்திலே அரசியல் மேடைகளில் கூட துணிந்து முழங்கினேன். இந்தத் துணிச்சல்தான் என்னை எழுத்துலகில் நிலைநிறுத்தியது.

**பெண்களின் திறமைகளைக் கட்டிப்போடக் கூடாது திருமணங்கள்**

**கே:** திருமணத்துக்குப் பின்னர் பெரும்பாலான பெண்கள் எழுத்துலகிலிருந்து காணாமல் போய்விடுகின்றனர் என்று ஒரு கருத்து நிலை உண்டு. இதுகுறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

**ப:** திருமணமான பின்னர் எழுத்துத்துறையில் மட்டுமல்ல நடனம், இசை முதலான துறைகளிலும் பெண்கள் நிலைப்பது குறைவு. இதற்குப் புரிந்துணர்வுள்ள தோழமை உணர்வுள்ள முற்போக்குச் சிந்தனையுள்ள கணவன் வாய்க்காமைதான் காரணம். இத்தகைய பெண்களுக்கு ஒத்த சிந்தனை, இரசனை உணர்வு மிக்க ஆண்கள் கணவராக வாய்ப்பது குறைவு; உறவினர் வீடுகளுக்குச் செல்வது, சமையல், கொண்டாட்டம் என்ற மூன்றுக்குள்ளும் பெண்ணின் வாழ்க்கையை முடக்கப் பார்க்கின்றனர் ஆண்கள். அந்தக் காலத்தில் பெண் வேலைக்குச் செல்வதையே ஆண்கள் விரும்புவதில்லை. பெண் உழைப்பில் சாப்பிடுவதா? என்ற தன்மானப் பிரச்சினை, அவள் எங்கே தன்னை மிஞ்சி விடுவாளோ என்ற ஆணாதிக்க நிலை போன்றனதான் அதற்குக் காரணம். இன்று நிலைமை அவ்வாறில்லை. படித்த வேலைக்குச் செல்லும் பெண்களையே மணமுடிக்க ஆண்கள் விரும்புகின்றனர். எழுத்துலகில் தடம்பதிக்கும் பெண்கள் தம்மை விளங்கிக்கொள்ளக்கூடிய புரிந்துகொள்ளக்கூடிய ஆண்களைத் திருமணம் செய்தால், அவர்களால் தொடர்ந்தும் எழுத்துலகில் இயங்க முடியும்.

**கே:** தாங்கள் பெண்ணியவாதியாக உருவாக என்ன காரணம்?

**ப:** சமுதாயத்தில் நிலவிய பெண் அடக்குமுறைதான் காரணம். 14, 15 வயதுகளிலேயே பெண்கள் குறித்த பார்வை முற்போக்குச் சிந்தனை என்னுள் கருக்கொண்டது. வளர்ந்த பின்னர்தான் அதனைப் பெண்ணியம் என்று விளங்கிக்கொண்டேன். பெண் கல்வி தேவையா? பெண் வீட்டை விட்டு வெளியே போய் வேலை பார்க்கலாமா? பெண்ணைக் கொடுமைக்குள் ஆழ்த்தும் சீதனப் பேய், வறுமை, கணவன் குடியால் சிதறும் குடும்பங்கள், ஒழுக்கயீனங்கள் என்பனவே சமுதாயத்தைக் கௌவி கபளீகரமிடும் பிரதான பிரச்சினைகளாக என் மனதில் உருவெடுத்தன. அதனால் இத்தகைய பின்னணியைக் கொண்டே எழுத்துக்களும் கற்பனைகளும் முகிழ்த்தன. இவற்றில் ஊறிய அனுபவத்தில் வளர வளரக் குடும்பத்திலும் சமூகத் தளத்திலும் ஆண்பெண் என்ற வேற்றுமைகள் உணரப்படுவதும் பெண்கள் கடவுள் நிலைக்கு உயர்த்தப்பட்டாலும் மானிட நிலையில் தாழ்வாக, இரண்டாம் பட்சமாக மதிக்கப்படுவதும் மனதில் சுரீர் எனத் தைத்தது. இதுதான் என்னைப் பெண்ணியவாதியாக உருவாக்கியது.

**பெண் விடுதலை குறித்த தெளிவு பெண்களிடமே இருப்பதில்லை**

**கே:** மேலை நாடுகளுடன் ஒப்பிடுகையில், தமிழ்ப் பெண்களின் விடுதலை வீச்சு எவ்வாறுள்ளது?

**ப:** மேலை நாடுகளில் பெண்ணுக்கான சுதந்திரத்தை ஆண்கள் விளங்கிக்கொண்டுள்ளனர். ஆனால், எமது சமுதாயத்தில் அவ்வாறு இல்லை. சங்ககாலத்தில் இருந்தே எதிலும் ஆண்கள்தான் முதல்நிலை வகித்தனர். எமது சமயமும் அதற்குத் துணைபோகிறது. ஆலயங்களில் பூசை செய்வது, திருமணம் முதலான நிகழ்வைத் தலைமை தாங்கி நடத்துவது போன்றன்வற்றைப் பரம்பரை பரம்பரையாக ஆண்களே மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், எமது பெண்கள் இலகுவாகச் சுதந்திரத்தை எட்டிவிட முடியாது. அதேநேரம், மேலை நாட்டுப் பெண்களுடன் ஒப்பிடுகையில் 15 வீதமான பெண்கள்தான் பெண் விடுதலை பற்றிய புரிதலுடன் வாழ்கின்றனர். ஏனைய பெண்கள் தமக்கான விடுதலையை, சுதந்திரத்தை விளங்கிக்கொள்கிறார்கள் இல்லை. படிப்பது, வேலைக்குப் போவது, நாளாந்த வாழ்க்கையில் பிரச்சினை இல்லாமல் இருப்பதுதான் பெண் விடுதலை என்று இவர்கள் நினைக்கின்றனர்.



> பெண் முன்னேற்றத்தைக் கண்டு பொறுக்க முடியாத ஆண்கள், அவளுக்கு எதில் அடித்தால் வலிக்கும் என்பதனை இனங்கண்டு அவளைப் பாலியல் ரீதியில் தாக்குகின்றனர். அதற்குப் பெண்தான் காரணம் அவள் அணியும் உடைதான் காரணம் என்று வேறு அவள் மீது பழியைப் போடுகின்றனர். தம்மைத் திருத்திக்கொள்ளாமல், தவறான கருத்தை முன்வைக்கின்றனர்.

எமது நாட்டில் கலாசாரம், பண்பாடு, வாழ்வியல் முறைமை என்பன பெண் சுதந்திரத்துக்குப் பெரும் முட்டுக்கட்டைகளாக உள்ளன. ஆணுடன் ஒப்பிடுகையில் பெண் செய்யும் எந்த ஒரு வேலைக்கும் வரையறை உண்டு. அனைத்துத் தொழில்களிலும் ஆண்களையே தூக்கிவைத்துள்ளனர். ஊடகத் துறையில் கூட ஆண்களே முக்கிய பதவிகளில் உள்ளனர். ஆக, ஆசிரியத் தொழில் ஒன்றில்தான் பெண்கள் 60 வீதம் உள்ளனர். இவர்களுள்ளும் பெண்ணியச் சிந்தனையுடன் எத்தனை பேர் உள்ளனர் என்றால், அவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஆதலால், எமது பெண்கள் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு இன்னும் அதிகம் பயணிக்க வேண்டியுள்ளது; உழைக்க வேண்டியுள்ளது.

**கே:** இன்று சகல துறைகளிலும் பெண்கள் முன்னுக்கு வந்து, ஆணுக்குச் சமமாகத் தங்களாலும் இயங்க முடியும் இருக்க முடியும் என்று சாதித்து வருகின்றனர். அதேநேரம், அரசியலில் ஈடுபடுவதற்குப் பின்னிற்கின்றனர். இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

**ப:** பெண்கள் விடுதலை உணர்வு பெற்றுப் பல ஆண்டுகள் சென்ற பின்பும், தங்களது குடும்பப் பின்புலங்களால் வெளிச்சத்துக்கு வந்த ஒருசில பெண் அரசியல்வாதிகள் தவிர அரசியல் களத்தில் பெண்ணின் பங்கேற்புக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை என்றே கூறவேண்டியிருக்கிறது. இதற்கு அவளுடைய வளர்ப்பு முறை, பொருளாதார வசதிக் குறைவு என்பனவும் காரணம். ஒழுக்கம் சார்ந்து அவளைக் கேள்வி கேட்பது இன்னொரு காரணம். ஆட்சியிலுள்ள ஆண்கள் ஊழல் செய்கையில் தனி மனிதர்களாக மட்டுமே அவர்களை அடையாளப்படுத்தும் சமூகம், பெண் அரசியல்வாதிகள் ஊழல் செய்யும்போது மட்டும் பாலின அடையாளத்தோடு கூடிய விமர்சனங்களைக் கூசாமல் முன்வைக்கத் தவறுவதில்லை. அத்துடன், அரசியல் என்பது வீட்டுக்குள் இருந்து கதைக்கும் கதையல்ல. வெளியிற் சென்று பலதையும் பேசவேண்டும். கூட்டங்களில் பங்கேற்க வேண்டும். எண்ணற்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும். வெளியிடங்களுக்குச் சென்றுவர வேண்டும். அதற்குப் போக்குவரத்து வசதி வேண்டும். இதிலும், இரவு நேரங்களில் பெண் தனியே சாரதியுடன் சென்று வரும் நிலை ஏற்படுகையில், அவளுடைய ஒழுக்கம் சார்ந்து சமூகம் கேள்வி கேட்கும். இத்தகைய காரணங்களால், பெண்கள் அரசியலில் பங்கேற்பதற்குப் பின்னடிக்கின்றனர்.

**பாலியல் கொடுமைகளுக்கு எதிராகப் போராட வேண்டும்**

**கே:** பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் தாக்குதல்கள் குறித்து என்ன கூறுகீறீர்கள்?

**ப:** பெண் முன்னேற்றத்தைக் கண்டு பொறுக்க முடியாத ஆண்கள், அவளுக்கு எதில் அடித்தால் வலிக்கும் என்பதனை இனங்கண்டு அவளைப் பாலியல் ரீதியில் தாக்குகின்றனர். அதற்குப் பெண்தான் காரணம் அவள் அணியும் உடைதான் காரணம் என்று வேறு அவள் மீது பழியைப் போடுகின்றனர். தம்மைத் திருத்திக்கொள்ளாமல், தவறான கருத்தை முன்வைக்கின்றனர். இது ஆணுடைய ஒரு பலவீனம் என்றுதான் சொல்லவேண்டும். இதற்கு எதிராகப் பெண் அமைப்புக்கள் குரல் கொடுக்க வேண்டும். ஆனால், பெண் தொகைக்கேற்ப பெண் அமைப்புக்களின் எண்ணிக்கை குறைவு. இதற்கு எதிராக அதிகம் போராட வேண்டியுள்ளது.

**கே:** பெண்களை மேம்படுத்துவதில் பத்திரிகைகளின் பங்களிப்பு எவ்வாறுள்ளது?

**ப:** பத்திரிகைகளில் பெண்ணுக்கு ஒதுக்கப்படும் வெளியில், அழகுக் குறிப்புக்களையும் சமையல் குறிப்புக்களையும்தான் போடுகின்றனர். இவை இரண்டுமே ஒரு பெண்ணுக்குச் சொல்லிக் கொடுக்காமலேயே தெரியக்கூடிய விடயங்கள். இப்படியான விடயங்களைப் போட்டுப் பக்கம் நிரப்பும் வேலையைச் செய்கின்றன பத்திரிகைகள். இதைவிடுத்து, பெண்ணிய அடையாளங்களைப் பெண்கள் தேடும் ஆர்வத்தைத் தட்டியெழுப்பும் கைங்கரியத்தைப் பத்திரிகைகள் செய்ய வேண்டும். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரவேண்டும். பெண் விடுதலை, ஆண் பெண் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வினை அவர்களுக்கு அளிக்க வேண்டும். சாதனைப் பெண்களை அறிமுகப்படுத்தி, ஏனைய பெண்களை ஊக்குவிக்க வேண்டும். அப்பொழுதுதான் பெண் விடுதலை கூர்மையடையும்.

**கே:** இந்த நேர்காணலூடாகப் பெண்களுக்குத் தாங்கள் கூறநினைக்கும் செய்தி என்ன?

**ப:** பெண்கள் இன்று சகல துறைகளிலும் சாதித்து வந்தாலும், அவர்கள் இன்னும் தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் நினைத்தால், எதையும் சாதிக்கலாம். வன்முறையற்று அமைதியான ஒற்றுமைமிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்பப் பாடுபட வேண்டும். கிராம மட்டங்களில் குழுக்கள் குழுக்களாக இணைந்து பெண் விடுதலை பற்றிய விழிப்புணர்வை மேற்கொள்ள வேண்டும்.

# மௌனம் நூறுவகை

ச.நாகராஜன்



“மௌனங்கள் நூறு வகை! ஒவ்வொன்றும் ஒரு வகை! எல்லையற்ற முடிவிலா மோனம் (மௌனம்) உரைக்க ஒண்ணா அற்புதம். அறிவியலும் ஆன்மீகமும் உளவியலும் ஒன்று சேரும் இடம் மௌனமே!”

வாயை மூடிக் கொண்டு பேசாமல் இருந்தால் அது தான் மௌனம். இது சரியா? இந்த ஒரு நிலைதான் மௌனத்தின் ஒரே வகையா? சீனாவில் மௌனத்தில் நூறு வகை உண்டு என்று வலியுறுத்தப்படுகிறது. ஜென் பிரிவு மௌனத்தின் அபாரமான வலிமையையும் அதன் ஆழத்தையும் பல விதமாக விளக்குகிறது.

உண்மையான மௌன நிலையில் ஒருவர் எவ்வளவு காலம் இருக்க முடியும்? அறிவியல் ஆராயப் புகுந்தது. உண்மையான அறிவியல் ரீதியிலான மௌன நிலையில் ஒருவர் 15 நிமிடம் இருந்தாலே அதிகம்தான். அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாது. ஒரு அலைபேசி ஒலிக்கும் போதோ அல்லது ஒரு சலவை இயந்திரம் இயக்கப்படும் போதோ அது எவ்வளவு ஓசையை எழுப்புகிறது? மைக்ரோசொஃப்ட், அப்பிள் நிறுவனங்களிலும் அமெரிக்க



இராணுவத்திலும் ஓசைகளின் அளவைக் கண்டுபிடிக்க சத்தமே இல்லாத ஒரு மௌன அறையை அமைப்பது வழக்கம். இதை அனெகோயிக் அறை என்று அழைப்பர், (unechoic unechoic -எதிரொலி இல்லாத என்று பொருள்.) மின்னஸோட்டாவில் உள்ள மின்னபோலிஸில் ஓரிஃபீல்ட் ஆய்வுகூடத்திலும் (orifield laboratories) இப்படி ஒரு அறை உண்டு. இந்த அறை, தங்கள் தயாரிப்புக்களைச் சோதனை செய்யக் கட்டண அடிப்படையில் தேவைப்பட்டோருக்குத் தரப்படுவதும் உண்டு.

### அமைதியான அறையின் விளக்கம்தான் என்ன?

உண்மையில் ஒரு அமைதியான அறை என்பதன் விளக்கம் தான் என்ன? மின்னஸோட்டா பப்ளிக் ரேடியோ 30 டெசிபல் உள்ள அறையே அமைதியான அறை என்ற இலக்கணத்தை வகுக்கிறது. அமைதியான இரவு நேரத்தில் குளிரூட்டியின் ஓசை, தாள்களைப் புரட்டும் ஓசை போன்றவை மெலிதாகக் கேட்கும். அது பொதுவாக அமைதியான அறை எனப்படும். ஆனால், அனெகோயிக் அறை மைனஸ் ஒன்பது டெசிபல் என்ற அளவு அமைதியாக இருக்கும். சாதாரண மௌன நிலைக்கும் கீழாக எதிர்மறையில் ஒன்பது டெசிபல். கின்னஸ் சாதனைப் படி உலகின் மிக மிக அமைதியான அறை இது ஒன்று தான். இந்த அறை விசேடமாக வடிவமைக்கப் பட்டுள்ளது. எந்தச் சத்தமும் இதனுள் புகமுடியாது. சுவரிலிருந்து ஒரு மீற்றர் நீளம் ஊடுருவியிருக்கும் விசேட அமைப்புக்கள் எந்த எதிரொலியையும் சத்தத்தையும் உள்வாங்கிக் கிரகித்துவிடும்.

இதன் சிறப்புத் தன்மையைப் பற்றி இந்த சோதனைச்சாலையின் தலைவர் ஸ்டீவ் ஆரிஃபீல்ட், “சாதாரணமாக ஒரு அமைதியான அறையில் உட்காரும் ஒருவர் ஒலியையும் அதன் பிரதிபலிப்புகளையும் கேட்கிறார். ஆனால், அனெகோயிக் அறையில் எந்த ஒரு சத்தமும் அதன் பிரதிபலிப்பும் இருக்காது. அங்கு 'ஜீரோ ரிஃபளக் ஷன்' இருக்கும். நான் பேசும்போது நீங்கள் எனது குரலை உள்ளது உள்ளபடியே கேட்க முடியும். பேசும் போது நான் தலையைத் திருப்பினால் ஒலியும் தலை திருப்பிய திசையில் வளையும்” என்கிறார்.

இப்படிப்பட்ட மௌன அறையில் ஒருவர் உட்கார்ந்த போது அவர் இடி இடிப்பது போன்ற ஓசையையும் ஆறு பாய்வது அல்லது அருவி நீர் கொட்டுவது போன்ற ஓசையையும் கேட்டார். பத்து நிமிடங்களில் அவர் மண்டை வெடித்துச் சிதறி விடுவது போல இருந்தது. உடனே அறையை விட்டு வெளியே வந்து நடந்ததைச் சொன்னார். ஆய்வு நடத்திய விஞ்ஞானிகள், “நீங்கள் கேட்டது இடைவிடாத இதயத் துடிப்புத்தான். உங்கள் உடலில் உள்ள இரத்த ஓட்டமே உடலில் பாய்வது ஆறு பாய்வது போன்ற ஓசையை எழுப்புகிறது. அதைத்தான் நீங்கள் கேட்டீர்கள்” என்றனர். உடலின் அற்புதமான ஓசை விந்தை இது. மைனஸ் டெசிபல் நிலையில் எமது உடலில் ஏற்படும் சத்தத்தையே எம்மால் தாங்க முடியாமல் போய் விடும் நிலை ஏற்படுகிறது.

மாஸன் அண்ட் ப்ராடி (Mason and Brady) ஆய்வு என்பது பிரபலமான ஆய்வாகும். இந்த ஆய்வில் மௌன அறையில் சிலரை இருட்டாக இருந்த நிலையில் 15 நிமிடம் இருக்க வைத்தபோது அவர்கள் மாயத் தோற்றங்களைக் கண்டு அலறினர். அதிலிருந்து தெரிய வருவது, ஒருவர் 15 நிமிடம் ஆழ்ந்த மௌனத்தைத் தாக்குப் பிடித்தால் அதுவே அதிகம் என்பதுதான்.

இனி உலகாயத ரீதியாக, மௌனம் என்பது வெற்றிக்கான வழி என்பது நிலைநிறுத்தப்பட்ட சித்தாந்தம். பல்வேறு ஆராய்ச்சிகள் பல மௌன நிலைகளைச் சுட்டிக் காட்டுகின்றன. ஒரு விவாதத்தில் எதிராளியைக் கிறுக்குப் பிடிக்கும் நிலைக்குத் தள்ள வேண்டுமெனில் ஒரு சுலபமான வழி இருக்கிறது. சொல்லால் அவர் தாக்கும் போது எதிரிலிருப்பவர் ஒவ்வொரு முறையும் நான்கு விநாடிகள் பதிலளிக்கக் கூடாது. போலந்தில் நடந்த ஒரு ஆய்வின் படி, ஒரு மனித மூளை நான்கு விநாடிகள் ஒருவர் மௌனமாக இருந்தால் அவரது கூற்றை நிராகரிப்பதாகப் பதிவு செய்து கொள்கிறது. எதிராளிக்கு எரிச்சல் கொப்பளிக்கும் என்கிறது.

*“ஒருவனுக்கு துரோகமிழைக்காத உண்மை நண்பன் மௌனமே”*

கன்ஃப்யூஷியஸ்

### மௌனம் அற்புதமானது .

பிரபல சிந்தனையாளரான தோரோ, “நான் இரவின் மௌனத்தைக் 'கேட்க' விரும்புகிறேன். ஏனெனில், அந்த மௌனம் நேர்மறையானது. கேட்க வேண்டிய ஒன்று” என்கிறார். பகவான் ரமண மகரிஷி மௌனமாக சும்மாவே இருக்கிறாரே என்று சிலர் கூறிய போது, “நான் மௌன நிலையில் சும்மா இருக்கிறேன் என்பது எப்படி உங்களுக்குத் தெரியும்?” என்று கூறி நிறுத்தி விட்டார். மௌன நிலையில் இயற்கை சக்திகளைப் பயன்படுத்தி ஏராளமான அரும் செயல்களைச் செய்ய முடியும். இதை அரவிந்தரும் வலியுறுத்தியுள்ளார்.

ரமண மகரிஷியின் முன் ஏராளமான கேள்விகளைக் கேட்பதற்காக வந்த பிரபல ஆங்கில எழுத்தாளர் சாமர்செட் மாம் அவர் முன் அமர்ந்த போது கேள்விகள் ஒன்றன் பின் ஒன்றாக மனதில் எழ, அதற்குப் பதிலும் தானாகவே வந்தது. நெடுநேரம் அமர்ந்திருந்த அவரால் ஒரு கேள்வியையும் கேட்க முடியவில்லை. பதில் தான் உடனுக்குடன் வருகிறதே.

ஆக, மௌன நிலையில் பல ஆழ்நிலைகள் உண்டு. பால் குட்மேன் எழுதிய 'நைன் கைண்ட்ஸ் ஒஃப் சைலன்ஸ்' (Nine kinds of silence) என்ற நூலில் அவர், “செழிப்பான மௌனம் ஆன்மாவுக்கான சிறந்த மேய்ச்சல் நிலம்” என்கிறார். “மௌனத்தை நாம் கேட்டால், அது எமது அனுபவங்களை ஆழமாக்கும்” என்கிறார் கவிஞர் பில்லி காலின்ஸ். அவர் எழுதிய கவிதை நூலின் பெயர் 'தி ஹண்ட்ரட் கைண்ட்ஸ் ஆஃப் சைலன்ஸ் (The hundred kinds of Silence : Billy Collins). தனது தாயின் கல்லறைக்குச் சென்று இறந்த தனது தாயுடன் பேசி தான் புதிதாக அணிந்திருக்கும் கண்ணாடி எப்படி இருக்கிறது என்பது பற்றி அவரிடம் கேட்க முடிகிறது என்கிறார் அவர், தனது கவிதை வாயிலாக!

ஆக, மௌனங்கள் நூறு வகை! ஒவ்வொன்றும் ஒரு வகை! எல்லையற்ற முடிவிலா மோனம் (மௌனம்) உரைக்க ஒண்ணா அற்புதம். அறிவியலும் ஆன்மீகமும் உளவியலும் ஒன்று சேரும் இடம் மௌனமே!









சிவ ஆரூரன் எழுதிய 'யாவரும் கேளீர்' நூல் அறிமுகவிழா தேசிய கலை இலக்கிய போரவையின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா கமலநல அபிவிருத்தி திணைக்கள கமக்காரப் பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றது. தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயலாளார் சு.டொன்பொஸ்கோ தலைமையில் இந்த விழா நடைபெற்றது. (ம - 402)

எஸ்.மல்லிகா

# பழந்தமிழ் இலக்கியத்தில் ஊழ்-13

நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது என்ற வார்த்தையைப் பொதுவாக எல்லா மனிதர்களுடைய உதடுகளும் உச்சரிப்பதுண்டு. இதற்குப் பின்னால் இருப்பது, விதி. இந்த விதியைப் பழந்தமிழ் இலக்கியங்கள் மிகத் தெளிவாக விளக்கியுள்ளன. அத்துடன், "விதி வரைந்த பாதை வழியே வாழ்க்கை ஓடுது" என்ற சினிமாப் பாடல் வரிகளும் விதியின் தாக்கம் பற்றி எடுத்துரைக்கின்றன.



### பழமொழி நானூறு உரைக்கும் ஊழ்வினை

இலக்கியங்கள் மனிதர்களை நெறிப்படுத்துவன, அவர்தம் வாழ்வை வளப்படுத்துவன. மனித வாழ்க்கையில் நேரும் இன்னல்கள் எதனால் விளைகின்றன, அவற்றைத் தவிர்க்க என்ன வழிமுறை என்பது பற்றியும் எடுத்துரைப்பன. அது மட்டுமன்றி, அவர்களது வாழ்க்கையைப் பீடிக்கும் துன்பங்கள் குறித்தும் அதற்குரிய காரணங்கள் என்னவென்றும் விளக்கி நிற்பன. விதியின் கையில் விளையாட்டுப் பொம்மைகள் போல மனிதர்கள் பந்தாடப்படுவது பற்றியும் சுட்டுகின்றன. இதனைப் பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான பழமொழி நானூற்றில் காணமுடிகிறது.

**''எவ்வம் துணையாய்ப் பொருள்முடிக்கும் தாளாண்மை**
**தெய்வம் முடிப்புழி என்செய்யும்? மொய்கொண்டு**
**பூப்புக்கு வண்டார்க்கும் ஊர! குறும்பியங்கும்**
**கோப்புக் குழிச்செய்வ(து) இல்''**

மனிதர்களிடத்து நல்ல ஊழ்வினை இல்லாது போனால், செல்வம் முயற்சியாலும் வந்து சேராது என்ற கருத்தினை மேற்குறித்த செய்யுள் விளக்கி நிற்கிறது. இதுபோன்று மற்றொரு பாடல் விதி குறித்துப் பின்வருமாறு கூறுகின்றது.

**சுட்டிச் சொல்லப்படும் பேரறிவி னார்கண்ணும்**
**பட்ட விருத்தம் பலவானால் பட்ட**
**பொறியின் வகைய கருமம் அதனால்**
**அறிவனை ஊழே அடும்**

> மனித வாழ்க்கையை அங்கும் இங்கும் அலைக்கழித்து ஆட்டுவிக்கும் விதியை வெல்ல எவராலும் முடியாது. அதன் பிடியிலிருந்து தப்பவும் முடியாது. ஆதலால், நாம் செய்வனவற்றைத் திருந்தச் செய்யவேண்டும். அதிலும், எமக்கும் பிறர்க்கும் நலன்பயக்கும் நன்மைகளையே அதிகம் செய்ய வேண்டும். ஏனென்றால், விதி வலிது.



அறிவிற் சிறந்த பெரியவர்களிடத்தில் குற்றம் காணப்பட நேரின், அது அவர் இப்பிறவியில் செய்த ஊழினால் அன்று. இதற்கு முற்பட்ட பிறவியில் அவர் செய்த ஊழே அதற்குக் காரணம் என்கிறது இப்பாடல். நல்ல அறிவினைக் கூட பேதைமைப்படுத்தி நிற்கும் தன்மை வாய்ந்தது விதி. அது பிறவிதோறும் தொடர்வது என்பது இதனூடு புலப்படுகிறது. இதேபோன்று, மனிதரைத் தாக்கும் கொடிய ஆயுதமாக ஊழ் அம்பு இருக்கின்றது என்று கூறுகின்றது மற்றொரு பாடல்.

**நனியஞ்சத் தக்க அவைவந்தால் தங்கண்**
**துனியஞ்சார் செய்வ(து) உணர்வார் பனியஞ்சி**
**வேழம் பிடித்தழூஉம் வேய்சூழ் மலைநாட!**
**ஊழம்பு வீழா நிலத்து**

ஊழால் செலுத்தப்படும் அம்புகள் குறிக்கு இலக்கானவனைச் சென்று சேர்தலன்றி நிலத்தின் மேல் விழுவதில்லை. மிகவும் அஞ்சத்தக்க அந்த அம்புகள் தம்மை நோக்கி வந்தால், மனிதர்கள் தாம் செய்கின்ற நன்மை தீமையை உணர்வர். ஆனால், அவற்றால் தமக்கு உண்டாகும் துன்பத்துக்கு அஞ்சமாட்டார்கள் என்கிறது இப்பாடல். இதிலிருந்து நாம் செய்கின்ற வினைக்கேற்ற தண்டனையை நிச்சயம் அனுபவித்தே தீரவேண்டும் என்பது புலப்படு கின்றது.

### எந்தச் செயலுக்கும் எதிர்வினை உண்டு

நாம் செய்கின்ற வினைக்கேற்ற பலனை அனுபவித்தே ஆகவேண்டும் என்று இலக்கியங்களிலுள்ள ஊழ்க் கோட்பாடு வலியுறுத்துகின்றது. இதனை, எந்தச் செயலுக்கும் எதிர்வினை உண்டு என்று விஞ்ஞானமும் நிரூபித்துள்ளது. நாம் நன்மைகள் செய்தால், நன்மைகள் விளையும். தீமைகள் செய்தால், தீமைகளைத்தான் அறுவடை செய்ய வேண்டும். இதன் தாக்கத்தை உணர்ந்த நீதிப்பாடல் ஒன்று, "நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம். நமக்கென்று இருப்பதைப் பிறர்க்கும் கொடுப்போம்" என்று அழகாக உரைக்கின்றது. இலக்கியத்துக்குள் இல்லற தர்மத்தையும் கலந்து இயம்புகின்றது.

சிலர் இந்தப் பிறவியில் எந்தப் பாவமும் செய்யவில்லை என்றாலும், துன்பக்கடலுக்குள் மூழ்கிக்கிடந்து புலம்புவதை நாம் பார்த்திருப்போம். அதற்குப் பழவினைதான் காரணம். இதற்குத் தெய்வத்தை நொந்து பலனில்லை. அவ்வாறு அவர்கள் துன்பத்தை அனுபவிக்கின்றனர் என்றால், அவர்தம் பாவக்கணக்குத் தீர்கிறது என்று அர்த்தம். அதுபோன்று நல்லது எதுவுமே செய்யாத தீமைகள் புரிகின்ற ஒருவன் சிறப்பாக வாழ்கின்றான் என்றால், அதற்கு அவன் முற்பிறவியில் செய்த புண்ணியம்தான் காரணம். அவனது புண்ணியக்கணக்குத் தீர்ந்ததும் விதி அவனையும் ஆட்டுவிக்கும். இந்த ஆட்டத்துக்கு எவருமே ஆடாமல் இருக்க முடியாது.

இதேபோன்று, நாம் நேசிக்கின்ற உறவுகள் எம்மைப் பிரிந்து செல்வதும் புரிந்துகொள்ளாமல் இருப்பதும் விதிவசத்தால் என்பதனை இலக்கியங்கள் தெளிவாக உரைத்துள்ளன. இதில், உயிருக்குயிராக நேசிக்கும் காதலர் வாழ்க்கையும் அடங்கும். அவர்கள் சேராமல் பிரிவதும், இல்வாழ்க்கையில் சேர்ந்து பிரிவதும் விதியினால்தான் என்கின்றன பழந்தமிழ் இலக்கியங்கள். இதற்குச் சங்க இலக்கியத்தில் நிறையச் சான்றுகளைப் பார்க்கலாம். இந்தக் கனதி எத்தகையது என்பதனைப் பாரசீகப் புலவர் உமர்கய்யாமின் பாடலிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னாய் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ.
அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ

மொழிபெயர்ப்பு- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

மனித வாழ்க்கையை அங்கும் இங்கும் அலைக்கழித்து ஆட்டுவிக்கும் விதியை வெல்ல எவராலும் முடியாது. அதன் பிடியிலிருந்து தப்பவும் முடியாது. ஆதலால், நாம் செய்வனவற்றைத் திருந்தச் செய்யவேண்டும். அதிலும், எமக்கும் பிறர்க்கும் நலன்பயக்கும் நன்மைகளையே அதிகம் செய்ய வேண்டும். ஏனென்றால், விதி வலிது.

(முற்றும்)








சி.க.சக்திவேல் எழுதிய 'வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை' எனும் நூல் பிரதியின் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் கடந்த மூன்றாம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. (ம)



# தாயும் சேயும்

வளவை வளவ

ஒன்றிலிருந்து இன்
உருவாகும் போ
தாயாகவும் மற்
சேயாகவும்ஆகிவி
இது உயிரியல் இயல்பு.




**தாய்மை**

ஒன்று ஒன்றாக இருந்த போத
ஒளி தாயான போது தனித்து
பேரொளியாகிப் பிரகாசிக்கி
யாமை என்ற இருளிற்குள்ளி
மையை வழிநடத்துவது தா
அந்தப் பேரொளியேதான்.
உலகெங்கும் ஒரேவேளை
முடியாது என்பதால் தான் ந
படைத்தேன் என இறைவ
போலத்தான் உலகப்பேறறி
பிரியன் சொல்லிச் சென்றா
பிரபஞ்சத்தின் தோற்றுவ
தான். ஒன்றிலிருந்து ஒன்று
யிரும்பலவுலகும் படைத்
கும் எல்லையறு பரம்பெ
இதுதான்போலும். பரம்பெ
தாய்மை என்பதும் ஒன்
னத் தமிழ் கூறுவது தமிழ
பன்றோ? தாய்மையி
மையே பெருமை.

**அவ்வை கூறும் மொ**

இது கண்டு நெஞ்சு பெ
காத மதவாதி "தாயிற் சி



தயாவான தத்துவனே"என தாய்மையை விஞ்சியதாக ஒன்றைப்பாடிநின்றான். எந்தத்தத்துவனைச் சிறப்படைய வைத்தாலும் அதுதாய்மைக்கு ஈடாகாது என்பதை முரசறைய தாய்மையின் பிரதிநிதியான அவ்வை, "தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை''' என்று ஓங்கிக் குட்டி விட்டுத்தாயிற் சிறந்த தயவான தத்துவனை பின்நகர்த்தி வைக்க அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றறைந்தான். அறிவின் தெளிவன்றோ இது.

மதம் கொண்ட மதவாதி ஏகம் ஸத் விப்ரா பஹூதா வதந்தி (சமஸ்கிருதம்) என்று பிற மொழியை மேன்மைப்படுத்த மந்திரமாக்

**தாய்மை தரும் அன்பு**

உயரமான சிட்டி ஒன்றின் மீது ஒரு யானை வடிவப் பொம்மை வைக்கப்பட்டிருந்தது. எதிர்த்திசையில் ஒரே இடத்தில் கீறிய கோட்டின் மீது சீலனும் முகிலனும் அம்பும் வில்லுமாக நின்று விற்பயிற்சி செய்து கொண்டு நின்றனர். பல தடவை அம்பெய்தும் முகிலனால் அந்தயானையை வீழ்த்திவிட முடியவில்லை. முகில் .... பாராடா இது எனது முறை ஒரே ஒரு தடவை... "செல்லி முடித்து அம்பை எய்தினான் சீலன். யானையின் சுளகுக்காதிற்குள் துளைத்து யானையின் தலையை வீழ்த்திவிட்டு அப்பால்சென்றது அம்பு. எல்லோரும் கைதட்டி ஆரவாரித்துக் கூத்தாடிக்க ளித்தனர்.

**சேய் பெறும் மகிழ்வு**

முகிலனின் விழிகள் குளமாகி உடைப்பெடுத்தன. சீலன் வெற்றி வெற்றி என்று

அய்யனார் என்ற கவிஞர் மூதில் முல்லை இயல்பு நிலையில் பெண்களின் வீர உணர்வும் மிகுந்திருந்தது என்கிறார். அதற்கேற்ப ஒவ்வொரு பெண்ணும் வீரப் பெண்ணாகவும் இருந்து வீரமக்களை சமூகத்திற்கு அளித்து மகிழ்ந்ததாக அறிய முடி கிறது.

*"வந்த படை நேனாள் வாயின்*
*முலை பறித்து*
*வெந்திறல் எஃகம் இறைக்கொளீ*
*இ முந்தை*
*முதல்வர் கல் தான் காட்டி மூதில்*
*மடவாள்*
*புதல்வனைச் செல்கொன் றாள்*
*போர்க்கு"* என்று

அய்யனாரின் புறப் பொருள்வெண் பாமாலை சொல்லிக் கொள்கிறது.

*"கெடுக சிந்தை கடிதிவன் துணிவே*
*மூதின் மகளிராதல் தகுமே*
*இன்றும் செருப்பறை கேட்டு*
*விருப்புற்று மயங்கி*
*வேல்கைக் கொடுத்து வெளிது*
*விரித்துடீஇ இல்*
*பாறு மயிர்க் குடுமி யெண்ணெய் நீவி*
*ஒரு மகன் அல்லது இல்லோள்*
*செருமுக நோக்கிச் செல்கென விடுமே"*
*(புறம் 279)*

என்று புறநானூறு வீரத்தின் சின்னங்களான மாவீரர்தம் பெருமையை ஒக்கூர்மாசாந்தியாரின் பாடலில் கூறிய வீரத்தையே பேசிக் கொண்டிருக்கின்றது. அன்றைய தமிழ்த்தாயினதும் சேயினதும் இயல்பான தன்மைகளையும், இன்றைய தாய்மாரின் இயல்புகளையும் இலக்கியப் பொய்கைக்குள் மூழ்கிக் குளித்தெழுந்து கொண்டால் அங்கு ஆயிர மாயிரம் தேன் துளிகளாக இலக்கியப் புதையல்கள் சுவைபடக் கிடைக்குமன்றோ. இது தான் தமிழின் சிறப்பாகும்.






# நவக்கிரக தோஷங்களும் எளிய பரிகாரங்களும்...

**சூரியன்:**
ஒருவரின் ஜாதகத்தில் சூரியனால் தோஷம் ஏற்பட்டால், சூரியத்தசைமற்றும்சூரியபுத்திகாலத்திலும், ஞாயிறன்றும் விரதம் இருத்தல் நன்று. இக்காலத்தில் வீட்டுப் பூஜையறையில்சூரியபகவானின்திருவுருவப்படத்துக்குச்செந்தாமரை மலர்களால் ஆன மாலையை அணிவித்து, கோதுமையால் இனிப்பு செய்து நைவேத்தியம் செய்து, சூரிய காயத்ரி பாராயணம் செய்தால் தோஷம் நிவர்த்தி ஆகும்.

**சந்திரன்:**
சந்திரனால் தோஷம் ஏற்பட்டால், சந்திர திசை மற்றும் சந்திர புத்தியில் திங்கட்கிழமை விரதம் இருத்தல் நன்று. அம்பிகையின் திருவுருவப் படத்துக்கு வெள்ளை அரளி மலர்ச் சரம் சாத்தி, பால் அன்னம் நைவேத்தியம் செய்து, சந்திர காயத்ரியைப்பாராயணம்செய்துவந்தால்தோஷம் நிவர்த்தியாகும்.

**செவ்வாய் தோஷ நிவர்த்தி:**
செவ்வாயால் தோஷம் ஏற்பட்டால், செவ்வாய் திசை மற்றும் புத்தி காலங்களில் செவ்வாய்தோறும் விரதம் இருக்கவேண்டும். இக்காலத்தில்செவ்வாய்பகவானுக்குச் செண்பக மலரால் அர்ச்சனை செய்து, வெண் பொங்கலும் துவரையும் நைவேத்தியம் செய்து, செவ்வாய் காயத்ரியைப்பாராயணம்செய்து, முருகப்பெருமானை வணங்கி வர செவ்வாய் தோஷம் நிவர்த்தி ஆகும்.

**புதன்:**
புதனால் தோஷம் ஏற்பட்டால், புதன் திசை, புதன் புத்தி காலங்களில், புதன்கிழமை விரதமிருந்து, வெண் காந்தள் மலர் தூவி, புளி சாதம் படைத்தல் நன்று. புதனின் காயத்ரி மந்திரத்தை 24 முறை பாராயணம் செய்து ஸ்ரீமகா விஷ்ணுவை வழிபட புத பகவானின் பரிபூரண அருளும், சிறந்த அறிவும், கல்வியும் பெறுவார்கள்.

**குரு:**
குருவால் தோஷம் ஏற்பட்டால், குரு திசை மற்றும் புத்தி காலங்களில், வியாழக்கிழமை விரதமிருந்து முல்லை மலர் தூவி, கொண்டைக் கடலையுடன் தயிர் சாதத்தை நைவேத்தியம் செய்தல் நன்று. குரு காயத்ரியை 24 முறை பாராயணம் செய்து வழிபட வேண்டும். இதனால் குரு தோஷம் விலகி, சகல நன்மைகளும் பெறலாம்.

**சுக்கிரன்:**
சுக்கிரனால்தோஷம்ஏற்பட்டால், சுக்கிர திசை மற்றும் புத்தி காலங்களில், வெள்ளிக்கிழமை விரதமிருந்து, வெண்தாமரை மலரிட்டு, நெய் சாதம் நைவேத்தியம் செய்து, சுக்கிர காயத்ரியை 24 முறை பாராயணம் செய்வதுடன், மகாலட்சுமியை வழிபட, சுக்கிர தோஷம் நிவர்த்தி ஆகும்.

**சனி:**
சனியினால் தோஷம் ஏற்பட்டால், சனி திசை மற்றும் புத்தி காலங்களில், சனிக்கிழமை விரதமிருந்து, கருங்குவளை மலர் தூவி, எள் அன்னம் படைத்து. சனி காயத்ரியை 26 முறை பாராயணம் செய்வது நன்று. சனி பகவானின் வாகனமான காகத்துக்கு அன்னம் அளித்து வந்தால், சனி தோஷம் நிவர்த்தி ஆகும்.

**ராகு:**
ராகுவினால் தோஷம் ஏற்பட்டால், ராகு திசை மற்றும் புத்தி காலங்களில் வெள்ளிக்கிழமை விரதமிருந்து, ராகு காலத்தில் மந்தாரை மலரால் ராகுவுக்கு அர்ச்சனை செய்தல் சிறப்பு. உளுந்து கலந்த அன்னம் நைவேத்தியம் செய்வதுடன், துர்க்கை அம்மனை வழிபட வேண்டும்.

**கேது:**
கேதுவினால் தோஷம் ஏற்பட்டால், கேது திசை மற்றும் புத்தி காலங்களில் திங்கட்கிழமை விரதமிருந்து பல வகையான மலர்களால் கேது பகவானுக்கு அர்ச்சனை செய்து வர சித்தி கிட்டும். சித்ரான்னம் நைவேத்தியம் செய்ய வேண்டும். தொடர்ந்து விநாயகரை வழிபட்டாலும் கேது தோஷங்கள் விலகும்.

# 'பனைவளத்தின் மகிமையை உலகறியச் செய்வோம்'

## பன்னாட்டு கருத்தரங்கும் கண்காட்சியும்





பனை வளத்தின் மகிமையை உலகறியச் செய்வோம் எனும் தொனிப் பொருளில் பன்னாட்டு கருத்தரங்கு கடந்த ஆகஸ்ட் 25 ஆம் திகதியும் பன்னாட்டு கண்காட்சி கடந்த ஆகஸ்ட் 25, 26 மற்றும் 27ஆம் திகதிகளிலும் காலிமுகத்திடல்விடுதியில் இடம்பெற்றிருந்தன. பனைவளம் மிக்க நாட்டில் உள்ள துறை சார் வல்லுனர்கள், ஆர்வலர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை யாளர்கள் ஒன்றுகூடிய கருத்துப் பரிமாற்றங்களுக்கான களமாக அமைந்த இந்த நிகழ்வுக்கு இலங்கை உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பலர் வருகைதந்திருந்தனர்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மருத்துவக் கலாநிதி சிவசங்கர் தலைமையில்நடைபெற்றபன்னாட்டுக்கருத்தரங்கை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆரம்பித்து வைத்திருந்தார்.

இரு அமர்வாக நடைபெற்ற இந்தக் கருத்தரங்கின் முதல் அமர்வுக்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி அரசரத்தினமும், இரண்டாவது அமர்வுக்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர்சு.மோகனதாஸ்ஆகியோரும்தலைமை தாங்கியிருந்தனர்.

இந்த இரு அமர்வுகளிலும் பல்வேறு தலைப்புக்களில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பலர் உரைநிகழ்த்தியிருந்தனர். இந்தக் கருத்தரங்கின் முடிவில், பனைவளம் சார் பன்னாட்டுக் கருத்தரங்குகள் ஆண்டுக்கொருமுறை பனைவளம் உள்ள நாடுகளில் இடம்பெற வேண்டும். பன்னாட்டு பனைசார் சங்கம் நிறுவப்பட வேண்டும் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அன்றைய தினம் பனை அபிவிருத்திச் சபையின் பரிணாம வளர்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக உற்பத்திப் பிரிவினால் புதிதாகச் சந்தைக்கு விடப்பட்ட பனம் பானத்தின் நவீன சுகாதார முறையிலான பொதியிடல் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது.

காலி முகத்திடல் மைதானத்தில் ஒகஸ்ட் 25, 26 மற்றும் 27 ஆம் திகதி வரையிலும் இடம்பெற்ற கண்காட்சியில் பனையோலையிலான புதிய வடிவமைப்புக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டதுடன் ஆராய்ச்சிப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, விரிவாக்கல் பிரிவின் கண்காட்சிக் கூடங்களில் காட்சிப் பொருள்களுடன் செயல்முறை வளங்களும் காண்பிக்கப்பட்டிருந்தன.

இதன் போது இலங்கையின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பனை வளத்தை நம்பி வாழும் பயனாளிகள் பலர் சிறந்த பலனை பெற்றிருந்தனர் இந்தக் கண்காட்சியில், பனங்களியிலான யோகட், மற்றும் ஐஸ்கிறீம் போன்றன முதன்முறையாக விற்பனை செய்யப்பட்டமை பார்வையாளருக்கு ஆச்சரியமூட்டுவதாக அமைந்திருந்தது.

பிளாஸ்டிக்பொருளுக்கு மாற்றீடாக சூழலுக்குப் பாதிப்பில்லாத வாடிக்கையாளர் நலன் கருதி பனையோலையினாலான புதிதாக வடிவமைக்கப்பட்ட சந்தைப்பையொன்று விற்பனை செய்யப்பட்டிருந்தது. இந்தக் கண்காட்சி பனை வள உற்பத்திகளின் பன்னாட்டு ரீதியிலான வர்த்தகத்துக்கு வித்திட்டது.

## வரலாற்றில் இன்றைய தினம் 13.09.2017

1501 - டேவிட் சிற்ப வேலையை மைக்கல் ஏஞ்சலோ தொடங்கினார்.

1791 - பிரான்ஸ் அரசர் 16ஆம் லூயிஸால் புதிய அரசமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1899 - மோட்டார் வாகன விபத்தினால் இறந்த முதலாவது அமெரிக்கப் பிரஜை ஆனார் ஹென்றி பினிஸ்.

1906 - இறக்கைகள் பொருத்தப்பட்ட வானூர்தியின் முதல் பறப்பு ஐரோப்பாவில் இடம் பெற்றது.

1914 - முதலாம் உலகப்போரில் ஜேர்மனி - பிரான்ஸ் இடையேயான எய்சின் போர் தொடங்கியது.



1993 - பலஸ்தீனத்தின் வரையறுக்கப்பட்டசுயாட்சிக்குஅனுமதிவழங்கும் ஒஸ்லோ அறிக்கையில் இஸ்ரேலிய தலைமை அமைச்சர் யிற்சாக் றாபினும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தும் வெள்ளை மாளிகையில் ஒப்பமிட்டனர்.

1923 - ஸ்பெய்னில் இராணுவப் புரட்சி சதியை அடுத்து மிகுவல் பிறிமே டி றிவேறா பதவியேற்று சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தினார்.

1968 - வோர்ஸோ ஒப்பந்தத்திலிருந்து அல்பேனியா விலகிக் கொண்டது.

2007 - ஐக்கியநாடுகள் பொதுச்சபையில் பழங்குடி மக்களின் உரிமைகள் தொடர்பான அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

2016 - பேரறிவாளன் மீது சிறையில் தாக்குதல் இடம்பெற்றதால் அவர் படுகாயமடைந்தார்.

2016 - யாழ்ப்பாண நீதிமன்ற வாசலில் மூன்று பேர் கைது.

## நாளை
**14.09.2017**
வியாழக்கிழமை
**ஆவணி - 29**

திதி: நவமி மு.இ. 09.24 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் கா.06.39 வரை
சுபநேரம்: 07.33–09.03 வரை
ராகுகாலம்: 01.33–03.03 வரை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நடத்தும்

# உயர்கல்வி, தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு-2017

## க.பொ.த சாதாரண / உயர்தரத்தின் பின்னர்....

- அரச, தனியார் துறையில் உயர்கல்வி வாய்ப்புக்களை எவ்வாறு தெரிவு செய்வதெனவும்,
- எதிர்காலத்தில் உயர் வருவாய் தரும் தொழில் வாய்ப்புக்களை இன்றே இனங்காணவும்
- உங்கள் விருப்பு, வெறுப்பு, இயலுமை மற்றும் பொருளாதார அடிப்படைப் பாடநெறிகளை இலகுவாக கண்டறிவதற்கும்
- இலங்கையில் உயர்கல்வி திட்டங்கள், கொள்கைகள், சவால்களை எதிர்கொண்டு வெற்றியடைவதற்கான வழிவகைகளும்.
- சர்வதேச கற்கைநெறிகளும் அதனை இலகுவாக அடைவதற்கான வழி வகைகளும்

மேற்கூறப்பட்ட அனைத்தும் அனுபவமிக்க வளவாளர்களால் ......



## எதிர்காலத்தில்

கௌரவமான தொழில்வாய்ப்பொன்றை கண்டறிவதற்கான நேரடி வாய்ப்பு

நேரம் : முற்பகல் 10 மணி
திகதி : 16.09.2017 (சனிக்கிழமை)
இடம் : 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

SMS

பதிவுகளுக்கு உங்கள் முழுப்பெயர், விலாசத்தை
076 753 1111 இற்கு SMS செய்யவும்.







# ‘வாழ்வு தந்த வாஸ்’



## அர்ப்பண வாழ்வைப் பிரதிபலிக்கும் வரலாற்று நாடக ஆற்றுகை

ஜோ.ஜெஸ்ரின்

திருமறைக்கலாமன்றம், திருப்பாடுகளின் நாடகம் மூலம் உலகப் புகழ் பெற்றமை அனைவரும் அறிந்த விடயமே. அந்தவகையிலே கத்தோலிக்க திருச்சபை ஏவிளம்பி வருடத்தை 'யோசவ்வாஸ்' ஆண்டாக அறிவித்துள்ளது. முத்திப் பேறுபெற்ற 'யோசவாஸ் முனீந்திரரின்' வரலாற்றை நாடகமாகத் தயாரித்து மேடையிட்டு திருமறைக்கலா மன்றம் மற்றுமொரு தனித்துவத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.
யாழ்ப்பாணம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் சிறப்பு ஆற்றுகையாக ஐந்து தடவைகள் மேடையேற்றப்பட்ட 'வாழ்வு தந்த வாஸ்' வரலாற்று நாடகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமறைக்கலாமன்ற திறந்த வெளி அரங்கில் சிறப்புற மேடையேற்றப்பட்டு பலரது வரவேற்பையும் பெற்றது.



**வரலாற்று ஓட்டத்தின் வரையறை**

"அரசியலும் சமயமும் ஒரு வகையில் இரட்டைக் குழந்தைகள். இவை இரண்டும் கைகோர்த்து இணைந்து செயற்பட்டாலும் சரி, ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு முட்டிமோதி பிணக்குண்டு சென்றாலும் சரி, நீ வேறு நான்வேறு என்று எல்லைகள் வரைந்து இயங்கினாலும் சரி இவைகள் இரண்டினதும் உறவு நிலை வரலாற்று ஓட்டத்தை வரையறை செய்கின்றது" என்று கருத்துரைத்த பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளாரின் கூற்றுக்கு இணங்க, 'வாழ்வு தந்த வாஸ்' வரலாற்று நாடகமானது சமகாலத்துடன் ஒத்துப் போகின்றது. சமகால அரசியலும் ஒரு வகையில் ஒத்துப்போகின்றது.





**யோசவ்வாஸின் வாழ்வு**

யோ.யோண்சன் ராஜ்குமார் எழுதி நெறியாக்கம் செய்துள்ள இந்த வரலாற்று நாடகத்தில் காத்திரமான கருத்துக்கள், நகைச்சுவை, பக்திச்சுவை, அவலச்சுவை என அத்தனையும் தனித்துவம் பெற்றிருந்தன. 'யோசவ்வாஸ்' வரலாற்றின் பெரும் பகுதியை இந்த நாடகத்தை பார்ப்பதன் ஊடே ஆதாரங்களுடன் அறிந்து கொள்ள முடியும்.
கிறிஸ்தோப்பர் வாஸ் மற்றும் மரியடோ பிரண்டா தம்பதிகளுக்கு 1651 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி மூன்றாவது மகனாக பிறந்தவர்தான் யோசவ்வாஸ். இவருடைய குடும்பத்திலிருந்து நான்கு குருக்கள் உருவாகியுள்ளனர். வாசின் சகோதரி அஞ்சலாவாஸ் அருட்சகோதரியாகவும் சேவையாற்றியுள்ளார்.
யோசவ்வாஸ் அமரத்துவம் அடைந்து 30 ஆண்டுகளில் 'செபஸ்ரியன் டொறேகோ' எனும் யோசவ்வாசின் பேரன் முறைப்படி திருநிலை பெற்று குருவானவர் புனிதரின் வரலாற்றை முதன் முதலாக தொகுத்துள்ளார்.
குறிப்பாக இலங்கையில்தான் புனிதரின் சேவை மையம் கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்திலும் கண்டியிலும் இன்றுவரை உள்ள பல நினைவுச் சின்னங்கள் இதற்கு தக்க சான்றுகளாக அமைந்துள்ளன.
யாழ். கொழும்புத்துறை பகுதி ஊடாக யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களுக்கும் குறிப்பாக சின்ன உரோமை சில்லாலைக்கு அவர் பயணங்கள் அமைந்திருந்தது. மன்னார், நெடுந்தீவு, புத்தளம் போன்ற பிரதேசங்களுக்கும் அவரது பயணங்கள் இடம்பெற்றன. கண்டியரசன் இரண்டாம் விமல தர்ம சூரிய இவர் தந்தை இராஜசிம்ஷா 50 வருடங்கள் அரசாண்டவர். வாஸ் அடிகளாருக்கும் கண்டி அரசனுக்குமான பரஸ்பர உறவு நிலை திருச்சபையின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக காணப்படுகின்றது.

**கதாபாத்திரப் பண்பு**

'வாழ்வு தந்த வாஸ்' வரலாற்று நாடகத்தில் நடித்த அனை வரும் புனிதமான பணியை சிறப்பாக செய்துள்ளனர். யோசவ்வாஸ், ஜோண், சுவக்கீன் ஐயா, வாண்நீற், அன்னா பவுலோ, மனுவல் டீ சில்வா, டொன் பேதுரு போன்ற பாத்திரங்கள் ஏற்று நடித்தோர் தனித்துவமான திறனை வெளிப்படுத்தினர். ஒலி, ஒளி அமைவு என்பது திறந்த வெளி அரங்கில் சவாலுக்குரியதாக காணப்பட்டது. மக்கள் கதாபாத்திரங்களை இன்னமும் உள்வாங்கிச் செயற்பட இடமுண்டு. நாடகத்தை விரைவு படுத்தியும் சில இடங்களில் தேவையற்ற விசாலங்களைச் சுருக்கியும் இருக்கலாம். பாடல்கள் அருமையாக இருந்தன. இசையமைப்பும் சிறப்பாக இருந்தது. ஒரே குரல் அலைவைத் தவிர்த்து வேறுபட்ட குரல் வளங்களைச் சேர்த்திருக்கலாம்.
கோவையில் பிராமண குலத்தைச் சேர்ந்த யோசவ்வாஸ் கத்தோலிக்கத்தை தழுவி சேவையாற்றிருக்கிறார். செபமாலை பக்தியை முதன்மையாகக் கொண்டு வாழ்வில் உயர்ந்த வாஸ், 'கல்வினிஸ்' எனப்படுகின்ற ஒல்லாந்தர்கள் இலங்கையில் மேற்கொண்ட சித்திரவதைகளை குறிப்பாக, கழுமரத்தில் ஏற்றல், கொலை செய்யப்படுதல் போன்ற மனிதப் படுகொலைகளை மதத்தின் பெயரால் அரங்கேறிக் கொண்டிருந்த வேளையில் 20 நாள்கள் பயணம் செய்த காட்சிகளை மக்கள் நடிகர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர். பிச்சை எடுத்துச் சாப்பிட்டு வாந்திபேதி நோய்க்கு உள்ளாகி துரத்தி விடப்படுதல், பிச்சைக்காரன், ஆடு மேய்பவன், விறகு விற்பவன் என அக்காட்சிகள் தனித்துவம் பெற்றிருந்தன.
யாழ்ப்பாணத்தில் இரவுப் பூசை பவுலோவின் மகன் வருத்தத்தை சுகப்படுத்தியதால் மக்கள் முழுப்பூசை காண்பதற்கு வழி ஏற்பட்டது. பவுலோவின் குடும்பம் சிறப்பாக நடித்திருந்தார்கள். டச்சுக்காரருக்கு சந்தேகம் வர சில்லாலை மூப்பரின் வீட்டுக்கு நாட்டுக்கூத்து பார்க்கச் செல்பவர்கள் போல 'யோசவ்வாஸ்' அழைத்துச் செல்லப்படுகிறார். டச்சுக்காரனின் நகைச்சுவைகள் பார்ப்பேரை சிரிக்க வைத்தது. அன்னாரிற்கு காட்சி கொடுத்த சம்பவம் மெய்சிலிர்க்க வைத்தது.

**வேண்டுதல்**

வாழ்வு தந்த வாஸ் வரலாற்று நாடகமானது கண்டி, புத்தளம், சில்லாலை போன்ற பல பிரதேசங்களில் மேடையேற்றப்படுவது யோசவ்வாஸ் ஆண்டின் சிறப்புக்கு வலுச்சேர்க்கும்.





2017ஆம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது வழங்கல் விழாவில் 'சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு' இலக்கியப் பிரிவில், அருணா செல்லத்துரை எழுதிய 'அடங்காப்பற்று வன்னியில் ஆதிகாலத் தமிழர் வரலாறு' என்ற நூல் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. கொழும்பு தாமரைத் தடாகத்தில் கடந்த 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்து அருணா செல்லத்துரை கௌரவிக்கப்பட்டார்.

## ஹுசைனின்...

ஆரம்பத்தில் சிறப்புரையாற்றிய ஆணையாளர் ஹுசைன் இலங்கையைக் கடுமையாகச் சாடியிருந்தார். இது தொடர்பில் இலங்கை அரசின் நிலைப்பாடு என்ன? என்று, அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவிடம் 'உதயன் பத்திரிகை' வினவியது.

அவர் தெரிவித்ததாவது:

ஐ.நா. ஆணையாளர் அவசரப்பட்டிருக்கின்றார். அவர் கருமங்களை நிதானமாக ஆராய்ந்து கருத்து வெளியிட்டிருக்கலாம்.

ஐ.நாவிடம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற எமக்குப் போதுமான கால அவகாசம் உண்டு. இதில் இரு தரப்புமே உடன்பட்டுள்ளோம். கால அவகாசம் அவ்வளவு இருந்தாலும் நாங்கள் அதுவரை காத்திருக்காமல் இயலுமான விரைவில் நாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகின்றோம்.

காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் பொறிமுறை, தடுப்புக்காவலில் உள்ளவர்களை விடுவிக்கும் செயற்பாடுகள், மக்களின் காணிகள் விடுவிப்பு போன்றவற்றை நாங்கள் படிப்படியாகச் செய்து வருகின்றோம். கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றி பன்னாட்டுச் சமூகத்துக்கு அளித்த கடப்பாட்டில் நாங்கள் உறுதியாக உள்ளோம். நாங்கள் எதுவும் செய்யவில்லை என்று கூறுவதை ஏற்கமுடியாது. ஆணையாளர் தனது கருத்தை ஒரு தரம் மீளாய்வு செய்து உண்மை நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். எங்களுக்குத் தரப்பட்டுள்ள கால அவகாசத்தில் எல்லாவற்றையும் செய்து முடிப்போம் என்றார். (வ-5)

## தொண்டர்...

அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக, வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று, கொழும்பு அரசின் கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றிய ஆயிரத்து 79 பேருக்கு கடந்த ஜூன் மாதம் 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டிருந்தது. இதில் சித்தியடைந்தவர்களின் பெயர் விவரங்கள், கொழும்பு கல்வி அமைச்சுக்கு அனுமதிக்காக பாரப்படுத்தப்பட்டிருந்தன. அவர்களில் நியமனத்துக்கு தகுதியானவர்களின் பெயர்ப் பட்டியல் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னதாக, வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5,101)

## மோ.சைக்கிளில்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-8,ரி1,26)


பழைமை வாய்ந்த ஏழ தலைமுறைகளாக செய்து வரும்

### ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) ரகசியம் பாதுகாக்கப்படும்

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302, 076 466 4153, 075 509 5887.

### சிறுநீரகம் தேவை

37 வயதுடைய பெண் சிறுநீரக நோயாளிக்கு $AB^+$ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது. 35 வயதுக் குட்பட்ட உதவ விரும்பும் பரோபகாரிகள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு :- 077 493 9918

### வீடு வளவு விற்பனைக்குண்டு

வளன்புரம், கொழும்புத்துறை சூசையப்பர் கோயிலடி, 2 ஆம் ஒழுங்கையில் 1 பரப்பு $6\frac{1}{4}$ குளி அளவு கொண்ட காணியில் சகல வசதிகளும் அடங்கிய வீடு விற்பனைக்குண்டு.

077 614 6434

### சீனி அரியதரம் தேவை

நீங்கள் சீனி அரியதரம் செய்வதில் கை தேர்ந்தவரா? எங்களுக்கு ஏற்றுமதிக்குத் தேவையான சீனி அரியதரம் உங்களால் செய்து தரமுடியுமா?

075 491 8984

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகவும் கொழும்பில் சொந்த தொழில் புரியும் 47 வயதுடைய மணமகனுக்கு 35 வயதிற்கு குறைவான நற்குணத்தை உடைய அழகான மணமகள் தேவை. திருவாதிரை நட்சத்திரம் பாவக்கிரகம் 09 உடையவர் மிதுனராசி

077 163 3001

### The Thinnai



GET

### மாணவர்களுக்கான இலவச ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி

த திண்ணை (THE THINNAI) ஹோட்டல் ஞானம் எடியுகேஷன் டிரஸ்டின் அனுசரணையுடன் முற்றிலும் இலவசமான 40 000/= பெறுமதியுள்ள 3 மாத ஹோட்டல் பயிற்சி நெறியொன்றை ஒக்டோபர் முதல் ஆரம்பிக்கவுள்ளது. கீழ்காணும் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறன. முதலில்விண்ணப்பிக்கும் 40 மாணவர்களே நேர்முக தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.



- வயதெல்லை 18 - 25
- G.C.E O/L
- ஆங்கில அறிவு
- ஆர்வமுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். விண்ணப்பப்படிவங்களை த திண்ணை ஹோட்டலில் பெற்றுக்கொள்ள முடியும்.
- விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முடிவு திகதி: 20.09.2017

அனுப்பவேண்டிய முகவரி - 86, பலாலி வீதி, திருநெல்வேலி , யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல - 021 203 0400/ 076 7528 628
மின்னஞ்சல் - hr@thethinnai.com

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்பட்டு தகுதியுடையோர் தகுந்த ஊதியத்துடன் தொழில் ரீதியாக உள்வாங்கப்படுவார்கள்.

### உடனடி வேலைவாய்ப்பு

AFtech leads to intelligences, inaugurate their development and mentoring zone, soon at Jaffna.

We believe in staying ahead of the game and helping our clients do their work flows through employ the most cutting-edge technologies - from automation to robotics and AI – even as they are being explored.

Our Immediate Job Openings

- Client Relation Associate (CRA) or Receptionists
- Marketing Manager and Associates
- Consultants
- DTP & Web Designers

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

If you have the following with you

- G.C.E (O/L) or G.C.E (A/L) or Diploma or Graduation or Post Graduation
- Photo ID proof (NIC/Passport/DL/College ID)
- Photograph
- Resume

And also appreciate you, if you have respective computing exposures.
Just Mail us aftechjaffna@gmail.com

Walk in on 16.09.2017 @1.30 pm 17.09.2017 @ 10.00 am

124 1/1, Palaly Road, Iluppaiyady, Jaffna. (Near Suharni Hospital) Ph: 0764673221

### லொறி விற்பனைக்கு

TATA LPT -2515 டாங் Ten Wheeler லொறி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்.

021 222 7304/077 357 3095

### வீடு விற்பனைக்கு

யாழ்.நகரில் கொட்டடிச் சந்திக்கு அண்மையில் வீடு விற்பனைக்குண்டு. சுமார் 3 பரப்பில் நன்னீர் கிணற்றுடன் கூடியதுமாகும்.

077 227 9219

### காணி விற்பனைக்கு

மாலிசந்தி பிரதேசசபைக்கு எதிரில் $5\frac{1}{2}$ பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு.

077 742 2604

### லொறி விற்பனைக்கு

Ashok Leyland Parter லொறி $14\frac{1}{2}$ அடி அலுமினியம் லொறி LL -XXXX 30000 K.Meter ஓடியது. உடன் விற்பனைக்கு.

077 742 2604

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)


### முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையின் சுத்திகரிப்புசேவை, பாதுகாப்புசேவை என்பவற்றிற்கான கேள்வி கோரல்கள் 2017/2018

முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகமை வாய்ந்த கேள்விதாரர்களின் முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்

| தொ. இல. | பெறுகை இல. | கேள்விகள் | காலப்பகுதி | உத்தரவாத பணத்தொகை |
|---|---|---|---|---|
| 01 | NP/DGH/MUL/2017/Cle/04 | சுத்திகரிப்பு சேவை | 11.10.2017 – 10.10.2018 | 40,000.00 |
| 02 | NP/DGH/MUL/2017/Sec/05 | பாதுகாப்பு சேவை | 11.10.2017 – 10.10.2018 | 40,000.00 |

1. 2017 முதல் 2018 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு, சேவைகளுக்காக ஆர்வமுள்ள இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்கள். இவ் வைத்தியசாலை கணக்குக் கிளையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1.000.00 செலுத்தி கேள்வி ஆவணங்களை 14.09.2017 தொடக்கம் 03.10.2017 ஆம் திகதி காலை 9.30மணி முதல் பி.ப.3.30 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.
2. அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருக்க வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் 04.10.2017 திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்கிடைக்கூடியவாறு தலைவர். கேள்விச்சபை மாவட்ட பொதுவைத்தியசாலை. முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவுதபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக பெறுகைபெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 04.10.2017மு.ப. 10.30 மணிக்கு விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் திறக்கப் படும்.
4. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகக் கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்துசெய்வதற்கும் பெறுகைகளின் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
6. மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொ.இல.0212061423

வைத்தியகலாநிதி திரு.ப.தயானந்தரூபன்
தலைவர், பிராந்தியபெறுகைக் குழு
மாவட்டபொதுவைத்தியசாலை
முல்லைத்தீவு

## மரண அறிவித்தல்கள்

### சேனாதிராசா வசந்தகுமார்



தோற்றம் 14.12.1967 மறைவு 10.09.2017

உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா வசந்தகுமார் 10.09.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நாகரட்ணம் - பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், புண்ணியமாலாவின் அன்புக் கணவரும், திலீபன், நித்தியானந்தன், புஸ்பவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி,
மைத்துனர்மார்.

சித்திவிநாயகர் கோயிலடி,
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

**077 076 1188, 077 284 1948**

### சபாரத்தினம் சீதாலெட்சுமி

(முன்னாள் பரிசாரகர், கோப்பாய் அரசினர் வைத்தியசாலை)



பிறப்பு 26.06.1940 இறப்பு 10.09.2017

வேரவில் பூநகரியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மேற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சீதாலெட்சுமி அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை 10.09.2017 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2017) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யபடும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி திரேஷா புஸ்பம் பிலிப்பையா



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி திரேஷா புஸ்பம் பிலிப்பையா 09.09.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் ஊறணியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசீர்வாதம் பிலிப்பையா (இளைப்பாறிய அதிபர்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராயப்பு - றோசம்மா தம்பதியரின் மூத்த நேச மகளும் ஆசீர்வாதம் - அனாசியம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற ஜறின்(றதி) மற்றும் புஸ்பகுமார் (பபா - கனடா), டெனி (பபி- கனடா), றொயிலின் (றெஜி -நோர்வே), அருட்சகோதரி டொறின் திருக்குடும்பக் கன்னியர் மடம் (கனடா), டொறிஸ் (ரவி - கொலன்ட்), பொலின் (விஜி - நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிளசிடஸ், மேரிபுஸ்பகுமாரி, பெனடிக்ரா, ஜெயசீலன், அன்ரன்ற், அன்ரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் டினேஷ் சர்மினி, டிலக் ஷி றெஷான், டனிடறன் நயோமி, டில்றுக் ஷன், கிஷாணி, டில்ஷான், டிக்றிக் டொனேஷா, அனுஷா, ஜெனீபன், ஜெனார்த்தன், ஜெறிக் ஷன் ஆகியோரின் பேர்த்தியும் லீடியா விஸ்ரன், டிலன், எய்டன் ஆகியோரின் பூட்டியும் யோசவ்வின்(ராணி), காலஞ்சென்ற கில்டா(பேபி) மற்றும் அருட்சகோதரி ஜெம்மா (திருச்சிலுவை கன்னியர் மடம் - மடு), லீலா, பரமானந்தம் (ஆனந்தா ஸ்ரோர்ஸ் சில்லாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இம்மனுவேல், ஸ் ரீபன், தார்சிசியஸ், றோஸ், மேரிப்பிள்ளை, சிங்கராயர், பாவிலுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, பரிமளம், செபமாலையம்மா அகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.09.2017) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சென்.ஜேம்ஸ் வீதி, மேரி கில்டாவின் இல்லத்தில் இறுதி வழிபாடு இடம் பெற்று தொடர்ந்து சில்லாலை தூயயாகப்பர் ஆலயத்தில் இறுதித்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தூய யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கெள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

**Doris - 077 184 4823 / Sr.Dorin - 077 579 7335/ Dinesh 077 381 8947**

### காணாமற்...

பால சிறிசேன ஜூலை மாதம் 20ஆம் திகதி, இந்த அலுவலகத்தை தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சுக்குப் பாரப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டிருந்தார். தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கட்டுப்பாட்டிலேயே செயற்படுகின்றது.

தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்து. அலுவலகத்தை நிறுவுவதற்கான வர்த்தமானியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று மதியம் 12.30மணிக்கு கைச்சாத்திட்டுள்ளார். இதன்போது அரச தலைவரின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ, அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி ஆகியோர் பங்கேற்றுள்ளனர். வர்த்தமானி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வெளியாகும். இந்த அலுவலகத்துக்குரிய பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அரச தலைவர் சம்பந்தப்பட்டவர்களுக்கு நேற்றே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

'அரசமைப்புச் சபை காணாமற்போனோர் அலுவலகத்துக்கான ஆணையாளர்களை நியமிக்க வேண்டும். இந்தப் பணியை உடனடியாகச் செய்யுமாறு, அரசமைப்புச் சபையின் தலைவரான சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் அலைபேசியில் தொடர்பு கொண்டு அரச தலைவர் பேசியுள்ளார்' என்று அரசமைப்புச் சபையின் உறுப்பினர் ஒருவர் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார். (வ-5)

### சிறுமியை...

நீதிமன்றம் தீர்ப்பளித்தது. புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் வன்புணர்வு இடம்பெற்றது. சிறுமியின் தாயார் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். சந்தேகநபரைக் கைது செய்த புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் முல்லைத்தீவு நீதிவான் மன்றில் முற்படுத்தியிருந்தனர். வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிவான் மன்றத்தில் இடம்பெற்று வந்தது. 6 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். கடந்த மே மாதம் சட்ட மா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பகிர்வுப்பத்திரம் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன. நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு குற்றவாளி இரண்டு இலட்சம் ரூபாவை இழப்பீடாகச் செலுத்துமாறும் அதைச் செலுத்தத் தவறின் மேலதிகமாக இரண்டு வருடங்கள் கடூழியச் சிறை அனுபவிக்க வேண்டும் எனவும் தண்டனைத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது. தண்டப்பணமாக 10 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் அதைச் செலுத்தத்தவறின் ஒரு மாதம் சாதாரணசிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் தீர்ப்பில் உத்தரவிடப்பட்டது. (வ-4)

### கூட்டமைப்பு...

என்றும் கூட்டமைப்புக் கேட்டுக் கொண்டுள்ளது.

'பன்னாட்டு மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள்குறித்தகுற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புக் கூறலை உறுதி செய்ய நம்பகமான நடவடிக்கைகளை இலங்கை எடுக்காதது. பன்னாட்டுச் சட்ட நடவடிக்கைகளுக்கு இன்னும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது' என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசைன், 36ஆவது கூட்டத் தொடரின் ஆரம்ப உரையில் கூறியி ருந்தார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை, அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனிடம் வினவியபோது அவர் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தை கொழும்பு அரசும் இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றியிருந்தது. அந்தப் பரிந்துரைகளை நிறைவேற்றுதற்கு தமக்கு இரண்டு வருட கால அவகாசத்தையும் கேட்டு வாங்கிக் கொண்டனர். 2019ஆம் ஆண்டுக்குள் அனைத்துப் பரிந்துரைகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அரசுத் தலைமை, விதண்டாவாதக் கதைகளை கதைத்து வருகின்றது. வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறுதான் இலங்கை அரசை நாம் கோருகின்றோம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் விடுத்த இறுதி எச்சரிக்கையை மனதிலிருத்தியாவது நடவடிக்கை எடுக்கவேண்டும்.. இலங்கை அரசு தற்போதுள்ள மந்த போக்கில் தொடர்வது அதன் மாபெரும் தவறு -என்றார். (வ-5)

### ஒற்றையாட்சியின்...

மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பிரபல அரசியல் விமர்சகரான குசால் பெரேராவின் நூல் வெளியீட்டு விழா இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு முதல்வரும் பங்கேற்றிருந்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்கினால் கூட்டாட்சிக் கோரிக்கை கைவிடப்படுமா? என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு முன்னெடுக்கும் திட்டங்களில் எது சரியோ அதை சரியென்றும், எது பிழையோ அது பிழையென்றும் துணிச்சலுடன் சுட்டிக்காட்டி வருகின்றேன். இதில் எவ்விதத் தவறையும் நான் காணவில்லை. எனினும், மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடுவார் என்ற அச்சத்தைப் பரப்பி சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றை ஏற்கமுடியாது. இந்த அரசு எதையும் செய்யவில்லை என்று நான் கூறவில்லை. ஆனாலும், புதிய அரசமைப்பு, வடக்கு கிழக்கில் படையினரின் பிரசன்னத்தைக் குறைத்தல், காணி விடுவிப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்களில் காத்திரமான நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்கவில்லை: அதைச் செய்யவேண்டும் என்றே எடுத்துரைத்து வருகின்றேன்.

மாகாண சபைகளுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறமுடியாத வகையில் ஏற்பாடுகள் அவசியம். அதை ஒற்றையாட்சியின் கீழ் எதிர்பார்க்கமுடியாது. கூட்டாட்சியே தீர்வாக அமையும் - என்றார். (வ-5)

### 500 பி.எச்.ஐ...

யாற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 5 பேருக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட இடமாற்ற உத்தரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதிலிருந்தும் சுமார் 500 பொதுச் சுகாதாரப் பரிசோதகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து இன்றைய தினம் பெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஐவரையும் தொடர்ந்தும் மாநகர சபையிலேயே பணியாற்ற சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் என வலியுறுத்தியே இன்றைய தினம் ஆர்ப்பாட்டம் இடம் பெறுகின்றது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 500 சுகாதார பரிசோதகர்கள் பங்குபற்றும் நோக்கில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர் என்றும் அவர்கள் கூறினர்.

இதேவேளை, சுகாதார அமைச்சின் செயலாளரால் நியமனம் வழங்கப்பட்டு உள்ளூராட்சித் திணைக்களங்களில் பணிக்கமர்த்தப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்களில் ஒரே சபையில் 7 ஆண்டுகள் பணிபுரிந்த வர்களுக்கு 2017 ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்ற உத்தரவு வழங் கப்பட்டிருந்தது. (வ -101)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



பிறப்பு 19 . 09 . 1973

இறப்பு 25 . 08 . 2016

திதி : 13.09.2017

25.08.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### திருமதி சாந்தி இராஜேஸ்வரன்

அவர்களின் முதலாம் வருட நினைவு அஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (13.09.2017) புதன்கிழமை நடைபெறவுள்ளது. இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

7ஆம் ஒழுங்கை,
அளிஞ்சியன் குளம், மல்லாவி.

கணவர்,
பிள்ளைகள்.

## வீட்டுக்குள்...

யாழ்ப்பாணம் செப் 13 சாவகச்சேரி வடக்கு கிராம்புவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த கும்பல் நடத்திய வாள்வெட்டுத் தாக்குதலில் பெண் உள்பட மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்றது. அதே இடத்தை சேர்ந்த பரமேஸ்வரன் சுஜீபன் (வயது 30) என்பவர் தலையில் வாள்வெட்டுக்கு இலக்காகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். பரமேஸ்வரன் சீதா (வயது 27), ஜெயரட்ணம் கிரிசாந் (வயது 30) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 12 பேர்கொண்ட கும்பல் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து அங்குள்ள உடமைகளை அடித்து நொறுக்கியது. அங்கிருந்தவர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டது. இதனால் ஏற்பட்ட அலறல் சதத்தை கேட்டு அயலவர்கள் உடனடியாக அந்த வீட்டை நோக்கி ஓடியுள்ளனர். எனினும் அங்கு வாள்களுடன் நின்ற கும்பல் அங்கு வந்த அயலவர்களையும் வெட்டித் தள்ளியது. இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் அச்ச நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-8-9-ரி1)

## ஐ.நா. ...

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 36ஆவது அமர்வில் வைத்து அவர் நேற்று முன்தினம் இந்தத் தகவலை வெளியிட்டார். பப்லோ டி கெரீப் அடுத்த மாதம் 10ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையில் அவர் இலங்கையில் தங்கியிருப்பார். இந்தக் காலப்பகுதியில் அவர் உயர்மட்ட தரப்புக்களுடன் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார். 2016ஆம் ஆண்டும் பப்லோ டி கெரீப் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (வ-5)



# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விண்ணப்பப் படிவம் இணையத்தளத்தில் மட்டுமே பெற்றுக்கொள்ளலாம்

## 2018 / 2019 கல்வியாண்டுக்கான
## கல்வி முதுமாணி (Coursework)
## பட்ட நிகழ்ச்சித்திட்டதிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

மேற்கண்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப்படிவங்கள் 27.08.2017 இலிருந்து 28.09.2017 வரை ஏற்றுகொள்ளப்படும். இந்நிகழ்ச்சிதிட்டமானது கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய பிராந்திய நிலையங்களில் மட்டும் நடத்தப்படும். குறித்த நிலையங்களுக்கான உத்தேச மாணவர் தொகை கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது:

| நிலையம் | ஆகக்கூடிய மாணவர் தொகை | | |
|---|---|---|---|
| | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| கொழும்பு | 100 | 100 | 50 |
| கண்டி | 50 | - | - |
| யாழ்ப்பாணம் | - | 50 | - |

■ நுழைவுத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள், 15 ஒக்டோபர் 2017 இல் நடாத்தப்படும் தெரிவுப் பரிட்சைக்கு தோற்றுதல் வேண்டும். தெரிவுப் பரிட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகள் நிகழ்ச்சித்திட்டத்தில் அனுமதிக்க முன்னர் நேர்முகப் பரிட்சைக்கும் சமூகமளிக்க வேண்டும்.

■ குறிப்பு : நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் முன்னர் தமது தகைமைகளை நுழைவுத் தகமைகளுடன் சரிபார்த்துக்கொள்ளுவது விண்ணப்பதாரிகளின் பொறுப்பு ஆகும். தெரிவுப் பரிட்சையில் சித்தி பெற்றமையானது நிகழ்ச்சித்திட்டதுக்கான அனுமதியாக கருத்திற் கொள்ளப்படமாட்டது.

### நுழைவுத் தகைமைகள்

1. இலங்கை திறந்த பல்கலைகழக அல்லது வேறு அங்கீகரிப்பட்ட பல்கலைக்கழகத்தின் கல்வியியலில் இளமாணிப் பட்டத்தில் குறைந்தது GPA 3.0 உடனான சித்தியுடன் பின்வரும் பாடங்களில் அல்லது அதற்கு நிகரான பாடங்களில் B+ சித்தியையும் கொண்டிருத்தல் வேண்டும்: கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும். **அல்லது**
2. அங்கீகரிப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்கல்வி டிப்ளோமா பாட நெறியில் குறைந்தது GPA 3.0 உடனான சித்தியுடன் பின்வரும் பாடங்களில் அல்லது அதற்கு நிகரான பாடங்களில் B+ சித்தியையும் கொண்டிருத்தல் வேண்டும்: கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும். **அல்லது**
3. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமா பரீட்சையில்

   (அ) குறைந்தது 2½ திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகளில் A அல்லது B தரங்கள் உடனான சித்தியுடன் கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களில் B தர சித்தியினையும் (2001 இற்கு முன்னான பழைய பாடத்திட்டம்) பெற்றிருத்தல் **அல்லது**

   குறைந்தது 1½ திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகளில் A அல்லது B தரங்கள் உடனான சித்தியுடன் கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களில் B தர சித்தியினையும் (புதிய பாடத்திட்டம் 2001 முதல் 2010 வரை) பெற்றிருத்தல் **அல்லது**

   (ஆ) கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களில் B+ தர சித்தியுடன், குறைந்தது 27 திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகளில் A+ அல்லது A அல்லது A- அல்லது B+ தர சித்தியினைப் (புதிய பாடத்திட்டம் 2010 ன் பின்னர்) பெற்றிருத்தல் **அல்லது**
4. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் கல்விமாணிப்பட்ட (இயற்கை விஞ்ஞானம்) பரீட்சையில்:

   (அ) ஆகக் குறைந்தது 5, 6 மட்டங்களில் 2 திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறியில் A, அல்லது B சித்தி உள்ளடங்கியதாக 4 திறமை மட்டங்களுடன் கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களில் B சித்தியினையும் பெற்றிருத்தல் (2011 இன் முன்னர்) **அல்லது**

   (ஆ) ஆகக் குறைந்தது 5, 6 மட்டங்களில் 36 திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகள் உள்ளடங்கியதாக 72 திறமை மட்டங்களில் A+, அல்லது A- அல்லது A அல்லது B+ பெற்றிருப்பதுடன், கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகள், மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களில் B+ சித்தியினையும் பெற்றிருத்தல் (2011 இன் பின்னர்) **அல்லது**

   (இ) மட்டம் 5,ல் 2 திறமை மட்டங்கள் அளவிற்கு விதிவிலக்குப் பெற்ற மட்டம் 6,ல் குறைந்தது 1½ திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகளில் A அல்லது B தரங்களைப் பெற்றிருத்தல் (2011 இன் முன்னர்) **அல்லது**

   (ஈ) மட்டம் 5,ல் 36 திறமை மட்டங்கள் அளவிற்கு விதிவிலக்குப் பெற்று மட்டம் 6,ல் குறைந்தது 27 திறமை மட்டங்களைக் கொண்ட பாடநெறிகளில் A+ ,அல்லது A- அல்லது A அல்லது B+ தரங்களைப் பெற்றிருத்தல் (2011 ,ன் பின்னர்) **அல்லது**
5. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விசேட தேவைகள் கல்வியில் பட்டமேற்படிப்பு டிப்ளோமாவில் குறைந்தது திறமைச் சித்தி பெற்றிருத்தல். **அல்லது**
6. அல்லது பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சமனான தகைமையைப் பெற்றிருத்தல **அல்லது**

### விண்ணப்ப விதிமுறைகள்.

விண்ணப்பப் படிவம் இணையத்தளத்தில் மட்டும்

https://payment.ou.ac.lk என்ற இணையத்தளத்திற்குப் பிரவேசித்து வருவழி (online) முறையின் மூலம் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் 27.08.2017 **தொடக்கம் 28.09.2017** வரையான காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவக் கட்டணம்:
தெரிவுப் பரீட்சைக் கட்டணம் உள்ளடங்களாக ரூபா 1050/=

**www.ou.ac.lk** என்ற இணையத்தள்த்தினுள் பிரவேசித்து இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விபரங்கள் அடங்கிய மாணவர் கைநூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

பற்று/கடன் (debit /credit / eZCash ) அட்டை மூலம் பணம் செலுத்த முடியாத விண்ணப்பதாரிகள் அருகிலுள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுடன் தொடர்புகொண்டு பணத்தைச் செலுத்தலாம். இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பித்தல் தொடர்பான தகவல்களை அருகிலுள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் கீழ்வருமாறு பெற்றுக்கொள்ளலாம்.

பின்வரும் பிராந்திய நிலையங்களுள் ஏதாவதொன்றுக்கு வருவழி விண்ணப்ப விதிமுறைகளுக்கான உதவியைப் பெற விஜயம் செய்யவும். கொழும்பு (நாவல), அநுராதபுரம், மட்டகளப்பு, யாழ்பாணம், கண்டி (பொல்கொல்லை), மாத்தறை (நுபெ), பதுளை, குருணாகலை, அம்பலாங்கொடை, அம்பாரை, பண்டாரவளை, கம்பஹா, காலி, அம்பாந்தோட்டை, ஹற்றன், திருகோணமலை, கிளிநொச்சி, முலலைத்தீவு களுத்துறை, கேகாலை, மொனராகலை, பொலன்னறுவை, புத்தளம், இரத்னபுரி, வவுனியா.

1. நாவல, நாரஹேன்பிட்ட வீதியிலுள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பொதுத்தொடர்பு அலுவலகத்தில் அரசாங்க விடுமுறைத் தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப 3.30 மணி வரை:
2. ஏனைய பிராந்திய/கற்கை நிலையங்களில் (அரசாங்க விடுமுறைத் தினங்கள் தவிர்ந்த) செவ்வாய்க்கிழமை முதல் சனிக்கிழமை வரையிலான நாட்களில் மு.ப 9.30 மணி முதல் பி.ப 3.30 மணி வரை:

பொது தகவல் அலுவலகம் 0112881327 / 0112881256
தலைவர் / இடைநிலை, மூன்றாம் நிலை கல்வித்துறை : 0112881425
ஒருங்கிணைப்பாளர் / கல்வி முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம் கலாநிதி எப்.எம்.நவாஸ்தீன்
/ செல்வி கௌசல்ய பெரேரா 0112881279

**தெரிவுப்பரீட்சை**

சகல பிராந்திய நிலையங்களிலும் தெரிவுப் பரீட்சை 15.10.2017 இல் நடாத்தப்படும்.

கற்றல் நடவடிக்கைகள் கொழும்பு பிராந்திய நிலையத்தில் மூன்று மொழி மூலங்களுக்கும் கண்டி பிராந்திய நிலையத்தில் சிங்கள மொழி மூலத்திற்கும் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் தமிழ் மொழி மூலமும் நடாத்தப்படும்.

பதிவாளர் – இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட

# நான்கு பேர்...

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெற்று வருகிறது.

வழக்குத் தொடுநர் தரப்பு மற்றும் 9 எதிரிகளின் சாட்சியப் பதிவுகள் கடந்த 29ஆம் திகதியுடன் நிறைவடைந்தன. இரு தரப்பு தொகுப்புரைகள் நேற்றும் இன்றும் முன்வைக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பாயம் கட்டளையிட்டிருந்தது. அதனடிப்படையில் நேற்றுக் காலை 9 மணியளவில் தீர்ப்பாயம் கூடியது.

எதிரிகள் பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், மகாலிங்கம் சசிதரன், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்த், பழனி ரூபசிங்கம் குகநாதன், ஜெயதரன் கோகிலன் மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய ஒன்பது பேரும் தீர்ப்பாயத்திடம் முற்படுத்தப்பட்டனர். விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. முதலில் வழக்கேட்டில் சில திருத்தங்கள் செய்வதற்கு வழக்குத் தொடுநர் தரப்பில் பிரதி மன்றாடியார் அதிபதி குமார் இரட்ணம் விண்ணப்பம் செய்தார். அதனை அடுத்து திருத்தங்கள் செய்வதற்கு தீர்ப்பாயம் அனுமதித்தது. தொடர்ந்து எதிரிகள் தரப்புச் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரனும் சில திருத்தங்கள் செய்வதற்கு விண்ணப்பம் செய்தார். அதற்கும் தீர்ப்பாயம் அனுமதியளித்தது.

வழக்கு தொடுநர் தரப்பில் பிரதி மன்றாடியார் அதிபதி குமார் இரட்ணம் தொகுப்புரையை ஆரம்பித்தார்.

2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த புங்குடுதீவு பிரதேசத்தை சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா எனும் மாணவி கடத்தப்பட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அது தொடர்பான வழக்கு விசாரணைகளில் தற்போது எதிரிக் கூண்டில் நிற்கும் ஒன்பது பேரையும் சட்டமா அதிபர், எதிரிகளாக கண்டு அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, குற்ற பகிர்வு பத்திரத்தை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் பதிவாளருக்கு அனுப்பி வைத்தார்.

சிறப்புத் தீர்ப்பாயத்தால் எதிரிகளுக்கு குற்றப் பகிர்வு பத்திரம் தனித்தனியாக வாசித்துக் காட்டப்பட்டது. அதன் போது, கடத்தத் திட்டம் தீட்டியமை, கடத்தியமை, வன்புணர்வுக்கு உட்படுத்தியமை, படுகொலை செய்தமை, உடந்தை அளித்தமை உள்ளிட்ட 41 குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டன. அத்தனை குற்றச்சாட்டுக்களையும் எதிரிகள் தனித்தனியே மறுத்து தாம் நிரபராதிகள் என தீர்ப்பாயத்திடம் உரைத்தனர்.

தீர்ப்பாயம் முன்னிலையில் நடைபெற்ற சாட்சியப் பதிவுகளின்போது, படுகொலை செய்யப்பட்ட மாணவியின் தாயார் சாட்சியம் அளிக்கையில், "எனது மகள் 13ஆம் திகதி பாடசாலையில் கூட்டு முறை என்பதனால் காலை 7.15 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டார். அவர் மாலைவரை வீடு திரும்பவில்லை. அதனால் அவரைத் தேடி அலைந்த பின்னர், குறிகாட்டுவான் பொலிஸ் காவலரணுக்கு முறைப்பாடு செய்யச் சென்றோம். அங்கு முறைப்பாட்டை ஏற்க முடியாது, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்யுமாறு கூறப்பட்டது. அதனால் நாம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்குஇரவுசென்றுசாட்சியம்வழங்கினோம். மறுநாள் 14ஆம் திகதி காலை வேளையில் மகளைத் தேடிச் சென்றபோது, பாழடைந்த வீடொன்றின் பின் பகுதியில் உள்ள பற்றைக்குள் மகளின் சடலம் காணப்பட்டது. அதனை முதலில் மகன் கண்டார். மகன் சடலத்தைக் கண்டு கதறி அழுத சத்தத்தைக் கேட்டு நான் அந்த இடத்துக்குச் சென்று பார்த்தபோது மகள் சடலமாகக் கிடந்தார்" எனச் சாட்சியம் அளித்திருந்தார்.

அதேபோன்று இந்தக் குற்றச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனும் சந்தேகத்தில் 11ஆவது சந்தேகநபராக கைது செய்யப்பட்ட உதயசூரியன் சுரேஷ்கரன் என்பவருக்கு சட்ட மா அதிபர் நிபந்தனைகளுடன் கூடிய பொது மன்னிப்பு வழங்குவதாக உறுதி அளித்ததை அடுத்து அவர் அரச தரப்பு சாட்சியமாக மாறி இந்தத் தீர்ப்பாயத்தில் சாட்சியமளித்தார்.

"எதிரிக் கூண்டில் 6ஆவது எதிரியாக உள்ள பெரியாம்பி என அழைக்கப்படும் சிவதேவன் துஷாந்த், படுகொலை செய்யப்பட்ட மாணவியை ஒரு தலையாகக் காதலித்தார். அந்தக் காலப் பகுதியில் துஷாந்தின் மோட்டார் சைக்கிளில் நான் பின்னால் இருந்து செல்வேன். மாணவி பாடசாலை செல்லும் நேரம், வீடு திரும்பும் நேரங்களில் மாணவியின் பின்னால் செல்வோம். ஒரு நாள் மாணவி தனது சப்பாத்தைக் கழட்டி துஷாந்தை நோக்கி வீசினார்.

அதன் பின்னர் மாப்பிள்ளை என அழைக்கப்படும் நடராஜா புவனேஸ்வரன் என்பவரின் வீட்டில் நானும் பெரியாம்பி எனும் துஷாந்தும் கள்ளுக் குடிக்கச் சென்றோம். அங்கு 5ஆம் எதிரி தில்லைநாதன் சந்திரகாசன் 2ஆம் எதிரி பூபாலசிங்கம் ஜெயக்குமார் மற்றும் 3ஆம் எதிரி பூபாலசிங்கம் தவக்குமார் ஆகியோரிடம் வித்தியா துசாந்துக்கு சப்பாத்தால் எறிந்த சம்பவத்தை நான் கூறினேன். அப்போது, ஜெயக்குமார் மற்றும் தவக்குமார் ஆகியோர் 25ஆயிரம் ரூபா பணம் தந்தால் வித்தியாவைத் தூக்கித் தருவதாகக் கூறினார்கள். அதன் பிரகாரம் அவர்களுக்கு 23ஆயிரம் ரூபா பணம் கொடுத்தோம்.

வித்தியாவைக் கடத்துவதற்காக 11ஆம் திகதி காத்திருந்தவேளை அன்றைய தினம் வித்தியா வேறு ஒரு மாணவியுடன் வந்தார். அதனால் அன்றைய தினம் திட்டத்தைக் கைவிட்டோம். மறுநாள் 12ஆம் திகதி காத்திருந்தபோது வித்தியா பாடசாலைக்கு வரவில்லை. மறுநாள் 13ஆம் திகதி நானும் பெரியாம்பி எனும் துஷாந்த், 5ஆம் எதிரி தில்லைநாதன் சந்திரகாசன் 2ஆம் எதிரி பூபாலசிங்கம் ஜெயக்குமார், 3ஆம் எதிரி பூபாலசிங்கம் தவக்குமார் மற்றும் மாப்பிள்ளை எனும் நடராஜா புவனேஸ்வரன் ஆகியோர் மாணவியின் வருகைக்காக சின்ன ஆலடி எனும் பகுதியில் காத்திருந்தோம்.

அந்தவேளை மாணவி அந்த வீதி வழியாக தனியாக வந்து கொண்டிருந்தார். துஷாந்த், மாணவியின் துவிச்சக்கர வண்டியை மறித்து தன்னை காதலிக்குமாறு வற்புறுத்தினான். அதற்கு மாணவி சம்மதிக்காததால், அவரின் கன்னத்தில் கைகளால் துசாந்த் அடித்தான். அதன் போது மாணவி போட்டு இருந்த மூக்கு கண்ணாடி நிலத்தில் வீழ்ந்தது. அதன் பின்னர், துஷாந்த், 5ஆம் எதிரி தில்லைநாதன் சந்திரகாசன் 2ஆம் எதிரி பூபாலசிங்கம் ஜெயக்குமார் மற்றும் 3ஆம் எதிரி பூபாலசிங்கம் தவக்குமார் ஆகியோர் மாணவியை பலவந்தமாக அருகில் இருந்த பாழடைந்த வீட்டுக்குள் இழுத்துச் சென்று மாறி, மாறி வன்புணர்ந்தார்கள். அந்தவேளை ஜெயக்குமார் மாணவியின் உள்ளாடையை எடுத்து வாய்க்குள் திணித்துத் தடி ஒன்றால் வாய்க்குள் தள்ளினார்.

அதன் பின்னர் மாணவியை அங்கிருந்து தூக்கிச் சென்று அருகில் இருந்த பற்றைக்குள் உள்ள மரம் ஒன்றின் கீழ் வைத்து கால் ஒன்றை இழுத்து மரத்தில் கட்டினார்கள். அதனோடு நான் அந்த இடத்தில் இருந்து சென்றுவிட்டேன்.

நான் அவர்களுடன் சென்றது காதலுக்கு உதவி பண்ணும் நோக்குடனேயே. இவர்கள் இவ்வாறு செய்வார்கள் எனத் தெரிந்து இருந்தால், நான் அன்றைய தினம் அவர்களுடன் சென்று இருக்கமாட்டேன்" என தனது சாட்சியத்தில் சுரேஷ்கரன் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட மற்றுமொரு சாட்சியான மாப்பிள்ளை என அழைக்கப்படும் நடராஜா புவனேஸ்வரன், "நான் இவர்களுடன் சென்றது துஷாந்தின் காதலுக்கு உதவும் நோக்குடன்தான். ஆனால் இவர்கள் இவ்வாறு செய்வார்கள் என நான் நினைக்கவில்லை.

இவர்கள் மாணவியை வன்புணர்வு செய்ததை மாறி மாறி பெரிய தொடுதிரை அலைபேசியில் (டச் போன்) ஒளிப்படங்கள் மற்றும் காணொலி எடுத்தனர். அதனை தனது மச்சானுக்கு அனுப்ப வேண்டும் என துஷாந்த் சந்திரகாசனுக்கு கூறியதை தான் கேட்டார்" என சாட்சியமளித்தார்.

இந்தக் குற்றச் சம்பவம் தொடர்பில் வெளியில் யாருக்காவது கூறினால் என்னைப் படுகொலை செய்வோம் என கூறியதனால்தான், நான் யாருக்கும் முதலில் சொல்லவில்லை எனவும் அவர் சாட்சியமளித்தார்.

அதேபோன்று வேலணை பிரதேச சபை பொறுப்பதிகாரி சாட்சியமளிக்கையில், சம்பவ தினமான 13ஆம் திகதி தமது பிரதேச சபையால் சாரதியாக கடமையாற்றும் 6ஆம் எதிரியான சிவதேவன் துஷாந்த் காலை 9.15 மணியளவில்தான் வேலைக்கு வந்தார்" என சாட்சியமளித்துள்ளார்.

மாணவியின் தாயின் சாட்சியம் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியத்தின் பிரகாரம் மாணவி பாடசாலை செல்லும் நேரத்தில் அதாவது காலை 7.30 மணிக்கும் 8.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் கடத்தப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அவ்வாறு எனில் இந்த வழக்கின் 6ஆவது எதிரி இந்தக் குற்றத்தைச் செய்துவிட்டு காலை 9.15 மணிக்கு கடமைக்கு சென்றிருக்கலாம். அதேபோன்று 5ஆம் எதிரி சம்பவ தினத்தன்று காலை 8 மணியளவில் சம்பவ இடத்திற்கு அருகில் சாரத்தை மடித்துக் கட்டியவாறு வேகமாக நடந்து சென்றதை பெண் ஒருவர் கண்ணுற்று உள்ளார். அவரும் இந்தத் தீர்ப்பாயத்தில் சாட்சியமளித்தார்.

அதேபோல இரண்டாம் எதிரியான ஜெயக்குமாரை பாடசாலை மாணவன் ஒருவன் பாடசாலை செல்லும் நேரம் காலை 7.45 மணியளவில் சம்பவ இடத்துக்கு அருகில் கண்டுள்ளான். அவனும் இந்தத் தீர்ப்பாயத்தில் தோன்றி சாட்சியமளித்தான்.

அதேவேளை 2ஆம் எதிரியின் மனைவியின் அண்ணன் 2ஆம் மற்றும் 3ஆம் எதிரிகளை சம்பவ இடத்துக்கு அருகில் சம்பவ தினத்தன்று கண்டுள்ளார். அதேபோல் சம்பவ தினத்துக்கு முதல் நாள் 12ஆம் திகதி ஆலடிச் சந்தியில் சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் உள்ளிட்டவர்கள் வாகனம் ஒன்றில் இருந்ததை கண்ணுற்றுள்ளார். அவரும் இந்தத் தீர்ப்பாயத்தில் தோன்றி சாட்சியமளித்துள்ளார்.

முதலாம் எதிரியான பூபாலசிங்கம் இந்திரகுமாருக்கு எதிராக வழக்குத் தொடுநர் தரப்பால் சாட்சியங்கள் ஆதாரங்களை முன்வைக்க முடியவில்லை என்பதனை ஏற்றுக்கொள்கின்றோம். அதேவேளை சம்பவ தினத்தன்று (13ஆம் திகதி ) தனது தம்பியான மூன்றாம் எதிரி பூபாலசிங்கம் தவக்குமார் தன்னை பேருந்து தரிப்பிடத்துக்கு ஏற்றிச் சென்றது தொடர்பில் அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிடவில்லை.

இரண்டாம் எதிரியான பூபாலசிங்கம் ஜெயக்குமார், தனது மச்சான் தன்னை சம்பவ தினத்தன்று (13ஆம் திகதி) சம்பவ இடத்துக்கு அருகே கண்டதாகக் கூறியது, குற்றப்புலனாய்வு பிரிவினர் எனது மச்சானுடையதும் அவரது மனைவியினதும் (தனது சகோதரியின்) வாய்க்குள் கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டியதனால்தான் எனக் கூறினார். அவ்வாறு தாம் மிரட்டப்பட்டதை மச்சானும் மனைவியும் வவுனியா சிறைச்சாலையில் தன்னைக் கண்டு கூறியதாகவும் தீர்ப்பாயத்திடம் தனது சாட்சியத்தின்போது தெரிவித்தார். இவ்வாறு தனது சகோதரியும் அவரது மச்சானும் மிரட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் வேறு எங்காவது வாக்குமூலத்தில் கூறினீரா? எனக் கேட்ட போது, இல்லை என்றார். இந்த தீர்ப்பாயத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சாட்சியமளிக்கையில் இந்த சம்பவம் தொடர்பில் உமது சட்டத்தரணி குறுக்கு விசாரணையில் கேட்டாரா? எனக் கேட்ட போது, அதற்கும் இல்லை என பதிலளித்ததுடன், சட்டத்தரணியிடம்தான் கூறியதாகவும், சட்டத்தரணி கேட்கவில்லை எனவும் கூறினார். அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மூன்றாம் எதிரியான பூபாலசிங்கம் தவக்குமார் தனக்கு வித்தியாவைத் தெரியாது எனச் சாட்சியமளித்தார். பின்னர் தான் தனது அண்ணாவான இந்திரகுமாரை சம்பவ தினத்தன்று பேருந்துக்கு ஏற்றிவிடச் சென்ற போது வித்தியாவின் அண்ணாவைக் கண்டதாகச் சாட்சியமளித்தார். அவருக்கு வித்தியாவைத் தெரியாது. ஆனால் வித்தியாவின் அண்ணாவைத் தெரியும் எனக் கூறினார்.

நாலாம் எதிரியான மகாலிங்கம் சசிதரன் இந்த குற்றத்தை கடற்படைதான் செய்துள்ளது என இந்தத் தீர்ப்பாயத்திடம் சாட்சியமளித்தார். சாரதாம்பாள் மற்றும் தர்சினி எனும் பெண்களை தீவகத்தில் கடற்படைதான் படுகொலை செய்தது. அதேபோல இந்தக் கொலையையும் கடற்படைதான் செய்தது எனத் தெரிவித்தார். அவர் இதற்கு முதல் வாக்குமூலத்திலேயோ நீதிமன்றிலேயோ இந்தத் தகவலை தெரிவிக்க வில்லை. முதல் முதலாக தீர்ப்பாயத்திடம் எதிரிகள் தரப்புச் சாட்சியமளிக்கும் போதே அவர் அதனைத் தெரிவித்தார்.

ஐந்தாம் எதிரியான தில்லைநாதன் சந்திரகாசன் தான் சம்பவ தினத்தன்று கடற்றொழிலுக்குச் சென்றுவிட்டதாகவும், தன்னைச் சம்பவ தினத்தன்று (13ஆம் திகதி ) காலை கண்டதாக சாட்சியமளித்த சாந்தரூபிணி என்பவருக்கும் தனக்கும் முரண்பாடு இருந்ததலேயே அவர் தனக்கு எதிராகச் சாட்சியமளித்தார் எனத் தெரிவித்தார். அவரும் அதற்கு முதல் எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தத் தகவலைத் தெரிவிக்கவில்லை. எதிரி தரப்புச் சாட்சிப் பதிவின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆறாம் எதிரியான சிவதேவன் துஷாந்த் தனக்கு வித்தியாவை தெரியாது. ஆனால் அவரின் அண்ணாவை நன்கு தெரியும் என தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஏழாம் எதிரியான பழனிரூபசிங்கம் குகநாதனுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் அவர் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியவில்லை.

எட்டாம் எதிரியான ஜெயதரன் கோகிலன் தன்னை பொலிஸார் சித்திரவதை புரிந்து காணொலி வாக்குமூலம் எடுத்ததாக தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். ஆனால் அவர் அதற்கு முதல் எங்கேயும் அது தொடர்பில் குறிப்பிடவில்லை. சம்பவதினத்துக்கு முதல் நாள் 12ஆம் திகதி புங்குடுதீவில் வாகனம் ஒன்றில் அமர்ந்திருந்து வித்தியாவை பார்த்தார் என இலங்கேஸ்வரன் என்பவர் சாட்சியமளித்தார். ஆனால் தான் 12ஆம் திகதி கொழும்பில் நின்றதாகவும், அன்றைய தினம் நெற்கபே ஒன்றுக்கு சென்று மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியதாகத் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். ஆனால் இதற்கு முதல் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் 12ஆம் திகதி தான் கொழும்பில் நின்ற விடயத்தைக் கூறவில்லை.

ஒன்பதாம் எதிரியான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் 17ஆம் திகதி தன்னை பொதுமக்களின் தாக்குதலில் இருந்து தன்னை விஜயகலா காப்பற்றினார் எனவும் பின்னர் தான் வீட்டுக்குச் சென்றதாகவும் சாட்சியமளித்தார். அது பொய். ஏனெனில் சட்டத்தரணி வீ.ரி.தமிழ் மாறன் தனது சாட்சியத்தில் சுவிஸ்குமார் என்பவரின் வீட்டுக்குச் சென்ற போது, அவர் இல்லை எனவும் அவருடைய மனைவி மகாலக்சுமிதான் நின்றதாகவும் சாட்சியமளித்தார். அதேவேளை சிறைச்சாலையில் தான் இப்ரான் என்பவருடன் கதைத்த விடயத்தை சுவிஸ்குமார் ஒப்புக்கொண்டுள்ளார்.

சுவிஸ் நாட்டில் ஹோட்டல் ஒன்றில் சமையலாளராக வேலை செய்வதாகவும் மாதாந்தம் இலங்கைப் பெறுமதியில் பத்து இலட்சம் ரூபா வரை சம்பாதிப்பதாகவும், அங்கு மாதாந்தம் 5 தொடக்கம் 6 இலட்சமே செலவு எனவும் சாட்சியமளித்தார். அத்துடன் வருடத்துக்கு ஒரு தடவை இலங்கை வந்து போவதாகவும், அதன் போது 20 இலட்சம் ரூபாவரை செலவு செய்வதாகவும் சாட்சியமளித்தார்.

அவ்வாறான ஒருவருக்கு 2 கோடி ரூபா என்பது பெரிய தொகையில்லை. எனவே சுவிஸ் குமார் இந்த வழக்கில் இருந்து தப்பிச் செல்ல இப்ரான் ஊடாக குற்றபுலனாய்வுப் பிரிவின் முதன்மை விசாரணை அதிகாரியான பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வாவுக்கு 2 கோடி ரூபா கையூட்டுக் கொடுக்க முயற்சித்தார்.

இந்த வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் எதிரிகளாகக் கண்ட ஒன்பது பேரில் முதலாம் எதிரியான பூபாலசிங்கம் இந்திரகுமார் மற்றும் ஏழாம் எதிரியான பழனி ரூபசிங்கம் குகநாதன் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபிக்க முடியவில்லை. அதற்கான போதிய சாட்சி ஆதாரங்கள் இல்லை.

ஏனைய 7 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் வழக்கு தொடுநர் தரப்பு சாட்சியங்கள் ஆதாரங்களின் அடிப்படையில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இரண்டாம் எதிரியான, பூபாலசிங்கம் ஜெயக்குமார், மூன்றாம் எதிரியான பூபாலசிங்கம் தவக்குமார், நர்ன்காம் எதிரியான மகாலிங்கம் சசிதரன், ஐந்தாம் எதிரியான தில்லைநாதன் சந்திரகாசன், ஆறாம் எதிரியான சிவதேவன் துஷாந்த், எட்டாம் எதிரியான ஜெயதரன் கோகிலன் மற்றும் ஒன்பதாம் எதிரியான மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோருக்கு எதிராக சுமத்தப்பட்ட அனைத்து குற்றசாட்டுக்களும் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி வழக்கு தொடுநர் தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது என தனது தொகுப்புரையில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமார் இரட்ணம் தெரிவித்தார். பிரதி மன்றாடியார் அதிபதி 5 மணி நேரம் தனது தொகுப்புரையை வழங்கினார்.

எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகளின் தொகுப்புரைக்காக தீர்ப்பாயத்தால் இன்று புதன்கிழமை திகதியிடப்பட்டது. அதனை அடுத்து ஒன்பது எதிரிகளையும் இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு தீர்ப்பாயம் உத்தரவிட்டது. (வ-37)



# மணிரத்னத்தின் அடுத்த படத்தில் சிம்பு

மணிரத்னத்தின் அடுத்த படத்தில் முதன்மைக் கதாபாத்திரத்தில் சிம்பு நடிக்கவுள்ளார்.

மணிரத்னத்தின் இயக்கத்தில் கார்த்தி நடித்த 'காற்று வெளியிடை' படம் வெளியாகி பெரும் தோல்வியடைந்தது. இதனையடுத்து மணிரத்னத்தின் அடுத்த பட அறிவிப்பு வெளிவராமல் இருந்துவந்தது.

இந்த நிலையில், மணிரத்னத்தின் அடுத்த படத்தில் நடிப்பவர்கள் பெயர்கள் தொடர்ச்சியாக வெளிவந்த வண்ணம் உள்ளன. இதன்படி அடுத்த படத்தின் முக்கிய கதாபாத்திரங்களில் விஜய் சேதுபதி, பகத்பாசில், ஜோதிகா, ஐஸ்வர்யா ராஜேஷ் ஆகியோர் கொண்ட பெரிய நட்சத்திரப் பட்டாளம் நடிக்க இருப்பதாக தகவல்கள் வந்திருந்தன.

இந்தநிலையில், சிம்புவும் இந்தப் படத்தில் இணைந்துள்ளார். படத்தின் முதன்மை வேடத்தில் சிம்பு நடிக்கவுள்ளார் என்ற தகவல் வந்துள்ளது. இந்த அறிவிப்பு சிம்புவின் ரசிகர்களுக்கு பெரும் உற்சாகத்தை அளித்துள்ளது.

மணிரத்னம், சிம்பு, விஜய்சேதுபதி, பகத்பாசில், ஜோதிகா கூட்டணி ரசிகர்களிடையை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## யாருக்கு ஊனம்



பாஸ்! ஜெயலலிதா அம்மாவோட வாழ்க்கையை படமா எடுக்கலாம் எண்டு இருக்கேன். படத்தோட டைட்டில்?



கடைசியில் கொஞ்சம் பக்கத்தைக் காணோம்...

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனம் உற்சாகமாகக் காணப்படும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடும். எதிர்பாராத பொருள்வரவுக்கு இடம் உண்டு.

**இடபம்:** இன்றைய பொழுது உங்களுக்கு உற்சாகமாக அமையும். நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். உறவினர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும்.

**மிதுனம்:** முற்பகல் வரை காரியங்களில் அனுகூலம் உண்டாகும். இன்று நீங்கள் புதிய முடிவுகள் எதுவும் எடுக்காமல் வழக்கமான வேலைகளில் மட்டுமே கூடுதல் கவனம் வேண்டும்.

**கடகம்:** உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. உறவினர் நண்பர்கள் வருகையால் வீட்டில் குதூகலம் பிறக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**சிங்கம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பணவரவும், அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். புதிய நண்பர்கள் அறிமுகம் ஆவார்கள்.

**கன்னி:** இன்றைய பொழுது உங்களுக்கு உற்சாகமாக அமையும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். நினைத்த காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**துலாம்:** வெளியூர்களில் இருந்து எதிர்பார்த்த தகவல்கள் வரும். அவசியத் தேவைகளுக்கு கடன் வாங்க நேரும். வீண் அலைச்சல் உண்டாகும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தொலைதூரத்தில் இருந்து வரும் செய்தி உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். புதிய நண்பர்கள் அறிமுகம் ஆவார்கள்.

**தனுசு:** மனம் உற்சாகமாகக் காணப்படும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடும். எதிர்பாராத பொருள்வரவுக்கு இடம் உண்டு.

**மகரம்:** நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி வேலைச் சுமை இருந்துகொண்டே இருக்கும். ஆனாலும், முயற்சிகளில் வெற்றியும் அதனால் பண இலாபமும் கிடைக்கும்.

**கும்பம்:** மனம் உற்சாகமாகக் காணப்படும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடும். எதிர்பாராத பொருள்வரவுக்கு இடம் உண்டு.

**மீனம்:** மனம் உற்சாகமாகக் காணப்படும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடும். உறவினர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள்.

நீ ஒதுக்கப்பட்ட இடங்களில்
நிமிர்ந்து நில்...
நீ புகழப்படும் இடங்களில்
அடக்கமாய் நில்...
நீ விமர்சிக்கப்படும் இடங்களில்
கோபமாக இரு...
நீ நேசிக்கப்படும் இடங்களில்
அன்புடன் இரு
நீ வெற்றியடையும் தருவாயில்
வேகமாகு
நீ வெற்றியடைந்த பிறகோ
அதி வேகமாகு....

## 'செல்பி'க்குப் போஸ்...



நித்தா @nithattweets · Aug 27

ஒளி இல்லாத இருட்டில்
பாலும் காக்கையும் ஒன்றுதான்.
வெளிச்சம் கண்ணுக்கு இல்லை.
எண்ணத்துக்குத்தான் தேவை.

சார்லி சாப்ளின், ஒருமுறை பலரும் நிறைந்த சபையில் ஒரு ஜோக் சொன்னார். சபையே சிரிப்பால் அதிர்ந்தது.
கொஞ்ச நேரம் கழித்து அதே ஜோக்கை மறுபடியும் கூறினார். பாதிப்பேர் மட்டுமே சிரித்தனர்.
அதேபோல் சிறிதுநேரம் கழித்து அதே ஜோக்கை மறுபடியும் கூற அங்கொன்றும் இங்கொன்றும் மட்டுமே சிரித்தனர்.
நான்காம்முறை கூற சபையில் நிசப்தம் நிலவியது.
அப்போது சார்லி சாப்ளின் கேட்டாராம்
"ஒரே ஜோக்குக்கு மறுபடியும் மறுபடியும் சிரிக்காத நாம் ஏன் ஒரே கவலையை நினைத்து மறுபடி மறுபடி அழுகிறோம்" என்று....



## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | | 8 | | |
| | | 5 | | | 4 | | 9 | |
| | 1 | | | | 6 | | | 5 |
| | 4 | | | | | 1 | 8 | |
| 2 | 5 | | 7 | | 1 | | 3 | |
| 1 | | 9 | | | | 5 | 2 | |
| 8 | | | 2 | | | | 5 | |
| | 2 | | 9 | | | 7 | | |
| | | 1 | | | | 2 | | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 4 | 8 | 6 | 7 | 2 | 1 | 5 |
| 7 | 5 | 6 | 1 | 4 | 2 | 3 | 8 | 9 |
| 8 | 2 | 1 | 9 | 5 | 3 | 6 | 7 | 4 |
| 4 | 1 | 3 | 5 | 8 | 6 | 7 | 9 | 2 |
| 6 | 8 | 2 | 7 | 9 | 4 | 1 | 5 | 3 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 1 | 8 | 4 | 6 |
| 1 | 7 | 5 | 2 | 3 | 9 | 4 | 6 | 8 |
| 3 | 6 | 9 | 4 | 1 | 8 | 5 | 2 | 7 |
| 2 | 4 | 8 | 6 | 7 | 5 | 9 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# தேசியமட்ட குத்துச் சண்டையில் வடக்குக்கு எட்டுப் பதக்கங்கள்

யாழ்ப்பாணம், செப். 13

இலங்கை பாடசாலைகள் குத்துச் சண்டைச் சங்கம் நடத்திய தேசியமட்டத் தொடரில் வடக்கு மாகாணத்துக்கு 5 தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம், 2 வெண்கலப் பதக்கம் என்று மொத்தமாக எட்டுப் பதக்கங்கள் கிடைத்துள்ளன.

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக் கிழமை வரை இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியைச் சேர்ந்த சாம்சன் 37-40 கிலோ எடைப்பிரிவில் தங்கப்பதக்கத்தையும், தனுசன் 50-56 கிலோ எடைப்பிரிவில் (17-18 வயதுப் பிரிவு) தங்கப் பதக்கத்தையும், கிரிதரன் 60-64 கிலோ எடைப்பிரிவில் (17-18 வயதுப்பிரிவு) தங்கப் பதக்கத்தையும், ஜெனனன் 56-60 கிலோ எடைப்பட்ட பிரிவில் (17-18 வயதுப்பிரிவு) தங்கப் பதக்கத்தையும் வென்றனர்.

முத்தையன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த தமிழரசன் 37-40 கிலோ எடைப்பிரிவில் (15-16 வயதுப்பிரிவு) தங்கப் பதக்கத்தையும், முத்தையன்கட்டு வலதுகரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த றூபன் 46-50 கிலோ எடைப்பிரிவில் (15-16 வயதுப்பிரிவு) வெள்ளிப் பதக்கத்தையும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த மதிவாணன் 52-56 கிலோ எடைப்பிரிவில் (19 வயதுப் பிரிவு) வெண்கலப் பதக்கத்தையும், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியா லயத்தைச் சேர்ந்த பிரதீபன் 39-40 கிலோ எடைப் பிரிவில் (13-14 வய துப்பிரிவு) வெண்கலப் பதக் கத்தையும் கைப்பற்றினர். (ம-23)





# யங்ஹென்றிஸ் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், செப். 13

அரியாலை சனசமூக நிலையம் நடத்தும் 'யாழின் கில்லாடி' கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் ஐக்கியம் அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி அபார வெற்றிபெற்றது. (ம-23)

# சென். பற்றிக்ஸ் போராடி வெற்றி

யாழ்ப்பாணம், செப். 13

பேராயர் பொஞ்சியன் ஆண்டகை ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக கொழும்பு சென். ஜோசப்கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் 12, 14 வயதுப்பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. 12 வயதுப் பிரிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அபார வெற்றி பெற்றது. 14 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் 4:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

**சரஸ்வதி ச.ச.நி. கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் வருடாந்தம் நடத்தும் 'யாழின் கில்லாடி' கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திக்கம் மத்தியின் கால்பந்துத் தொடர்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணிமோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பை ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**அன்ரனிஸின் கால்பந்தாட்டம்**

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.கே.எஸ்.சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கிழக்கு சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

யாழ்ப்பாணம் மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**ஹொக்கித் தொடர்**

43 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான பெண்களுக்கான ஹொக்கித் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்று விளையாட்டு அமைச்சின் மைதானத்தில் இன்று காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதவுள்ளது. (ம-23)

# சென். ஜோசப் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், செப். 13

பேராயர் பொஞ்சியன் ஆண்டகை ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக கொழும்பு சென். ஜோசப்கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் 16 வயதுப் பிரிவில் சென். ஜோசப் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 3:1 என்ற கோல் கணக்கில் சென். ஜோசப் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)





# ஐக்கியம் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், செப். 13

அரியாலை சனசமூக நிலையம் நடத்தும் 'யாழின் கில்லாடி' கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அரியாலை ஐக்கியம் அணி வெற்றி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# துறையூர் ஐயனார் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 13

புங்குடுதீவு சித்திவிநாயகர் சனசமூக நிலையத்தினதும், சண்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினதும் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் துறையூர் ஐயனார் அணி சம்பியனானது.

சண்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஐயனார் அணியின் வீரன் கோகுலன் முதல் பாதியில் தனது அணியின் சார்பாக 4 கோல்களை அடுக்கினார். கோகுலன் எதிர் சென். ஜேம்ஸ் என்றவாறாக அமைந்தது ஆட்டம். முதல் பாதியின் முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் ஐயனார் அணி முன்னிலை வகித்தபோது முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி 4 கோல்களைப் பதிவு செய்தது. கோகுலன் இரண்டு கோல்களையும், சுபராஜ் இரண்டு கோல்களையும் பதிவுசெய்தனர். சென். ஜேம்ஸ் அணியின் சார்பாக பதிவான கோலை றெமில்டன் பதிவுசெய்தார். முடிவில் 8:1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்று கிண்ணம் வென்றது ஐயனார் அணி. ஆறு கோல்களைப் பதிவு செய்த கோகுலன் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். (ம-23)

# ஐ.பி.எல். அனுபவம் எமக்குச் சாதகமானது

## பல்க்நெர் கருத்து

இந்திய அணியை எதிர்கொள்வதற்கு ஐ.பி.எல். தொடரின் அனுபவம் பெரிதும் உதவும் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பல்க்நெர்.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் பல்க்நெர். "ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடித்துள்ள வீரர்களில் பெரும்பாலானோர் இந்தியாவில் ஐ.பி.எல். தொடரில் விளையாடியவர்கள். இந்த அனுபவம் அவர்களுக்கு உதவியாக இருக்கும். இந்திய அணி சமீப காலமாக ஏராளமான ஒருநாள் ஆட்டங்களில் விளையாடியுள்ளது. தற்போது அவர்கள் நல்ல நிலையில் உள்ளனர். எனவே இந்தத் தொடர் மிகவும் சவாலானது" என பல்க்நெர் மேலும் தெரிவித்தார். (ம)





# ஹிங்கிஸ் - சான் யுங் இணை சம்பியனானது

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் மார்டினா ஹிங்கிஸ் - சான் யுங் இணை கிண்ணம் வென்றது.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் சுவிற்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் மற்றும் தைவானின் சான் யுங் இணை, செக் குடியரசின் லூசி ரடேக்கா மற்றும் கட்ரினா சினியகோவா இணையை எதிர்கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரண்டு செற்களையும் முறையே 6:3, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஹிங்கிஸ் சான் யுங் இணை 2:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றது. (ம)

# டெஸ்ட்டில் இருந்து சகிப் அல் ஹசன் தற்காலிக ஓய்வு

பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரரான சகிப் அல் ஹசன், அடுத்த ஆறு மாத காலத்துக்கு டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து விலகியிருக்கும் முடிவை அறிவித்தார். டெஸ்ட் ஆட்டங்களில் பங்களாதேஷ் அணியின் தூணாக சகிப் அல் ஹசன் உள்ளார். அண்மையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றிபெற்றதில் சகிப் அல் ஹசனின் பங்களிப்பு மிக முக்கியத்துவம் மிக்கதாக இருந்தது. சகலதுறை வீரர்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்திலும் உள்ளார்.

மூன்று வகை ஆட்டங்களிலும் தொடர்ச்சியாக விளையாடி வருகின்ற காரணத்தால் தனக்கு ஓய்வு வேண்டும் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை வைத்திருந்தார். இந்தக் கோரிக்கையை ஏற்றுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அவருக்கு ஆறு மாத காலம் ஓய்வு வழங்கியுள்ளது. (ம)

# மீண்டும் அணியில் மகமதுல்லா

பங்களாதேஷ் அணியில் மகமதுல்லாவுக்கு மீண்டும் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் களமிறங்கவே அவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அணி இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்கு தென்னாபிரிக்காவுக்குச் செல்கிறது. முதலாவது ஆட்டம் எதிர்வரும் 28ஆம் திகதியும், இரண்டாவது ஆட்டம் அடுத்த மாதம் 6ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடருக்கான பங்களாதேஷ் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. சகிப் அல் ஹசன் ஆறு மாதங்கள் ஓய்வு கேட்டுள்ளதால் அவர் அணியில் இடம்பெறவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இடம்பிடித்திருந்த நசிர் கொசைன் சிறப்பாக செயல்படாததால் நீக்கப்பட்டுள்ளார். மொசாடெக் கொசைனின் கண்ணில் ஏற்பட்ட பாதிப்பு இன்னும் சரியாகாததால் அவருக்கு இடம்கிடைக்கவில்லை.

பங்களாதேஷ் அணியின் விவரம் - முஷ்பிகுர் ரகிம் (தலைவர்), தமிம் இக்பால், சவுமியா சர்கர், இம்ருல் கைய்ஸ், சபீர் ரகுமான், மகமதுல்லா, லித்தோன் தாஸ், மெகடி ஹசன், தைஜுல் இஸ்லாம், ரகுமான், ரூபல் கொசைன், சபியுல் இஸ்லாம், தஸ்கின் அகமட், சுபாசிஸ் ரோய், கக்கியூ. (ம)

# மூவகை ஆட்டங்களுக்கும் தலைவரானார் டு பிளாசிஸ்

தென்னாபிரிக்க அணியின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தலைவராகவும் பிளாசிஸ் நியமிக்கப்பட்டார். ஒருநாள் ஆட்டங்களுக்கான தென்னாபிரிக்க அணியின் தலைவராக செயற்பட்டுவந்த வில்லியர்ஸ் கடந்த மாதம் தனது பொறுப்பில் இருந்து விலகினார். அவர் தனக்குப் பின்னர் அணியை வழிநடத்தக் கூடியவராக பிளாசிஸை அடையாளம் காட்டினார். பிளாசிஸ் டெஸ்ட் மற்றும் ரி-20 ஆட்டங்களில் தலைவராக ஏற்கனவே செயற்பட்டு வந்தார். மூன்று வகை ஆட்டங்களுக்கும் தலைமைப் பொறுப்பேற்க தான் தயார் என்றும் அவர் அறிவித்தார்.

பிளாசிஸின் தலைமையில் தென்னாபிரிக்க அணி டெஸ்ட் மற்றும் ரி-20 ஆட்டங்களில் மிகச் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய காரணத்தால் அவரை மூவகை ஆட்டங்களுக்கும் தலைவராக்க தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழு பரிசீலனை செய்தது. இதை ஏற்றுக்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை பிளாசிஸை மூன்றுவகை ஆட்டங்களுக்கும் தலைவராக அறிவித்துள்ளது. (ம)



# மெஸ்ஸியின் 38ஆவது ஹற்றிக்

எஸ்பன்யோல் அணிக்கு எதிராக மெஸ்ஸி பதிவுசெய்த ஹற்றிக் கோல், பார்சிலோனாவுக்காக அவர் பதிவுசெய்த 38ஆவது ஹற்றிக் கோலாக அமைந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பார்சிலோனா அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டத்தின் 26ஆவது, 35ஆவது, 67ஆவது நிமிடங்களில் மெஸ்ஸி கோல்களைப் பதிவுசெய்தார். இந்த ஹற்றிக் கோலே அவரின் 38ஆவது ஹற்றிக் கோலாக அமைந்தது. (ம)



# இந்திய வீரர்களுக்கு சொந்தமாக வானூர்தி

## கபில்தேவின் விருப்பம் இது




இந்திய வீரர்களுக்கு என்று தனியாக வானூர்தியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வாங்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் கபில் தேவ்.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், "இந்திய அணியின் வீரர்கள் தற்பொழுது தொடர்ச்சியாக விளையாடிவருகிறார்கள். அவர்களுக்கு என்று தனியாக ஒரு வானூர்தியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வாங்க வேண்டும். அப்பொழுது ஏகப்பட்ட நேரம் மீதமாகும். வீரர்களுக்கும் உடற்சோர்வு இருக்காது. அமெரிக்காவில் கோல்ப் வீரர்களுக்கு என்று தனியாக வானூர்தி உள்ளது. அதுபோன்ற நிலையை இந்திய அணியின் வீரர்கள் அடைய வேண்டும்'' என கபில் தேவ் மேலும் தெரிவித்தார். (ம)

**பதவி வெற்றிடங்கள்**

சர்வதேச ரீதியில் இயங்கும் எமது பல்தேசிய கம்பனியானது (Dynamic Holdings)தனது கிளைகளை யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கவுள்ளது. O/L படித்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

*அனுபவம் அவசியமற்றது
*வயதெல்லை 18 - 31
*மேற்பார்வையாளர், முகாமைத்துவ உதவியாளர், விற்பனை பிரதிநிதிகள்
*தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.

தொடர்புகள் - 077 230 2795, 021 5679 001

**இலவச ஆங்கில வகுப்பு**

சுன்னாகத்தில்
இலகு முறையில் ஆங்கிலத்தினை கற்பதற்கு
2 நாள் பயிற்சி பட்டறை
14, 15ஆம் திகதிகளில் 9 a.m to 1.00 p.m
முன் பதிவுகளுக்கு - 076 697 3040
021 224 3660
ELAS 124, சுன்னாகம்
DFCC bank, (மேல்மாடி)

IELTS கற்பதுடன் எங்களது
கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
**IELTS**
Full time / Part time
Next exam date in Jaffna. 30th Sep. 2017
idp www. idp.com/srilanka
திருமணம் முடித்து Spouse
விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்
ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி — Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி — Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி — French
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6
British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்



# நடாலுக்கு மட்ரிட் வாழ்த்து

அமெரிக்கப் பகிரங்கக் கிண்ணத்தைக் கைப்பற்றிய ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடாலுக்கு, ஸ்பெய்னின் புகழ் பெற்ற கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட் தனது வாழ்த்தைத் தெரிவித்தது. பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கப் பகிரங்கத் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஸ்பெய்ன் வீரர் நடா்ல் கிண்ணம் வென்றார். இந்தக் கிண்ணம் அவரின் 16ஆவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணமாக அமைந்தது. நடாலுக்கு பல தரப்புக்களில் இருந்தும் பாராட்டுக்கள் குவிந்துவரும் நிலையில் ரியல் மட்ரிட் கழகமும் தனது வாழ்த்தைத் தெரிவித்தது. (ம)

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், வீட்டுப்பெண்கள்,
தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
20 வருடகால ஆய்வின் மூலம் உருவாக்கப்பட்ட இப்பயிற்சியின் மூலம் எவருமே சரளமாக ஆங்கிலத்தில் உரையாடமுடியும்.
3 மாத சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 16.09.2017
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 18.09.2017
1.காலை 08-10 2.காலை 10-12
பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்
SAAMSON Experts in English Training
403,வெலிங்டன் சந்தி யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**தொழிற் பயிற்சிகள்**
Mobile Phone Repairing — காலம் 3மாதம்
Hardware, Software
Electronics — காலம் 10மாதம்
TV, DVD, Radio திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
Air - Conditioning — காலம் 6மாதம்
சகல குளிர்சாதனங்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
குறிப்பு : பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
நிறுவனங்களில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும்.
விவரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
No. 23 பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு: 077 824 9949
கிளை : NEW ASIAN CENTER No. 56/15B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு: 021 221 7474
பயிற்சிகள் ஆரம்பம் : 17.09.2017, 18.09.2017





சனி, ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில்
பாரம்பரிய ஒடியற் கூழில் பிரசித்தி
பெற்றவர்களான
**யாழ்பாடியின்**
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க
இரவு 6.30 - 9 மணிவரை
ஒரே கைப்பக்குவமான வல்லுனர்களால் குழல் புட்டு.
உரலில் இடித்த சம்பல். சொதி மற்றும் றால் பிரட்டல்.
கணவாய் மற்றும் நண்டுக்கறி என்பவற்றை
பெற்றுக்கொள்ள முந்திக்கொள்ளுங்கள்
(எம்மிடம் நிறைவான தங்குமிடவசதி யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உண்டு)
தொடர்பு: யாழ்பாடி
தொ.பே.:075 987 5800/021 222 6868
49,51 - அம்மன் வீதி, நல்லூர்.
Colombo - T.P.:075 653 0348

**வீடு வாடகைக்கு தேவை**
கந்தர்மடம், திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளில் பலாலி வீதிக்கு அண்மையாக சிறிய குடும்பம் ஒன்றுக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு - 076 726 6899, 070 340 0669

**வேலை வாய்ப்பு**
யாழ். நகரில் இயங்கிவரும் எமது ஸ்தாபனத்துக்கு பெண் விற்பனையாளர்கள் தேவை.
அன்னை புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
021 222 9881

## மரண அறிவித்தல்



### சுப்பர் நல்லையா

வராகி அம்மன் கோயிலடி கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பர் நல்லையா நேற்று (12.09.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பர் - லட்சுமி தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக்கணவரும் பிரபாவதி, சறோஜினி, கிருபாகரன் ஆகியோரின் தந்தையும் ரவீந்திரன், ஜெயசீலன், சிவதர்சினி (ஆஷா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பாடசாலை வீதி,**
**ஆறுகால்மடம், கல்திட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

A level's பரீட்சையின் பின்னர்.......
கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவில்
Full / Part time
Diploma in Spoken **English**
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.
Course Fee: Spoken English : 15250/= Diploma in English : 21000/=
COMPUTER COURSES | MS- OFFICE | DIPLOMA | GRAPHIC | WEB
BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 02 -4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. Tel : 081-4949590
13, 1st Chaphel Rd, Colombo-06. Tel : 011-2362775
IELTS Exam Centre
Hot line : 0777-596148
BRITISH COUNCIL IELTS Students Registration Centre

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.